சங்கீத சிகரம்

செங்கோட்டை

எஸ்.ஜி.கிட்டப்பா

செ.திவான்

சங்கீத சிகரம்
செங்கோட்டை எஸ்.ஜி.கிட்டப்பா

தொகுப்பாசிரியர்: செ.திவான்

அஃசரம் பதிப்பகம்

நூல் விளக்கம்

நூலின் தலைப்பு	:	சங்கீத சிகரம் செங்கோட்டை எஸ்.ஜி.கிட்டப்பா
பொருள்	:	வரலாறு
நூலின் ஆசிரியர்	:	செ.திவான், ஆசிரியரின் 102வது நூல் திருநெல்வேலி–627002
வெளியீடு	:	அட்சரம் பதிப்பகம்
மொழி	:	தமிழ்
முதற்பதிப்பு	:	1934
திருத்திய பதிப்பு	:	2017 மார்ச்
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	117
அச்சிட்டோர்	:	மீரா ஃபைன் ஆர்ட்ஸ், சிவகாசி
நூல் வடிவமைப்பு	:	அப்துல் நசீர், நெல்லை
அட்டை வடிவமைப்பு	:	ச.சையது மீரான், சென்னை
விலை	:	ரூ.130/–

என்.ஏ.எஸ்.சிவகுமார்
2/286-14,முத்துசாமி நகர்
பொங்கலூர் அஞ்சல்
பல்லடம் (தாலூகா)
திருப்பூர் மாவட்டம்-641667
கைப்பேசி எண்: 9159659788

சமர்ப்பணம்.....

காலங்காலமாய் இசையெனும்
சமுத்திரத்தில் பயணிக்கும்
சங்கீத மேதைகளுக்கும்
கரிசல் இலக்கியப்பிதாமகர்
கி.ரா.அவர்களுக்கும்

பதிப்புரை

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலிச் சீமைக்குப் புகழ் சேர்த்தவர்கள் எண்ணற்றோர்;

அவர்களில் சங்கீதத் துறையிலும் புகழ் சேர்த்தவர்கள் எண்ணற்றோர் இருந்தார்கள், இருக்கிறார்கள். எதிர்காலத்திலும் வரக்கூடும். ஆனால் செங்கோட்டை ஸ்ரீகங்காதரய்யர் அவர்களின் திருக்குமாரராகப் பிறந்து சங்கீத சிகரமாகத் திகழ்ந்த கந்தர்வ கான எஸ்.ஜி.கிட்டப்பா அவர்கள் புகழின் உச்சிக்கே சென்றவர். அவர்காலத்தில் சங்கீதத்தில் கோலோச்சிய இசைக்கலைஞர்களாலும், அவருக்கு அடுத்த தலைமுறை இசைக்கலைஞர்களாலும், இன்று உள்ள இசைக்கலைஞர்களாலும் ஒருமித்து போற்றிப் புகழப் பெற்றவர் சங்கீத சிகரம் கிட்டப்பா அவர்கள். ஏன் இனிவருகிற தலைமுறையைச் சார்ந்த அனைத்துத் தரப்பினரும் போற்றிப் புகழப்பட வேண்டிய சங்கீத சாம்ராட் ஸ்ரீ கிட்டப்பா பற்றிய இச்சிறுநூலை வெளியிடுவதில் அட்சரம் பதிப்பகம் மிகவும் பெருமை கொள்கிறது.

1934 இல் ஆக்கூர் அனந்தாச்சாரி அவர்கள் எழுதிய ஸ்ரீமான் கிட்டப்பா அவர்களின் ஜீவிய சரித்திரம் என்ற நூலையும் அதனுடன் சங்கீத சிகரம் கிட்டப்பா அவர்களைப்பற்றிய அறிய செய்திகள், கட்டுரைகள், புகைப்படங்கள் அனைத்தையும் இனைத்து அழகுறத் தொகுத்தளித்த பெருமதிப்பிற்குரிய மாமா வரலாற்றியல் அறிஞர் செ.திவான் அவர்கள் நம் அனைவரின் பாராட்டுக்கும் உரியவர்.

என்றும் அன்புடன்
இசைப்பித்தன்
என்.ஏ.எஸ்.சிவகுமார்
அட்சரம் பதிப்பகம்

வாழ்த்துரை

எட்டாத சங்கீத சிகரம் கிட்டப்பா

சங்கீதம் என்று சொன்னாலே நமது நினைவில் முன்னிற்பது தமிழகத்தில் இரண்டு மாவட்டங்கள்தாம். ஒன்று தஞ்சாவூர்; மற்றொன்று திருநெல்வேலி. எனினும், பிறமாவட்டங்களிலோ அல்லது மாநிலங்களிலோ தோன்றிய இசைக்கலைஞர்கள் கூடத் தம் கலையை அபிவிருத்தி செய்து கொள்ளச் சில காலமாவது தஞ்சை மாவட்டத்துக்கு வந்து தங்கிச் செல்வது வழக்கம். ஆனால் திருநெல்வேலி மாவட்டத்துக்குத் தனிப்பெரும் புகழ் சேர்த்தவர்கள் சிலர். அவர்களில், ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், கிட்டப்பா போன்றவர்கள் ஈடிணையற்ற புகழும் தம் மாவட்டத்துக்கு அளவற்ற பெருமையும் சேர்த்தவர்கள்.

கிட்டப்பா அவர்களைப் பற்றிச் சொல்வது அவ்வளவு எளிதான விஷயமன்று. நெல்லை மாவட்டம், செங்கோட்டையில் பிறந்து, மிகச்சிறு வயதிலேயே தம் இனிய குரலால் கேட்டவர் அனைவரையுமே மயக்கியவர். தம் மூத்த சஹோதரர்களுடனே நாடக மேடை ஏறியவர் அவர். அவருடைய குரலுக்கு இணையான குரல் வேறு எவரிடமே இன்றுவரை அமையவில்லை. குரலும் இசைஞானமும் இறைவன் அவருக்கு வழங்கியிருந்த வரப்ரஸாதம். சில காலம் அவருடையை இசைப்பயிற்சி முத்தய்யா பாகவதர் அவர்களிடம் நடைபெற்றது. அவருடைய நாடகங்களுக்காகவே பாகவதர் இயற்றிய பாடல்களும் உண்டு. ஒரு சுவையான சம்பவத்தை பற்றி இங்கே பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். “ஐந்து வயதினிலே அறியாப் பருவத்திலே” என்ற தன் பாடலைக் கிராமபோன் இசைத்தட்டுக்காகப் பதிவு செய்திருந்தார். தன் நாடகத்துக்காகக் கிட்டப்பாவும் பாடம் செய்திருந்தார். சென்னை ஒத்தவாடையில் அவர் இந்தப் பாட்டைக்கேட்ட கிராமபோன் நிறுவத்தினர், அந்தப் பாடலைப் பதிவு செய்து தருமாறு அவரிடம் கோரினர். பாகவதர் அதை முன்பே பதிவு செய்ததை அறியாமல் கிட்டப்பாவும் அப்பாடலைப்பதிவு செய்தார். சில மாதங்கள் கழித்துப் பாகவதர், தங்கசாலைத்தெருவில் ஒரு தங்கும் விடுதியில் தங்கிருந்தபோது, தான் பாடிப்பதிவு செய்திருந்த கிராமபோன் நிறுவத்தினரை அழைத்து வரச்செய்து, “ஏன் இன்னும் தன் பாட்டு வெளிவரவில்லை?” என்று கேட்க எண்ணினார்.

அதற்குள்ளாக அவர்கள், "உங்கள் சிஷ்யன் இதே பாடலைப் பாடி பதிவு செய்து இருக்கிறார்" என்றதும் பாகவதர் ஆச்சரியப்பட்டு, உடனே அதைத் தான் கேட்க வேண்டுமென்று கூறவே, நிறுவனத்தினரும் அதற்குரிய ஏற்பாட்டைச்செய்தனர். கிட்டப்பா பாடியிருந்ததைக் கேட்ட பாகவதர், கண்களில் நீர் மல்கத் தன் பாடலைப் பதிவு செய்திருந்த நிறுவனத்தாரிடம், "நான் பாடிய இசைத்தட்டை வெளியிடவேண்டாம்." என்று சொல்லிவிட்டாராம். இது பாகவதரின் பரந்த உள்ளத்தை வெளிப்படுத்துவது மட்டுமன்றி, கிட்டப்பா அப்பாடலை எத்தனை சிறப்பாகப் பாடியிருப்பார் என்பதை நமக்கு உணர்த்துகின்றது. பாகவதர் அவர்களை நான் சந்திக்கும் வாய்ப்பு பெற்றபோதெல்லாம், "அடடா! நம்ம கிட்டன் மால் மருகன் தந்த சுகம் என்பதை எத்தனை உயர்வான முறையில் பாடியிருக்கிறான்" என்று கூறுவது வழக்கம்.

ஒருமுறை வட இந்திய இசைக்கலைஞர் ப்யாரா ஸாஹிப் என்பவர் தன் இசை வினிகையில் அபூர்வமான ராகம் ஒன்றைப் பாடினாராம். அன்று அந்த நிகழ்ச்சியில் ரசிகர் வரிசையில் அமர்ந்திருந்த கிட்டப்பா, நிகழ்ச்சியின் முடிவில் உள்ளே சென்று அந்த இசைக்கலைஞரை, அன்றிரவு தன் நாடகம் பார்க்க வருமாறு அழைத்தார், கிட்டப்பாவின் குரலைப் பற்றி முன்பே கேள்விப்பட்டிருந்த ப்யாரா ஸாஹிப் அந்த அழைப்பையேற்று, ஒத்தவாடை கொட்டகைக்குச் சென்றாராம். நாடகத்தின் இடையே உரிய சந்தர்ப்பம் வந்தபோது, கிட்டப்பா, ஸாஹிப் அவர்கள் பாடிய அந்த ராகத்தை மிக விரிவாகவும் சிறப்பாகவும் பாடியதைக் கேட்டப்போது, அந்த வடஇந்தியக் கலைஞர் அசந்துபோய் அழத்தொடங்கிவிட்டாராம்.

இப்படி இசை இமயம் கிட்டப்பா அவர்களைப் பற்றிக் கூறிக்கெண்டே போகலாம். அந்தப்பெருமகனாரின் வாழ்க்கை வரலாறு முதன் முதலாக ஆக்கூர் அனந்தாச்சாரி என்பவர் மிகச்சிறப்பாக எழுதியிருந்தார். அதை ஆதாரமாகக் கொண்டும், வேறு பல அரிய செய்திகளையும் தொகுத்தளித்த வரலாற்றியல் அறிஞர் செ.திவான் அவர்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலை வெளியிடும் என் அன்பு இளவல் திரு.என்.ஏ.எஸ்.சிவகுமார் அவர்கள், இசையுலகத்துக்கு செய்துவரும் சேவை மகத்தானது. இது போன்ற அவருடைய சேவை தொடர்ந்துகொண்டிருக்க வேண்டும் என்பது என் அவாவும், வேண்டுகோளுமாகும்.

முனைவர் தஞ்சாவூர் பி.எம். சுந்தரம்

என்னுரை

அடியேன் பள்ளி மாணவனாக இருந்தபோது தினமும் வகுப்புகள் ஏழு, இதில் மூன்றாம், நான்காம் வகுப்புகள் நடைபெறும் வேளையில் எனது தாயார் செ.காசினம்மாள் என்னை பள்ளிக்கூடத்திற்கு வந்து அழைத்து, இந்தா உங்க அத்தாவிடம் (நா.செய்யது மசூது) போய் பார்டரில் உள்ள படேல் சாமில்லில் (மரம் அறுக்கும் மில்) இந்த சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு வந்துவிடு என்பார்.

எனது பள்ளி பருவத்தில் தினமும் ஏழு வகுப்புகளில் இரண்டு வகுப்புகள் கட். தினசரி செல்ல வேண்டும்.

சித்திரை மாதம் நல்ல கோடை, பயங்கர வெயில், செங்கோட்டை அக்ரஹாரத்தைக் கடந்து செல்ல வேண்டும். அங்கு பாணக்காரம் (புளியும் கருப்பட்டியும் கலந்த கலவை) மோர் பானை பானையாக வைக்கப்பட்டு யாத்ரீகர்களுக்கு வழங்கப்படும். (இப்போது அதெல்லாம் இல்லை) அப்போது செங்கோட்டை கீழபஜார் ரோட்டிற்கு வடபுறம் கிட்டப்பா வாசகசாலை என்ற போர்டு தொங்கும் உள்ளே சென்று பத்திரிக்கைகளைப் புரட்டுவேன். யார் இந்த கிட்டப்பா கேள்வி எழும். அவர் பெரிய சங்கீத மேதை. ஏழரைக்கட்டை எட்டுக்கட்டைக்கு பாடுவார். அவர் மாதிரி பாட முடியாது. நடிக்க முடியாது என்பார்கள். சிறிய வயதில் கிட்டப்பா குறித்த விதை இவ்வாறு உள்ளத்தில் விழுந்தது.

பண்பொழிக்கு மேற்கே திருமலைக்குமாரசாமி திருக்கோயில் பிரசித்திபெற்றது. அதற்கு தெற்கே 1 1/2 கி.மீட்டரில் எனது ஊரான செங்கோட்டை ரயிலடி விசுவநாதபுரத்திலிருந்து 5 மைல் (8 கி.மீ.) தூரத்தில் தென்பொத்தை பஞ்சாயத்துக்கு நேர் மேற்கே **இரப்பங்காடு** என்ற பகுதியில் எனது றாறா (தாத்தா) நாகூர் பிச்சை ராவுத்தரின் துணைவி றாறி (பாட்டி) திவான் பீவியின் நஞ்சை, புஞ்சை நிலங்கள் உண்டு. விடுமுறை நாட்களில், வேளாண் பருவ வேளைகளில் எனது பாட்டி என்னை அங்கு அழைத்துச் செல்வார். பேருந்துகள் அதிகம் ஓடாத காலம். காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளில் மட்டுமே பஸ்கள் வரும். எனவே விளை நிலங்களுக்குச் சென்றால் சிலவேளை வீடு திரும்புவது பாதயாத்திரையாக இருக்கும். 'இரப்பங்காடு' விளைநிலங்கள் எனது பாட்டி காலத்திலே தோப்பாகமாரத் துவங்கியது.

அடியேனும் அவருடனும் எனது தந்தையாருடனும் அடிக்கடிச் செல்லுவேன். விவசாயப் பணிகளில் எனக்கு ஆர்வம். ஒருநாள் தோப்பிலிருந்து திரும்பி கால்நடையாக வரும்போது பண்பொழி விலக்கில் (தென்காசியிலிருந்து திருமலைக் கோவிலுக்கு வரும்வழி அது செங்கோட்டை வழியாக வரும் வழி அல்ல) ஒரிரு கார்கள் செல்கின்றன. யார் என்று ஆவலுடன் கேட்கிறேன். கொடிமுடி கோகிலம் கே.பி.சுந்தராம்மாள் தான். பண்பொழியிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ள திருமலைக்குமாரசுவாமி கோயிலுக்குச் சென்றுவிட்டு, பண்பொழியில் உள்ள இன்னொரு கோயில் திடலில் கச்சேரி நடத்துவார்கள் என்றார்கள்.

ஏன் செங்கோட்டை வழியாக வரவில்லை; இப்படி சுற்றிக்கொண்டு வருகிறார்கள் என்று கேட்டேன். கே.பி.சுந்தராம்மாளின் கணவர் கிட்டப்பாவின் ஊர் செங்கோட்டை அவரை அவர் வாழ்ந்த காலத்தில் அவரது உறவினர்கள் போற்றவில்லை; மதிக்கவில்லை. **எனவே செங்கோட்டை ஊரிலே எனது காலடி படக்கூடாது என்பதால்** இந்த ஊர் வழியாகக்கூட கே.பி.சுந்தராபாள் வரமாட்டார் என்றார்கள்.

பண்பொழியில் அறியாப் பருவத்தில் அவர் கச்சேரி கேட்டுள்ளேன். கே.பி.சுந்தராம்பாள் குறித்தும் உள்ளத்தில் பாலக வயதில் விதை விழுந்தது. அது இன்று விருட்சமாகி, அட்சரம் பதிப்பகம் கண்ணியத்திற்குரிய மாமா திரு.என்.ஏ.எஸ்.சிவகுமார் அவர்கள் முயற்சியால் சிறு நூலாக வெளிவருகிறது. மறைந்த இசைமேதை எஸ்.ஜி.கிட்டப்பா குறித்து நூல்கள் ஏதேனும் வந்துள்ளனவா என்று தேடினேன். 1934இல் ஆக்கூர் அனந்தாச்சாரி எழுதி இரண்டனாவிலையில் வெளிவந்த 53 பக்கங்களைக் கொண்ட, திருவல்லிக்கேனி மதறாஸ் ஹிந்தி பிரசார பிரஸில் அச்சிடப்பட்ட நூலை அப்படியே தந்துள்ளேன். அதில் எந்த மாற்றத்தையும் செய்திடவில்லை. அதற்கு எனக்கு உரிமையும் இல்லை.

எஸ்.ஜி.கிட்டப்பா குறித்தும் கே.பி.சுந்தராம்பாள் குறித்தும் அந்த நூலில் இல்லாத செய்திகளை மாத்திரம் தேடியெடுத்து அடியேனது தொகுப்பில் தருகிறேன்.

எளியோன் வாழ்வதற்காக எழுதவில்லை
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்

ரெகான் சுலைமான் இல்லம்,
106F, 4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை, நெல்லை

செ.திவான்

அமர இசைவாணர்களின் அமரக் குரல்கள் எங்கே?

செங்கோட்டை கங்காரத அய்யர் கடைக்குட்டி கிட்டப்பா ஜீவிய சரிதம் ஆக்கூர் அனந்தாச்சாரி பலநாள் கேட்டு இருக்கிறேன், பார்த்தது இல்லை. அப்பேர்ப்பட்ட கிட்டப்பா ஜீவிய சரிதம் கிட்டாமல் மறைந்து புதைந்து போய் இருந்த மாபெரும் இசை நாடக சக்கரவர்த்தியை திருவாளர் செ.திவான் அவர்கள் நுண்மான் நுழைபுலம் போல் வரலாற்று நூல்களின் ஆய்வறிஞரும் விளாத்திகுளம் சுவாமிகளுக்கு ஒரு தனி நூலை கொண்டு வந்த பல்லடம் என்.ஏ.எஸ்.சிவகுமார் நல்லிசை ஆய்வாளர்; இசை விரும்பி; பாடகருமான இருவரும் தன்னலம் கருதாமல் பண நலம் பாராமல் மகா இசை மேதையை மீண்டும் தமிழ் கூறும் இசை இதயங்களுக்கு அளிப்பது தமிழ் கூறும் நல் இதயங்கள் வாழ்த்தி வரவேற்பதுபோல் அவர்களில் யானும் வாழ்த்தி வரவேற்கிறேன். வானொலி ஆரம்ப காலத்தில் ''வானொலி'' என்னும் பத்திரிகை சுமார் 1976வரை வந்துள்ளது என எண்ணுகின்றேன். அன்னாளில் விற்பனையில் ஆறாவது இடம் பெற்றது. அவ்விதழ்களில் இந்தத் தேதியில் இந்த நேரத்தில் பழம்பெரும் பாடகர்கள் கச்சேரி மற்றும் அவர்கள் பாடிய இசைத்தட்டுகள் ஒலிபரப்பப்பட்டு வந்தது.

பின்னாளில் இப்பேர்பட்ட இசைவாணர்களின் பாடல்கள் நமது தமிழ்நாட்டு வானொலியில் ஒலிபரப்பினார்களா என்றால் அது கேள்விதான். சரி ஆரம்பத்தில் ஒலிபரப்பிய இவ்விசை மேதைகளின் பாடல்கள் அந்தக் களஞ்சியங்களில் இப்போது இருக்கிறதா? அதற்கு பதில், அழிந்துவிட்டது; எரிந்துவிட்டது; காணாமல் போய்விட்டது.

1990 களில் இலங்கை வானொலி ஒலிபரப்பு ஸ்தாபனத்தில் வியாழன் இரவுகளில் இன்றைய நட்சத்திரம், குரல்வகை எனும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பு செய்வார்கள். அதில் ஏகதேசமாக இந்த அமர இசைவாணர்களின் அமர குரல்களை அன்று நினைவில் பதியவைத்த இலங்கை வானொலிக்கு நன்றிக் கடன்பட்டோர் பலர். இந்நூலின் நாயகர் பாடிய பாடல்களை வரிசைப்படுத்தலாம். இப்போது அவ்வரிசையில் சந்தையில் கிடைக்கும் பாடல்கள் எத்தனை? ஏதோ ஒரு பத்து, பன்னிரண்டு வரிசையில் நிற்கும். மற்றபடி பாடல்கள் எங்கு மறைந்தது? நம் தமிழ்நாட்டு வானொலிகளை நம்பினால் பயன் கிட்டாது. தகவல் ஊடகங்கள், பத்திரிகைகள் வாயிலாக பல இசைக் களஞ்சியங்கள் எங்களிடம் உள்ளது என பேட்டி கொடுக்கின்றனர். ஆனால் இதைக் கேட்கும் இசை உள்ளங்களை ஏங்க வைத்து அனுப்பிவிடுகின்றனர். இது நிதர்சனம்!

நல்ல தமிழ் இசையும் இலக்கியங்களும், வறண்ட இதயம் உள்ளவர்களிடம் சிக்கி அழிந்து கொண்டு வருகிறது. இது தமிழ் செய்த துரதிர்ஷ்டம் எனலாம். ஆகவே வியாபார நோக்கமின்றி இருப்பதை இசைவிரும்பிகளின் இதயத்தை மகிழ்விக்க அமர இசைவாணர்களின் குரல்களை வெளிக்கொணர நல் இதயங்களை வேண்டுகின்றோம்.

இசை ஆர்வலர் பழனி சோ.பாலு

கிட்டப்பாவின் அறிமுகம்:

நாகசுர சக்கரவர்த்தி திருவாவடுதுறை டி.என். இராஜரத்தினம் பிள்ளை வரலாறு என்ற நூல் ப.சோழநாடனால் வெளியிடப்பபட்டது. நிழல் பதிப்பகம் 2005 டிசம்பரில் வெளியிட்ட 119 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் பக்கம் 50, 51, 52 இல் கிட்டப்பா குறித்து வந்துள்ள செய்தி இதோ;

நாடக மேடையில் இசைமழை பொழிந்து வந்த எஸ்.ஜி.கிட்டப்பா பல நாட்கள் இராஜரத்தினம் பிள்ளையுடன் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தருணத்தை எதிர்பார்த்து வந்தார். அதற்கேற்றாற்போல் 1925ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் திருச்செந்தூரில் நாதசுரக் கச்சேரிக்குச் சென்றபோது, திருநெல்வேலிப் புகைவண்டி நிலையத்திலுள்ள ஸ்பென்சர் அறையில் மணி சர்மா, திருநெல்வேலி ருத்ரம் பாகவதர், தளவாய்ப் பொன்னையா முதலியோ ரால் கிட்டப்பாவுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். கிட்டப்பா இறக்கும் வரை இருவரும் நெருக்கமான நட்புடன் இருந்தனர்.

திருநெல்வேலி ஜில்லாவில் ஓர் ஊரில் ஓர் ஊர்வலத்திற்குச் சென்றிருந்தேன். என் மனைவி சாரதாம்பாளையும் அழைத்துப் போயிருந்தேன். சங்கீத வித்வான், காலஞ்சென்ற ஸ்ரீ எஸ்.ஜி. கிட்டப்பா ஐயரும் என்னுடனிருந்தார். ஸ்ரீ கிட்டப்பா அவர்களுக்கு பெண் கொடுத்த மாமனார் வீட்டில் ஜாகை இரவு பாளையங்கோட்டையல் ஒரு பணக்காரர் வீட்டில் என் கச்சேரி இரவு 8 மணிக்கு ஊர்வலம் கிளம்பியது. இரவு ஒரு மணி வரை தான் வாசிப்போம், என்றுபேசி 'அட்வான்ஸ்' வாங்கியிருந்தேன். ஒரு மணி ஆயிற்று, இரண்டு மணி; மூன்று மணி; கல்யாண வீட்டுக்காரர் விடவில்லை. எனக்கு உதவி நாதஸ்வரம் வாசிக்க வந்த எனது மருமகன் நடராஜ சுந்தரத்தையும் என் தவில்காரர்களையும் பார்த்து ஊர்வலத்தை வீட்டில் கொண்டுபோய் விட்டு விடுங்கள் என்று சொல்லிவிட்டு நான் காரில் ஏறி வீரராகவபுரம் (திருநெல்வேலி) போய்ச் சேர்ந்து கிட்டப்பா ஐயரை எழுப்பிப் பேசி கொண்டிருந்தேன். விடிய ஒரு நாழிகை இருக்கும். பாளையங்கோட்டையிலிருந்து ஓர் ஆள் வந்து என்னிடம், உதவி வாத்தியக்காரர், தவில்காரர் எல்லோரையும் ஒரு வீட்டில் போட்டுக் கலியாணக்காரர்கள்

பூட்டிவிட்டார்களென்று சொன்னார். ஒரு 'நிமிஷம் பொறு' என்று மோட்டார் வண்டியை எடுத்துக் கொண்டு போனார் கிட்டப்பா ஐயர். சிறிது நேரங்கழித்து ஒரு லாரி நிறையப் போலீஸ், ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் உள்பட என்னிடம் வந்து என்னை காரில் ஏறச்சொன்னார்கள். உடனே பாளையங்கோட்டை சென்றோம். கலியாணக்காரர் ஓடி ஒளிந்துவிட்டார்.

இதற்குள் எங்கள் மனிதர்களும் ஒரு விபரம் சொன்னார்கள். உடனே கலியாணக்காரரை போலீஸார் கொண்டு வந்து சேர்த்தனர். அவர் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டார். எங்களுக்குப் பேசிய பணத்தைவிட அதிகமாக ரூபாய் ஆயிரம் கிடைத்தது என்பார் நாகசுர சக்ரவர்த்தி திருவாவடுதுறை டி.என். இராஜரத்தினம் பிள்ளை.

விடுதலை இயக்கத்தில் தமிழகக் கலைஞர்கள் என்னும் நூலினை கலைமாமணி கருப்பயைா 1994இல் 122 பக்கங்களில் தந்துள்ளார். அதில் பக்கம் 100, 101இல் கந்தர்வ கான எஸ்.ஜி.கிட்டப்பா என்று அவர் எழுதியது இதோ;

கந்தர்வ கான எஸ்.ஜி.கிட்டப்பா

அவர் மிக இளம் வயதில் இசை பயின்றார். அவர் சங்கரதாஸ் சுவாமிகளிடம் நாடகப் பயிற்சி பெற்று, கன்னையா நாடகக் குழுவில் ஏராளமான நாடகங்களில் நடித்தார்.

தமது தெய்வீகப் பேரிசையால் சங்கீத மாகவித்வான் களையெல்லாம் தம் வசம் ஈர்த்தவர் எஸ்.ஜி.கிட்டப்பா.

தேசியத் தொண்டர்கள்

எஸ்.ஜி.கிட்டப்பாவும் கே.பி.சுந்தராம்பாளும் நாடக உலகில் புகழ்பெற்று விளங்கினர் என்பதை அனைவரும் அறிவர். திரு.கிட்டப்பா எப்போதும் தூய கதராடை அணிந்து, காந்திக் குல்லாவுடன் காட்சி அளிப்பார். (1921 முதல்)

இசைப்புயல்

அவரும் சுந்தராம்பாளும் கதாநாயகன் – கதாநாயகியாகத் தோன்றிய நாடகங்களில் தேசியப் பாடல்களைப் பாடுவர்.

கிட்டப்பா பல தேசியப் பாடல்களைப் பாடியிருக்கிறார். அவற்றில்,

'வந்தே மாதரமே
வாழவுக்கோர் ஆதாரமே'

என்ற பாடல் மிகவும் முக்கியமானதாக விளங்கியது. விடுதலை இயக்கம் நடைபெற்றபோது இந்தப் பாடல் மக்களைப் பெரிதும் கவர்ந்தது, தேச பக்தி உணர்வை ஊட்டியது.

1973ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் அவரது திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து, அவருக்கு உரிய விருதுப் பரிசினை அவரது வாரிசு வசம் அளித்துச் சிறப்புச் செய்தது.

பாஸ்கரதாசன்

இசைஞானப் பேரொளி பத்மஸ்ரீ கே.பி.சுந்தராம்பாள் எனும் நல்ல நூலினை பாஸ்கரதாசன் 2008இல் 248 பக்கங்களில் விரிவாக வெளியிட்டுள்ளார். அதில் இசைமேதை கிட்டப்பா குறித்து பல பக்கங்களில் அரிய விஷயங்களைத் தந்துள்ளார். இதோ அதில் சில பகுதிகள் அப்படியே,

கிட்டப்பா

கடலையும் வானத்தையும் கடவுள் ஒரு கணக்குப் போட்டுத்தான் படைத்திருக்க வேண்டும். ஆணையும் பெண்ணையும் ஆண்டவன் ஒரு கணக்குப் போட்டுத்தான் சிருஷ்டித்திருக்க வேண்டும். சுந்தராம்பாளையும் கிட்டப்பாவையும் கூட இறைவன் ஒரு கணக்குப் போட்டுத்தான் அவதாரம் அளித்திருக்க வேண்டும், இல்லையென்றால் கொங்கு நாட்டிற்கும், செங்கோட்டைக்கும் முடிச்சுப் போட்டு எப்படி ஒரு திருவிளையாடல் நடத்தியிருப்பான்?

கிட்டப்பாவின் முழுப்பெயர் செங்கோட்டை கங்காதரய்யர் கிட்டப்பா. திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலுக்கா ஆழ்வார்குறிச்சியில் 1906ம் வருடம் ஆவணி 10ம் தேதி (ஆகஸ்ட் 25) விடியற்காலை 2.30 மணிக்கு கங்காதரய்யருக்கும், மீனாட்சி அம்மையாருக்கும் பிறந்தவர் எஸ்.ஜி. கிட்டப்பா. கிட்டப்பாவின் இயற்பெயர் இராமகிருஷ்ணன்.

கங்காதரய்யரின் குடும்பம் வறுமையிலும், பெருமையாய் தள்ளாடித் தவித்தது. வறுமையும் புலமையும் இரட்டைக் குழந்தைகள் தானே!

கங்காதர அய்யரின் வருமானம் குடும்பத்திற்கு போதுமானதாக இல்லை. அவர் பிள்ளைகள் பாடி பிழைப்பை நடத்திக் கொண்டிருந்தார்கள். கிட்டப்பாவின் அண்ணன்கள், எஸ்.ஜி. சுப்பையர், அப்பாத்துரை, எஸ்.ஜி.செல்லப்பா, எஸ்.ஜி.காசி அய்யர் ஆகியோர் நாடகத்துறையில் ஈடுபட்டனர். இவர்கள் எல்லோருமே சங்கரதாஸ் சுவாமிகள் நாடகக் குழுவில் நடித்து வந்தனர்.

எஸ்.ஜி.காசி அய்யர் ஹார்மோனியம் வாசிப்பதில் மிகவும் கெட்டிக்காரரர், இவர்களோடு சேர்ந்து கிட்டப்பாவும் தனது ஐந்தாவது வயதிலேயே நடிக்கத் தொடங்கினார். ஆறாவது வயதில் நல்லதங்காள் நாடகத்தில் ஏழு பிள்ளைகளில் ஒருவராக நடித்தார்.

கிட்டப்பா நாடகத்தின் இடைவேளைகளில் தன் இஷ்டப்படி பாடிக்கொண்டிருந்தார். அது கேட்பவரைக் கவர்ந்தது. அதைக் கேட்ட நாடகக் குழுவினரை நாடகத்திலும் பாட அனுமதித்தனர். காரணம் அந்த சிறு வயதிலேயே உச்ச ஸ்தாயியில் பாடும் கலைமகளின் அனுக்கிரகம் பெற்றிருந்தார். அவரது சாரீரம் இனிமை நிறைந்ததாக இருந்தது. சங்கீத ஞானம் குறைவாக இருந்தது. ஆனால் சங்கீத ஞானம் எவ்வளவு இருந்தாலும் சாரீரம் சரியில்லையென்றால் சங்கீதம் சங்கட கீதமாக ஆகிவிடும்.

அந்த சிறு வயதிலேயே, ‘ஈராறு காதிலே’ என்று சுப்பிரமண்ய பதிகத்தை இனிமையாக எளிமையாகப் பாடினார் கிட்டப்பா.

எஸ்.ஜி.சுப்பையர், தன் தம்பிமார்களுடன் நாடக் குழுவோடு இலங்கை சென்றார். அங்கும் எஸ்.ஜி.கிட்டப்பா தன் திறமையை வெளிப்படுத்தினார். அதிகம்பீரமான குரலிசையில் அனைவரையும் தன் பக்கம் கவர்ந்தார். கிட்டப்பாவின் இசைஞானத்தையும் சங்கீதத் திறமையையும் பாராட்டி இலங்கையில், இந்திய வியாபாரிகள் சங்கத்தின் சார்பாக திவான்

பகதூர் பி.கேசவப் பிள்ளை, ஸ்ரீமான் கிட்டப்பாவிற்கு தங்கப் பதக்கமும் நற்சாட்சிப் பத்திரமும் வழங்கி வாழ்த்தினார்.

இலங்கையில் நாடகத்தை முடித்துக் கொண்டு கிட்டப்பா சகோதரர்கள் 1914இல் தாயகம் திரும்பி வந்தார்கள்.

அப்போது சென்னை மாகாணத்தில் சி.கன்னையா நாயுடு நாடகக் கம்பெனி முகாமிட்டிருந்தது. அந்தக் கம்பெனியில் கிட்டப்பா சகோதரர்கள் சேர்ந்தனர். கன்னையா கம்பெனியின் ஸ்ரீ வள்ளி நாடகத்தில் கிட்டப்பா நாரதராக நடித்தார். நாரதராக மேடையில் தோன்றிய கிட்டப்பா, 'ஸங்கல்பமே' என்ற கீர்த்தனையை அற்புதமாகப்பாடி சென்னைவாசிகளை கவர்ந்தார். அப்போது அவருக்கு வயது பதினான்கு.

கன்னையா நாயுடு நாடகக் கம்பெனியில் பெரும்பாலும் ஆண்களே பெண் வேடமணிந்து நடித்து வந்தார்கள். முதன் முதலாக அக்கம்பெனியில் பெண் வேடத்தில் நடிகை ராஜலட்சுமி நடித்தார். இதில் கிட்டப்பா ராமராகவும், ராஜலட்சுமி சீதையாகவும் நடித்தார்கள். அதற்கு முன் மதுரை சி.எஸ்.சாமண்ணா அய்யரின் நாடகக் கம்பெனியில் நடித்துக் கொண்டிருந்த ராஜலட்சுமிக்கு சங்கரதாஸ் சுவாமிகள் தான் அங்கு நடிக்க சிபாரிசு செய்தார்.

1920–ல் கிட்டப்பாவிற்கு பதினைந்தாவது வயதில் பூணூல் கல்யாணம் நடந்தது.

1921 முதல் காங்கிரசில் பெரும் பக்தி கொண்டிருந்தார். அந்த வகையில் கிட்டப்பா, தீரர் சத்தியமூர்த்தியுடன் தொடர்பு கொண்டிருந்தார். சத்தியமூர்த்தியும் ஒரு நாடக நடிகர். பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய 'மனோகரா' நாடகத்தில் டி.கே. சண்முகம் மனோகரனாக நடித்தார். அதே சுகுணாவிலாஸ் நாடக சபாவில் காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தியும் மனோகரனாக நடித்திருக்கிறார். ஆகவே அவர் ஒரு சிறந்த கலாரசிகராகவும் இருந்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை.

சென்னை வால்டாக்ஸ் தியேட்டரில் கிட்டப்பாவின் நாடகம் நடக்கின்ற போதெல்லாம் சத்தியமூர்த்தி தவறாமல் ஆஜராகிவிடுவார்.

காந்தியவாதியான பிரபல பாடகர் மகாராஜபுரம் விஸ்வநாத அய்யரும் சத்தியமூர்த்தியுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார்.

சென்னை ராயல் தியேட்டர் வாசலிலும், வால்டாக்ஸ் தியேட்டர் முன்பும் அனுதினமும் ரசிகர்கள் கூட்டம் நிரம்பி வழியும், நாடகம் ஆரம்பமாவதற்கு பல மணி நேரத்திற்கு முன்பே பலர் வந்து காத்துக் கிடப்பார்கள்.

கிட்டப்பாவின் அசாத்தியமான திறமையும், அற்புதமான சங்கீத ஞானமும், ஏராளமான ரசிகர்களை உருவாக்கியது. கிட்டப்பாவின் பாட்டைக்கேட்க பைத்தியமாக அலைந்தார்கள். வேலை வெட்டியை விட்டு நாடக கொட்டகையில் தவம் கிடந்தார்கள். ‘கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும்‘, ‘கண்ட மணி ஆடுது’, ‘நல்லோர் இருக்குமிடம்‘, போன்ற பாட்டுக்களை கிட்டப்பா மெட்டுக் கட்டிப் பாடினால் நாடகக் கொட்டகையில் ஊசி விழும் சப்தம் கூட கேட்கும். அந்த அளவிற்கு மகுடிக்கு மயங்கும் நாகம் போல கிட்டப்பாவின் பாட்டுக்கு கட்டுண்டு கிடந்தார்கள்.

சீர்காழி சிவசிதம்பரம்

கிட்டப்பா நாடகத்தில் தோன்றி ‘எவரடி’ என்று (தியாகராஜ கீர்த்தனை) பாடும்போது அவரது கம்பீரமான எடுப்பைக் கண்டுகளித்தவர்களும் உண்டு கலங்கியவர்களும் உண்டு. செம்மங்குடி, சீனிவாச ஐயர், மகாராஜபுரம் விஸ்வநாதஐயர்,அரியக்குடிராமானுஜ ஐயங்கார்போன்றவர்கள், ‘இவன் கச்சேரிக்கு வந்தால் நம் நிலை என்னாகும்’ என்று பேசிக்கொள்வார்களாம். அந்த அளவிற்கு கிட்டப்பாவின் பாட்டில் ‘எடுப்பு’ இருக்கும்.

‘எல்லோரையும் போல் எண்ணலாகுமோ’ என்ற பாடல் இசைத் தட்டை இன்றே கேட்க வேண்டும் என்று எம்.ஜி.ஆர். அவர்கள் சீர்காழி சிவசிதம்பரத்திடம் கேட்க, அவரும் அன்று மாலையே தேடிப் பிடித்து கொடுத்துவிட்டார். அந்த அளவிற்கு ‘எல்லோரையும் போல் எண்ணலாகுமோ?’ என்ற பாடல் எல்லோரையும் கிட்டப்பாவை எண்ண வைத்த பாடல்.

கிட்டப்பா பாடிய கீரவாணி ராகத்தை கேட்டு மயங்கி நயினார் பிள்ளை, கையில் அணிந்திருந்த கடகத்தைக் கழற்றிக் கொடுத்துவிட்டு, நீ பாடிய கீரவாணி ராகத்திற்கு என்னால் முடிந்த பரிசு இவ்வளவு தான் என்று சொன்னாராம்.

கே.ஜே.யேசுதாஸ்

கே.ஜே.யேசுதாஸ் அவர்களின் தந்தையார் கிட்டப்பாவின் தீவிர ரசிகர்.

கிட்டப்பாவின் ரசிகர்கள் தங்கள் பெயரை சுந்தரப்பா, மருதப்பா, செல்லப்பா, குட்டப்பா என்று வைத்துக் கொண்டு அலைந்தார்கள். வியாபாரிகளோ கிட்டப்பா மிட்டாய், கிட்டப்பா மார்க் சுருட்டுகள், கிட்டப்பா மார்க் புகையிலை என்று பெயர் வைத்துக் கொண்டு அலைந்தார்கள். விற்று லாபமடைந்தார்கள்.

கிட்டப்பாவைப் போல் பாடுபவர்கள் எவருமில்லை என்ற வகையில் கிட்டப்பா எட்டாத இடத்தில் இருந்தார். தன் அளவிற்கு உச்ச ஸ்தாயியில் இணையாகப் பாடக்கூடிய ஸ்திரீபார்ட் இல்லையென்ற மன வருத்தம் கிட்டப்பாவிற்கு இருந்து வந்தது. அவரோடு சுதி சேர்த்து பாட முடியாமல் பெண் பாடகிகள் திண்டாடினார்கள்.

1924- ம் ஆண்டு ஜூன் 23-ம் நாள், சென்னை தண்டையார் பேட்டையில் ஸ்ரீ கிட்டப்பாவிற்கும், திருநெல்வேலி விசுவநாத அய்யரின் புதல்வி கிட்டம்மாளுக்கும் திருமணம் நடந்தது.

மகாராஜபுரம் விஸ்வநாத அய்யர், செம்மங்குடி சீனிவாச அய்யர், முத்தையா பாகவதர் போன்ற சங்கீத மேதைகள் நேரில் வந்து மணமக்களை வாழ்த்தினார்கள். கிட்டப்பாவிற்கு நாடகமே முதல் மனைவியாக இருந்தது. கிட்டம்மாளுக்கு இல்லற ஞானம் இருந்ததே தவிர சங்கீத ஞானம் இல்லை. அதனால் தடையேதும் சொல்ல வில்லை.

நாடக நடிகர்கள் பலருக்கு குடிப்பழக்கம் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது. சிலருக்கு வெற்றிலை, புகையிலை பழக்கம் இருந்தது. சிலர் கைக்குட்டையில் பாக்கை முடிந்து வைத்துக் கொண்டு போடுவார்கள்.

இப்படிப்பட்ட பழக்கங்களை கன்னையா நாயுடு அறியாதவரல்ல. கிட்டப்பாவும் மது அருந்தும் பழக்கம் இல்லாதவர் அல்ல. அதனால் கன்னையா நாயுடு, ஸ்ரீ கிட்டப்பாவை தீய பழக்கங்களில் செல்லாமல் இருக்க வேண்டிவிசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டார்.

அவர் கம்பெனி நாடகம் நடக்கும்போது 'புகை, சுருட்டு பிடிப்பவர்கள், மது அருந்துபவர்கள் எமது நாடகங்களைப் பார்க்க அனுமதிக்க மாட்டார்கள்' என்று அறிவிப்பு பலகை நாடகத் தியேட்டர் முன்பு வைக்கப்பட்டிருக்கும். மிகுந்த பொருட் செலவில் கண்கவர் காட்சி ஜோடனைகள் செய்து பிரமிக்கச் செய்வார்.

அங்கு கிட்டப்பா சங்கீத ஜாம்பவனாக இருந்தார். அவரை தரிசிக்க கூட்டம் அலை மோதியது. கன்னையா நாயுடு நாடகக் கம்பெனி மிகவும் பிரபலமடைந்தது. அதனால் விரைவிலேயே கன்னையா நாயுடு பெரிய செல்வந்தராகிவிட்டார்.

யார் கண்பட்டதோ, 1926 தொடக்க காலத்தில் இருவருக்கும் சிறு மனத்தாங்கல் ஏற்பட்டுவிட்டது. அதன் காரணமாக ஸ்ரீமான் கிட்டப்பாவும், காசி அய்யரும் மற்ற சகோதரர்களும் கன்னையா கம்பெனியிலிருந்து விலகிக் கொண்டார்கள்.

அதன் பிறகு கிட்டப்பாவும், காசி அய்யரும் ஸ்பெஷல் நாடகங்களில் நடிக்க இலங்கைக்கு பயணப்பட்டார்கள்.

குழலும் யாழும் சந்தித்த போது

இலங்கை வந்து ஸ்பெஷல் நாடகங்களில் நடித்துக் கொண்டிருக்கும் கே.பி.சுந்தராம்பாள் வெண்கல மணி ஓசை போன்ற தன் இனிய சாரீரத்தினால் அங்கு அளவிலா கீர்த்தியும் புகழும் பெற்றிருந்தார்.

கே.பி.சுந்தராம்பாள் நாடகமென்றால் கூட்டம் அலைமோதியது. தனது இனிய குரல் வன்மையால் இலங்கை வாழ் தமிழர்களைப் பரவசமடையச் செய்தார். இந்த அளவிற்கு உச்சஸ்தாயியில் பாடி அவர்கள் கேட்டதில்லை. அவரைப் போல குரலை உயர்த்திப் பாடக்கூடியவரும் இல்லை.

சுந்தராம்பாளுடன் ராஜபார்ட்டாக நடிக்கும் ஆண் நடிகர்களால் அவரோடு இணைந்தும் ஈடு கொடுத்தும் பாட முடியவில்லை. அவர்களை கலாரசிகர்கள் ஆரவாரம் செய்து கேலி பண்ண ஆரம்பித்தார்கள். சுந்தராம்பாளுடன் நடிக்கும் நடிகர்களுக்கு நல்ல பெயர் கிடைப்பதில்லை. அதனால் சிலர் அவரோடு பாடவும் நடிக்கவும் அச்சப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சுந்தராம்பாளும் தனக்கு இணையாக உச்ச ஸ்தாயியில் பாடக்கூடிய 'ராஜபார்ட்' சரியாக அமையாததால் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்.

இலங்கை வந்து சேர்ந்த கிட்டப்பா, அங்கு சுந்தராம்பாள் தன் வசீகரக் குரலால் கலக்கிக் கொண்டிருப்பதைக் கேள்விப்பட்டார். உடனே அவரது நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்து விடுவதென்று கிட்டப்பா முடிவு செய்தார்.

சுந்தராம்பாளின் ஓங்காரமான ரீங்கார நாதத்தைக் கேட்ட கிட்டப்பா கதிகலங்கி, மதி மயங்கி கிறுகிறுத்துப் போனார். என்ன சங்கீத ஞானம், என்ன சுகமான சாரீரம், என்ன தெய்வீகமான குரல் என்று துதிபாட ஆரம்பித்தார். நமக்கு இணையாகப் பாடக்கூடிய வல்லபி இவர்தான் என்று முடிவு செய்துகொண்டார்.

கிட்டப்பா சுந்தராம்பாளை சந்திக்கிறார். ஏற்கனவே கிட்டப்பாவின் மகிமையைக் கேள்விப்பட்டிருந்த சுந்தராம்பாள் நேரில் பார்த்ததும் காந்தத்தின் வட துருவமும், தென் துருவமும் சந்திப்பதைப் போல் ஈர்க்கப்படுகிறார்.

இருவருமே புகழ்பெற்ற பாடகர்கள். இருவருமே உச்ச ஸ்தாயியில் பாடக்கூடியவர்கள். இருவருமே தங்களுக்கான இசை ஜோடியை தேடிக் கொண்டிருந்தவர்கள். எனவே இருவரும் ஒரு நாடகத்தில் நடிப்பதென முடிவு செய்தனர்.

சங்கீத ஜாம்பவான் என்று புகழப்படும் கிட்டப்பாவிற்கு இணையாக பாட வேண்டுமே என்ற பயம் சுந்தராம்பாளுக்கும், உச்ச ஸ்தாயியில் பாடும் சுந்தராம்பாளுக்கு ஈடு கொடுத்து பாட வேண்டுமே என்ற அச்சம் கிட்டப்பாவிற்கும் இருந்தது.

இருவரும் சேர்ந்து நடித்த நாடகம் இலங்கையில் அரங்கேறியது. எட்டுக்கட்டை சுருதியில் பாடும் கிட்டப்பாவை

யாரும் எட்டாத நிலையில் சுந்தராம்பாள் அதே சுருதிலயத்தோடு தொட்டுவிட்டார். அவர் மனதையும் தொட்டுவிட்டார்.

சுந்தராம்பாளுக்கு இணையாக நடித்த ராஜபார்ட்டுகளை மதிக்காத கலா ரசிகர்கள், சுந்தராம்பாளோடு உச்சஸ்தாயியில் ஒன்றிப்போன கிட்டப்பாவின் சங்கீத ரசனையில் மூழ்கித் திளைத்தார்கள்.

ஜோடிப் பொருத்தம்

ஓங்கிக் குரலெடுத்து இருவரும் பாடினால் ஒரு மைல் தூரத்திற்கு கேட்கும் என்று பெருமையாக சொல்லிக் கொண்டார்கள். கிட்டப்பாவும் சுந்தராம்பாளும் சேர்ந்து நடிக்கிறார்கள் என்றால் ரசிகர்களின் கூட்டம் கட்டுக்கடங்காது.

சுந்தராம்பாள் உடல் மெலிந்து காணப்பட்டார். ஆனால் கிட்டப்பா பூசினாற்போல சற்று பருத்து காணப்பட்டார். கிட்டப்பா சிவந்த மேனியுடையவர். சுந்தராம்பாள் அதற்கு நேர் மாறானவர். மேக்கப் போட்டுக் கொண்டு இருவரும் வள்ளி வேடன் வேலனாக நடித்தால் வள்ளியையும் வேலனையும் நேரில் பார்த்ததைப் போல் ஜோடிப் பொருத்தம் பிரமாதமாக இருக்கும்.

சுந்தராம்பாளும் கிட்டப்பாவும் போட்டி போட்டுக் கொண்டு நடித்தார்கள். ஒருவரை ஒருவர் சீண்டிவிடுவதும், அதற்கு எதிர்பாட்டு சொல்லி சமாளிப்பதும் நாடக ரசிகர்களுக்கு நல்லதொரு விருந்தாக அமைந்தது. இருவரும் நல்ல ஜோடி என்று அவர்கள் காதுபட வாழ்த்திப் பேசினார்கள். உற்சாகப்படுத்தி ஆரவாரம் செய்தார்கள்.

இலங்கைக்குச் சென்ற சில மாதங்களிலேயே இசைமேதைகள் இருவரும் புகழின் உச்சியில் பறந்தார்கள். வானம்பாடியாய் இசை வானில் பாடித் திரிந்தார்கள். ஈடு இணையற்ற ஜோடி என நிரூபித்துக் காட்டினார்கள்.

நாடகத்தில் பணம் மழையாகக் கொட்டியது. கிட்டப்பாவின் அண்ணன், “ மலைக்கொளுந்து கவுண்டரே இருவரும் இப்படியே ஜோடி சேர்ந்து நடிக்கட்டும். அப்பொழுது

தான் நாடகத்தில் வசூல் அதிகமாக இருக்கும். நாமும் காசு பார்க்க முடியும்" என்று சொல்லிவைத்தார்.

இருவரும் பல இடங்கள் பயணம் செய்து நாடகங்கள் நடித்து ஏராளமாகச் சம்பாதித்தார்கள். கிட்டப்பா மீது சுந்தராம்பாள் அபரிமிதமான பக்தியும் விசுவாசமும் கொண்டிருந்தார்.

இருவரும் சேர்ந்து நடிப்பதென்றால், நாடக கம்பெனிகள் பெரிய தொகையைக் கொட்டித்தர தயாராக இருந்தனர். அதற்கு கட்டணமாக ரசிகர்களும் அள்ளித்தர ஆர்வமாக இருந்தனர்.

எவ்வளவு பணம் வந்தாலும் கிட்டப்பா அனாயசமாக செலவழிப்பார். செலவு செய்த பணத்திற்கு கணக்குக் கேட்கமாட்டார். ஆனால் மலைக்கொளுந்து அப்படி அல்ல; காசு பணத்தில் மிகுந்த கருத்துடையவர். இந்த விசயத்தில் மலைக்கொளுந்திற்கும் கிட்டப்பாவிற்கும் சில சமயம் கருத்து வேறுபாடு ஏற்படுவதுண்டு.

கிட்டப்பா இலங்கை வந்து சில மாதங்களுக்குள் அவருக்கு ஒரு பெரிய துயரச் செய்தி வந்தது. செங்கோட்டையில் அவரது தாயார் காலமாகிவிட்டார் என்பதே அத்துயரச் செய்தி.

கிட்டப்பா சகோதரர்கள் தாயகம் திரும்பினார்கள். தாயாரின் ஈமச்சடங்குகள் முடியும் வரை சொந்த ஊரிலேயே தங்கி இருந்தார்கள்.

இசையில் மயங்கிய கிட்டப்பா

தாயாரின் காரியங்கள் முடிந்தகையோடு, கிட்டப்பா கொழும்பு புறப்பட்டுச் சென்றார்.

பிரிந்தவர்கள் கூடினால் அன்பு அதிகமாகுமன்றோ? அதிகமான அன்புடன் நாடகத்தில் மீண்டும் ஒரு முறை வலம் வந்தார்கள்.

சுந்தராம்பாளின் இசையில் மயங்கிய கிட்டப்பா, சுந்தராம்பாளிடம் மயங்கி அன்பு கொண்டார். நாடகத்திற்கு மட்டுமல்ல, இல்லறத்திற்கும் சுந்தராம்பாள்தான் சரியான ஜோடி என கிட்டப்பா திட்டவட்டமாக இருந்தார்.

கலைவாழ்கையில் உள்ள உறவும் பரிவும் சுந்தராம்பாளின் வாழ்க்கையிலும் இருந்தது. ஸ்ரீமான் கிட்டப்பாவையே தனது வாழ்க்கைத் துணையாக சுந்தராம்பாள் முடிவு செய்து கொண்டார்.

இந்த முடிவு தாய்மாமனான மலைக்கொளுந்திற்கு உடன்பாடாக இல்லை, அதில் உள்ள சங்கடங்களைச் சொல்லிப்பார்த்தார்.

சதிபதிகளின் கலைப்பயணமும் வாழ்க்கைப் பயணமும் ஆரம்பத்தில் இனியதாகவே போய்க் கொண்டிருந்தது.

வாழ்க்கையில் ஒருவர்க்கு ஒருவர் விட்டுக் கொடுத்துக் கொண்டாலும் நாடக மேடையில் இருவரும் விட்டுக் கொடுக்காமல் போட்டி போட்டுக்கொண்டே பாடுவார்கள். மேடையில் அவர்கள் ஊடலும் பூசலும் நீண்டு கொண்டே செல்லும். ரசிக்கும் ரசிகர்கள், இந்த ஊடலும் பூசலும் அவர்கள் வாழ்க்கையிலும் வந்துவிடக்கூடாது என்று கவலைப்பட்டார்கள். சில சமயம் நாடகத்தில் இல்லாத வசனங்களை சூழ்நிலைக்கேற்ப மேடையிலே பேசிக்கொள்வார்கள்.

ஒருசமயம் தூக்குத்தூக்கி நாடகம் நடந்து கொண்டிருந்தது. அதில் கிட்டப்பாவிற்கு சேட் வேஷம். சுந்தராம்பாள் அவருக்கு ஜோடியாக நடிக்கின்ற பாத்திரம். சேட்டாக நடித்த கிட்டப்பா, வழக்கம்போல் பேச வேண்டிய வசனத்தை மறதியாக சுந்தர தமிழில் பேசிவிட்டார். உடனே சுந்தராம்பாள், "என்ன சேட், தமிழில் தாராளமாகப் பேசுகிறீர்களே எப்படி?" என்று வேண்டுமென்றே கேட்டு வைத்தார்.

தன் தவறை உணர்ந்து கொண்ட கிட்டப்பா சட்டென்று சமாளித்துக்கொண்டு, "என்ன செய்வது, உன்னோடு சேர்ந்ததால் உன் அழகான தமிழைக் கேட்டு கேட்டு எனக்கும் சுத்தமான தமிழ் பேச வந்துவிட்டது" என்றார். நாடகம் பார்ப்பவர்கள் பலர் இது நாடகத்தில் வரும் வசனம் என்றுதான் நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

விளையாட்டாக நினைத்துப் பேசிக்கொண்டிருப்பது சில சமயம் வினையாகவும் ஆகிவிடுவதுண்டு.

ஒரு முறை 'ஞானசௌந்தரி' என்ற நாடகம் அரங்கேறியது. அந்த நாடகத்தில் ஞான சௌந்தரியாக சுந்தராம்பாளும், பிலேந்திரனாக கிட்டப்பாவும் நடித்தார்கள்.

ராஜாவின் மகளான ஞானசௌந்தரியை, அவரது சித்தி லேனாள் சூழ்ச்சி செய்து கொலை செய்யத் திட்டமிட்டு காட்டிற்கு கூட்டிச் சென்று அங்கு கொலைகாரர்களை ஏற்பாடு செய்கிறார். கொலைகாரர்கள் மனமிரங்கி ஞானசௌந்தரியின் கைகளை மட்டும் வெட்டி எடுத்து விட்டு லேனாளிடம் கொன்றுவிட்டதாகச் சொல்லி விடுகிறார்கள். வேற்று நாட்டு அரசனான பிலேந்திரன் சௌந்தரியை அனுசரணையுடன் காப்பாற்றுகிறான்.

கன்னி மேரியின் அருளால் ஞானசௌந்தரி கைகளைத் திரும்பப் பெறுகிறாள்.

அந்தக் காட்சியில் கைகளை இழந்த ஞானசௌந்தரியாக சுந்தராம்பாள் பாட வேண்டிய வரிகள் ஞாபகத்திற்கு வரவில்லை. உடனே கிட்டப்பாவை அந்த வரியை எடுத்துக் கொடுக்குமாறு சுந்தராம்பாள் ஜாடையாகக் கேட்கிறார். அவர் ஜாடையாகவே, "நீயும் தானே நடிப்பதற்கு பணம் வாங்குகிறாய். அடியேன் ஏன் அடியெடுத்துத் தர வேண்டும்?" என்று சொல்லிவிடுகிறார். இது விளையாட்டாகத்தான் சொன்னார் என்று சுந்தராம்பாளுக்கு தெரியவில்லை. இருப்பினும் மேடையில் என்ன செய்வது? முருகா! என்று வேண்டிக் கொண்டு கண்களைமூடி வேதனையுடன் கையை பிசைந்து சிந்தித்தார். ஞாபகத்தில் வந்துவிட அடுத்த நொடியில் 'வெட்டுண்ட கைகள் வேதனையாகி' என்று கணீரென்று பாட ஆரம்பித்தார்.

இராகம்: பியாகடை **தாளம் : ஆதி**

பல்லவி

வெட்டுண்ட கைகள் வேதனையாகி
மிகவும் மிறங்களித்தோம் *(வெட்)*

அனுபல்லவி

வெட்டுண்ட காட்டில் தவிக்கிறேன் ஐயோ
தலைவிதியோ தெய்வமே.... தெய்வமே.... தெய்வமே....

சரணம்

பார்க்கேன் ஆரையுங்க காணேம் ஆதரிப்பீர்
மனதிலாகி என் தெய்வமே.... தெய்வமே
விதிவழி யல்லால் சிற்றன் னையாலே
ரத்தம் ஒழுகியோட வேதனையாகி
தெரிந்தல்லோ தெய்வமே
தெய்வமே.... தெய்வமே..... தெய்வமே (வெட்)

காட்சி முடிந்து உள்ளே வந்ததும் சுந்தராம்பாள் கிட்டப்பாவிடம், “அவசரத்திற்கு அடியெடுத்துக் கொடுக்க மறுத்து விட்டீர்களே... இன்னும் கொஞ்சம் நேரத்திற்கு நினைவிற்கு வரவில்லையென்றால் இந்த சிலோன் மக்கள் கூட்டத்திற்கு முன் என் நிலை என்ன ஆகும்“ என்று கேட்கிறார்.

“ஒன்றும் ஆகிவிடாது. இந்த சிலோன்காரன் என்னைவிட உன்னைத்தானே அதிகமாக சிலாகித்து எழுதுகிறான்” என்று கிட்டப்பா விளையாட்டாகச் சொன்னாலும், இந்த ஊடல் சில சமயம் சங்கடத்தை ஏற்படுத்தியதுண்டு.

கிட்டப்பா வெற்றிலை போடும் போது சுந்தராம்பாளுக்கும் கொடுப்பார். வாய் நன்றாகச் சிவந்தால் தான் நல்ல கணவன் அமைவான் என்று சொல்லிவைப்பார்.

கிட்டப்பா காங்கிரசில் ஈடுபாடு கொண்டவர். சுந்தராம்பாளும் காங்கிரசில் ஈடுபாடு உடையவர். அதோடு மலைக்கொளுந்து கவுண்டரும் ஒரு காங்கிரஸ்காரராக இருந்தார். கிட்டப்பா சுந்தராம்பாளிடம் தீராத காதல் கொண்டிருந்தார். ஆனால் கிட்டப்பா ஏற்கனவே திருமணமானவர் என்பதால் இரு குடும்பத்தினரும் இதை ஆதரிக்கவில்லையென்றே தெரிகிறது. எனினும் சுந்தராம்பாள் எல்லா வகையிலும் கிட்டப்பா கொள்கையோடு ஒன்றிப்போயிருந்தார்.

மது போன்ற பழக்கங்கள் கிட்டப்பாவிடம் இருந்ததால் தாராளமாக செலவு செய்து கொண்டிருந்தார். அதுவும் அவரே செலவு செய்ய மாட்டார். மற்றவர்களிடம் கொடுத்து தனக்கு

செலவு செய்யச் சொல்லுவார். ஆனால் சுந்தராம்பாள் காசு விசயத்தில் கராறாக இருப்பார். இந்த முரண்பாடும், உடன்பாடும் அவர்களுக்குள்ளே இருந்து வந்தது.

1927 ஆகஸ்ட் 28-ல் கிட்டப்பாவின் அண்ணன் ஸ்ரீ அப்பாத்துரை அய்யர் இறந்துவிட்டார் என்று செய்தி வந்தது. அவரது மரணச் செய்தி கேட்டு கிட்டப்பா மனமுடைந்து போனார். தாயார் இறந்து ஒன்னரை ஆண்டு காலத்தில் தமையனாரும் காலமாகிவிட்ட வேதனை கிட்டப்பாவை பெருமளவிற்கு பாதித்தது.

தன் மீது அன்பும் அதிகாரமும் செலுத்தி ஆட்கொண்டிருந்த தாயும் தமையனும் மறைந்து விட்டார்கள். தன்னை கட்டுப்பட வைத்த கன்னையாவும் உடன் இல்லை. இந்த இழப்பின் வேதனை ஒரு பக்கம் வாட்டியெடுக்க, அதை விரட்டியடிக்க நினைத்து மதுப்பழக்கத்தில் கிட்டப்பாவை மேலும் ஈடுபட வைத்தது.

இலங்கையிலிருந்து திரும்பிய பின் கிட்டப்பா தனியாக நாடகம் நடத்தினார். சுந்தராம்பாள் இல்லாமல் அவரால் சோபிக்க முடியவில்லை. அப்போது திருநெல்வேலியில் தங்கியிருந்த சுந்தராம்பாள் வீட்டிற்கு வந்தார், பேசினார். தனக்கு இணையாகப் பாடும் சுந்தராம்பாள் தன்னோடு இருக்க வேண்டும் என்று விரும்பினார். அவர் விருப்பமும் நோக்கமும் சுந்தராம்பாளுக்குத் தெரியாமலில்லை. கிட்டப்பாவுக்கு சுந்தராம்பாளை மறக்க முடியவில்லை. சுந்தராம்பாளும் கிட்டப்பாவின் மீது உள்ளூர அன்பு செலுத்தி வந்தார். கிட்டப்பாவிடம், "என்னை கடைசிவரை கண்கலங்காமல் வைத்துக் கொள்வீர்களா?" என்று கேட்டார். "கடைசி வரை கைவிட்டு விடக்கூடாது" என்று சத்தியமும் வாங்கிக் கொண்டார்.

மாயவரம் கோயிலில் திருமணம்

அதன் பின்பே, கலைப் பயணத்தில் ஜோடி சேர்ந்த சுந்தராம்பாளும் கிட்டப்பாவும் வாழ்க்கைப் பயணத்திலும் ஒன்று சேர்ந்தார்கள். சுந்தராம்பாள் ஸ்ரீமான் கிட்டப்பாவை தன் மானசீக கணவனாக ஏற்றுக்கொண்டார். 1927 தொடக்கத்தில்

மாயவரத்தில் உள்ள கோயிலில் திருமணம் செய்து கொண்டதாக சுந்தராம்பாள் ஒரு பேட்டியில் சொல்லியுள்ளார் என்பார் பாஸ்கரதாசன்.

மாயவரம் ஆனந்தாண்டவர் ஹாலில் ஆடம்பரமின்றி திருமண விழா நடந்தேறியது.

அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து எங்க கல்யாணம் நடக்கலை! ரிஜிஸ்தர் மேரியேஜ் செய்துக்கலை! ஆனால், அதுக்கெல்லாம் மேலாக ஈசனருளுடன் நடந்தது எங்கள் திருமணம். ஜன்மாந்தரத் தொடர்பு என்பாங்களே, அதைத் தான் சொல்லணும்.

யார் கண்பட்டதோ, அவர்கள் அன்பிலும் பாசத்திலும் சிறுகீறல் உண்டானது. செங்கோட்டைக்குச் சென்ற கிட்டப்பா அடிக்கடி வருவதில்லை. கடிதமே எழுதினார். கிட்டம்மாவுடன் கிட்டப்பா இருந்தாலும் சுந்தராம்பாள் அதற்காக பொறாமைப்படவில்லை என்பதும் அதே சமயம் அவர்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட சஞ்சலமும் சங்கடமும் அவர்கள் எழுதிய கடிதம் மூலம் தெரிகிறது.

திரு.பாஸ்கரதாசன் சோழ நாடன் நூலிலிருந்து எடுத்த கடிதங்கள் இதோ;

ஸ்ரீமான் கிட்டப்பாவிற்கு ஸ்ரீமதி சுந்தராம்பாள் ஒரு உருக்கமான கடிதம் எழுதினார்.

கரூர், நவம்பர் 1927

அன்புள்ள பதி அவர்களுக்கு அடியாள் அநேக நமஸ்காரம். என்னிடம் நேரில் சொன்னபடி நடப்பதாகத் தெரியவில்லை. நான் செய்த பாக்கியம் அவ்வளவுதான். உங்கள் மீது வருத்தப்படுவதில் பிரயோசனமில்லை. தாங்கள் பார்த்துச் செய்வதென்றால் செய்யலாம். 'வளைகாப்பு' இட வேண்டுமென்று தங்களிடம் சொன்னேன். தங்கள் அண்ணாவிடமும் சொன்னேன். ஒருவரும் கவனிக்கவில்லை. என்னைப் பற்றி கவனிக்க ஏதாவது கொடுத்து வைத்து இருக்கிறேனா? உங்களுடைய சுகதுக்கங்களில் பாத்தியப்படும் தன்மையில் தான் இருக்கிறேனா? நான் இங்கும், நீங்கள் அங்கும் இருக்கும் நிலையில் நீங்கள் ஏன் கவனிக்கப் போகிறீர்கள். ஏதோ என்மீது இவ்வளவு அன்பு வைத்து

தவறாமல் எழுதியதைப் பற்றி அளவு கடந்த சந்தோஷமடைகிறேன். தவறாமல் கடிதமாவது அடிக்கடி எழுதிக் கொண்டிருக்க வேண்டும் என்று அன்போடு நமஸ்கரித்துக் கொள்கிறேன்.

எது எப்படியிருந்தாலும் தங்கள் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவும். தங்கள் உடம்பு இளைத்தால் தங்களைத் திட்டமாட்டேன். கிட்டம்மாளைத்தான் திட்டுவேன் என்று அவளிடம் சொல்லுங்கள். அடிக்கடி வெளியில் சுத்த வேண்டாம். தூக்கம் முழிக்க வேண்டாம். காலா காலத்தில் சாப்பிடவும். அனாவஸ்ய விசயங்களில் புத்தியை செலவிடவேண்டாம். நானும் அப்படியே நடக்கிறேன். மாதமும் ஆகிவிட்டது. தங்களுக்குத் தெரியாதது அல்ல. அவ்வளவு தான் நான் எழுதலாம். நேரில் வாருங்கள். உங்களை என்ன செய்கிறேன் என்று பாருங்கள்.

இப்படிக்கி,
தங்கள் அன்பையே ஆபரணமாகக் கொண்ட
அடியாள் சுந்தரம்

1928 ஜனவரி *19* தை மாதம் வியாழக்கிழமை, கே.பி.சுந்தராம்பாளுக்கு அழகான ஒரு ஆண் குழந்தை பிறக்கும் போது அழுத குழந்தை அழுதுகொண்டே இருந்தது. ‘பிறக்கும்போதும் அழுகின்றான் இறக்கும்போதும் அழுகின்றான்’ என்று கவியரசு கண்ணதாசன் பின்னாளில் பாடியது மிகப் பொருத்தமாக இருந்ததென்பது தெரிந்தது.

பிறக்கும்போது அழுத குழந்தை பத்து நாளாக இறப்பதற்காகவே அழுததோ என்னவோ பதினோராவது நாள் அழுகையை நிறுத்திக் கண்களை மூடிவிட்டது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்று நம்பிக்கையுடன் இருந்த வேளையில் கைக் குழந்தையும் வெகுநாள் ஜீவித்திருக்கவில்லை. மனம் உடைந்து தனிமரமாய் தவித்து நின்றார் சுந்தராம்பாள்.

குழந்தை இறந்து ஆறுமாதமாகிவிட்டது. மீண்டும் கிட்டப்பாவிற்கு கடிதம் எழுதுகிறார்.

கரூர், 13.7.28

தேவரீர் அவர்கள் திவ்ய சமூகத்திற்கு சுந்தரம் அநேக நமஸ்காரம். குத்தலாம் போய் அருவியில் அடிக்கடி ஸ்நானஞ் செய்ய வேண்டாம். நான்

நேரில் சொன்ன விசயங்கள் ஞாபகமிருக்கட்டும். நீங்கள் நன்றாயிருந்தால் தான் எங்களுக்குச் சந்தோஷம். இதுகளையெல்லாம் யோசித்து நடக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இதுவரை எப்படியிருந்தாலும் இந்த ஏழையுடைய லெடர் கண்ட பிறகாவது ஒரு மாதிரி ஒழுங்காய் நடப்பீர்களென்று நம்புகிறேன். பிறகு உங்கள் இஷ்டம்.

இப்படிக்கு தங்கள் அன்பை

கே.பி.சுந்தராம்பாள்

காலம் எவ்வளவு விரைவில் சுந்தராம்பாளையும் கிட்ப்பாவையும் சேர்த்து வைத்ததோ அவ்வளவு விரைவாக பிரித்து விளையாடியது. கிட்டப்பாவின் பிரிவை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதை வெளிப்படுத்தி கிட்டப்பாவிற்கு மீண்டும் கடிதம் எழுதினார்.

பர்த்தா அவர்களுக்கு, அடியாள் அதிக மன வருத்தத்துடன் எழுதியது. தாங்கள் எழுதிய லெட்டரைப் பார்த்து என்மனம் பெரிதும் வருத்தமடைகிறது. நான் இந்த வயதிலேயே இந்த மாதிரி கஷ்டங்களை அனுபவிக்க ஈசன் என் தலையில் எழுதினான் போலும்! உலகத்தில் என்போல அபாக்கியவதியான பெண் ஒருவருமே இல்லை என்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். எப்பொழுது நான் மனம் மகிழ்வேனோ தெரியவில்லை. ஆதியில் இருந்து நம்மிருவருடைய வாழ்க்கைக்கு இரு தரத்தாராலேயும் அநேக இடஞ்சல் ஏற்பட்டது. யாருடைய விரோதம் எனக்கு ஏற்பட்டாலும் சரி, இனிமேல் தங்களை என் ஆயுள் பிரியந்தம் ஒரு நிமிஷமேனும் பிரிந்து உயிருடன் இருக்க மாட்டேன். இது சத்தியம். இதுவரையிலும் தான் உங்களைப் பிரிந்திருந்தேன் என்றாலும் இனிமேலுமா நான் பிரிந்திருக்க வேண்டும்? எல்லாம் தெரிந்த தங்களுக்கு நான் அதிகமாய் ஒன்றும் எழுத வேண்டியதில்லை.

இப்படிக்கு

தங்கள் அன்பை என்றும் மறவாத காதலி

கே.பி.சுந்தராம்பாள்

கிட்டப்பாவிடமிருந்து நல்ல பதில் வரும் என்று பல காலம் எதிர்பார்த்துக் காத்திருந்தார் சுந்தராம்பாள். கிட்டப்பாவிடமிருந்து நல்லதொரு பதில் வரவில்லை. மீண்டும் சுந்தராம்பாள், கிட்டப்பாவிற்கு கோபமானதொரு கடிதத்தை எழுதுகிறார். இதோ அந்தக் கடிதம்;

தேவரீர் அவர்கள் சமூகத்திற்கு எழுதியது. தங்கள் லெட்டர் கிடைத்துச் சங்கதி தெரிந்தேன். தங்களுக்கு நான் எந்த வகையிலும் துரோகம் செய்தவளல்ல. மனதில் ஒன்று வாக்கில் வேறொன்று வைத்துப் பேசக்கூடியவளல்ல. தாங்கள் அறிந்து கிண்டல் வார்த்தைகளை எனக்கு எழுதவேண்டாம். இந்த மாதிரி எழுதி என் மனம் கொதித்தால் தங்கள் ரொம்ப காலத்திற்கு க்ஷேமமாக இருப்பீர்கள்! அம்மாதிரியெல்லாம் எழுதினால் தங்களுக்கு பலன் மீளாத நரகக் குழிதான். கிருஷ்ணலீலா பார்த்ததில்லையே என்று பார்க்கப் போனேன். அதைப் பற்றி வித்தியாசம் என்றால் இருக்கட்டும். எத்தனையோ வித்தியாசத்தில் இதுவும் ஒன்று. மனம் போலிருக்கும் வாழ்வு. என்னைப் பற்றி கவலையே தங்களுக்கு வேண்டாம். நான் இப்படியெல்லாம் எழுதினேன் என்று வருத்தம் வேண்டாம். தங்களுக்கு பதில் போட இஷ்டம் இருந்தால் எழுதவும். இல்லையென்றால் வேண்டாம். இதுதான் கடைசீ லெட்டர். இதுதான் கடைசீ. இதுதான் கடைசீ. இது உண்மையென்றும் பொய்யென்றும் பின்னால் தெரியும்.

இப்படிக்கு
சுந்தரி

சுமார் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கடிதம் எழுதினார் கிட்டப்பா. தன் அன்பானவர் கடிதம் எழுதியதைக் கண்டு சுந்தராம்பாள் புளகாங்கிதம் அடைந்தார். கொடுமுடியில் இருந்த சுந்தராம்பாள் ஸ்ரீமான் கிட்டப்பாவிற்கு, தன் மனஸ்தாபங்களை மறந்து, ஆசையில் ஓர் கடிதம் வரைந்தார்.

கொடுமுடி, 24.8.1930

அன்பார்ந்த பதி அவர்கள் திவ்ய சமூகத்திற்கு சுந்தராம்பாள் அநேக நமஸ்காரம். தாங்கள் எழுதிய அன்பார்ந்த கடிதம் கண்டு நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. நீங்கள் எழுதிய ஒவ்வொரு வார்த்தைகளையும் வேதவாக்யமாக எடுத்துக் கொண்டேன். அதன்படியே இருக்கிறேன். என் துரையே! இன்னும் எத்தனை யுகம் வேண்டுமென்றாலும் நான் தங்களை விட்டுப் பிரிந்திருப்பேன். அதைப்பற்றி வருத்தமில்லை. நான் கொண்டிருக்கும் தொழிலானது உங்களை பிரிந்திருப்பது எனக்கு எவ்வளவு பயமாயிருக்கிறது என்பது கடவுளுக்குத்தான் தெரியும். எவ்வளவு நல்ல வழியில் நடந்தாலும் நீங்கள் இல்லாததால் ஒவ்வொருவரும் 'நீ என்ன இருந்தாலும் நாடக்காரி தானே!' அவர்தான் உன்னை விட்டுப் போய் விட்டாரே! நீயேன் இன்னும் அவரையே நினைத்திருக்க வேண்டும்? என்று சொல்லும் வார்த்தையானது இனி நான் உலகிலிருந்து என்ன பயன் என்ற முடிவுக்கு கொண்டு வந்து விடுகிறது.

நான் ஏன் உலகில் இருக்க வேண்டும்? இறந்தால் நலம், என் அன்பார்ந்த பர்த்தாவாகிய தாங்கள் இருக்கும்போது என்னை இம்மாதிரி உலகத்தார் பேசுவது முறையா? கடவுளுக்குத்தான் கண் இல்லையா? கண்ணா இம்மாதிரியெல்லாம் என்னை அபகீர்த்திக்கு ஆளாக்க வேண்டாம். என்னை மன்னியுங்கள். நான் எவ்விதமான குற்றங்கள் செய்திருந்தபோதிலும் என்னை மன்னிக்கவும். ஆனந்த சாகரத்தில் மூழ்கும் நாளை எதிர்பார்க்கிறேன்.

நான் வீட்டிலும் நாடகத்திலும் படும் அவஸ்தை கடவுளுக்கு தான் தெரியும். தங்கள் தேகத்தை பத்திமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

அலக்ஷியமாய் இருக்க வேண்டாம். உங்களை நம்பிக் கொண்டிருக்கும் என்னைக் கைவிட்டு விடாதீர்கள். சுவர் வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும். உடம்பை நன்றாய் கவனித்துக் கொள்ளுங்கள். இன்னும் உங்களுக்கு நான் அதிகம் எழுத வேண்டாம். ஏதோ நான் எழுதியதில் குற்றமிருந்தாலும் அதை மன்னிக்கவும். இந்த லெட்டர் கண்டதும் உடனே பதில் எழுதவும்.

இப்படிக்கு

தங்கள் அன்பை ஆயுள் பரியந்தம் மறவாத,

கே.பி.சுந்தராம்பாள்

மீண்டும் 1931–ல் கிட்டப்பாவும் சுந்தராம்பாளும் இணைந்து விட்டார்கள். அவர்கள் பெயரிலேயே ஒரு நாடகக் கம்பெனியை ஆரம்பித்தார்கள். ராஜா ராணியைப் போல் மீண்டும் கலையுலகில் பவனி வர ஆரம்பித்தார்கள். பல ஊர்களுக்கு பயணம் செய்து நாடகம் நடத்தினார்கள்.

“ரகுபதி ராகவ ராஜாராம்”

கே.பி.சுந்தராம்பாளும், கிட்டப்பாவும் திருவனந்தபுரம் மற்றும் கேரள நாட்டில் பல இடங்களிலும் சென்று நாடகம் நடத்தினார்கள். ஈரோடு, திருச்செங்கோடு, சேலம் ஆகிய நகரங்களில் நாடகங்கள் நடத்தினார்கள். மதுரையில் கே.பி.சுந்தராம்பாள், கிட்டப்பா நாடகம் நடக்கின்றபோது முன்பதிவு செய்து கொண்டு நாடகம் பார்த்தார்கள். டிக்கெட் கிடைக்காதவர்கள் ஏமாந்து நின்றார்கள். அவர்களை எல்லாம் எங்கள் கோவலன் நாடகத்திற்கு வாருங்கள் என்று மற்ற கம்பெனிக்காரர்கள் கூப்பிடுவார்கள். நாடகங்களிலும், தவறாமல்

தேசியப் பாடல்களைப் பாடுவார்கள். தேசியப் பாடல்களுக்கு தடைவிதிக்கப்பட்ட காலத்தில் பாரதியாரின் தேசிய கீதங்களை சுந்தராம்பாள் மேடைதோறும் பாடிவந்தார். கிட்டப்பா கதர் உடையுடுத்தி தலையில் காந்தி குல்லா அணிந்திருப்பார். நாடக முடிவில் சுந்தராம்பாளும், கிட்டப்பாவும் காந்திஜியின் "ரகுபதி ராகவ ராஜாராம்" பாடுவார்கள்.

மதுரை, திருச்சி, கும்பகோணம் ஆகிய நகரங்களிலும், தொடர்ந்து நாடகம் நடத்தி வந்தார்கள். அப்போது திருச்சி கும்பகோணம் முனிசிபாலிட்டி நீதிமன்றம் ஒரு வழக்குப்பதிவு செய்தது. தேசியப்பாடல்கள் பாடும் சுந்தராம்பாள், கிட்டப்பா இருவரையும் கைது செய்யவும் திட்டம் தீட்டப்பட்டது.

சிலரின் முயற்சியால் வழக்கை கோர்ட்டுக்குக் கொண்டு போகாமல் முடித்துக் கொண்டனர்.

1932இல் எஸ்.ஜி. கிட்டப்பா நடித்த ஸ்ரீவள்ளி நாடக நோட்டீஸ் ஒன்று "தேசியப்பாடல்கள் பாடப்பட மாட்டாது" என்று வாக்கு மூலத்தைக் கொடுக்கிறது. கடுமையான தணிக்கை நாடக மேடையில் இருந்ததால் இத்தகு அறிவிப்புகள் தேவைப்பட்டிருக்கலாம். எஸ்.ஜி.கிட்டப்பாவின் விடுதலை இயக்க ஈடுபாடும், கதர் பக்தியும் போலீசாரை ஈர்க்கும் என்பதால் இத்தகைய அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கலாம், எப்படியாயினும், விடுதலைப் போராட்டம் என்ற தேசிய நீரோட்டத்தில் எல்லா வெகுசன வடிவங்களும் எந்தளவுக்குத் தம்மை ஈடுபடுத்த முடியுமோ, அந்தளவுக்குத்தான் தமிழ் நாடகமும் ஈடுபட்டது என்பதே உண்மை. *(தீக்கதிர், இலக்கியச் சோலை, அ.மங்கை, தமிழ் நாடக வரலாற்று ஆய்வின் திசைவழிகள், 2.6.2010, மதுரை, பக்கம் 8)*

திரு. பாஸ்கரதாசன் தொடர்ந்து தனது நூலில் கிட்டப்பா குறித்து குறித்த செய்திகள் இதோ;

சென்னை வால்டாக்கீசில் தான் சுந்தராம்பாள் கிட்டப்பா நாடகம் அடிக்கடி நடக்கும். சத்தியமூர்த்தி தன் மகள் லட்சுமியைக் கூட்டிச் செல்வார். சிறுமியான லட்சுமி நாடகம் முடிய எவ்வளவு நேரமானாலும் விழி கொட்டக் கொட்டப் பார்த்துக் கொண்டிருப்பார். சுந்தராம்பாளும், கிட்டப்பாவும் சத்தியமூர்த்தியின் அன்பிற்குப் பாத்திரமானவர்கள்.

கே.பி.சுந்தராம்பாள் சத்தியமூர்த்தியை அண்ணா என்று தான் அழைப்பார். சிறுமி லட்சுமி அத்தை என்று ஆசையாய்க் கூப்பிடுவாள். அத்தை நாடகம் பார்க்கப் போகிறேன் என்று அடம் பிடிப்பாள்.

‘காயாத கானகத்தே நின்றுலாவும் மானே’

நாடக துவக்கத்தில் கிட்டப்பா ‘காயாத கானகத்தே நின்றுலாவும் மானே’ என்று ஒருபுறம் பாடிக் கொண்டே வருவார். மறுபக்கம் சுந்தராம்பாள் ஆலாபனை பாடிக்கொண்டு வருவார். நாடகம் பார்ப்பவர்களிடமிருந்து ‘விசில்’ ஒலி பறக்கும்.

நாடகம் நடந்து கொண்டிருக்கும் வேளையில், சிறுமி லட்சுமியுடன் சத்தியமூர்த்தி பாதியில் செல்ல வேண்டியிருந்தது. ஆனால்சிறுமிலட்சுமியோ,அத்தைநாடகம்பார்த்துவிட்டுத்தான் வருவேன் என்று அடம் பிடித்தாள். அதைப்பார்த்த சுந்தராம்பாள், ‘அண்ணா குழந்தையை நாங்கள் பத்திரமாகக் கூட்டி வருகிறோம், நீங்கள் போங்கள்’ என்று சொல்லி, சுந்தராம்பாள் தன் மடியில் உட்கார வைத்துக் கொண்ட இனிய இளமை ஞாபகத்தை முதுமையான போதும் மனதில் வைத்துக் கொண்டு பெருமையுடன் சொன்னார் சத்தியமூர்த்தியின் மகள் லட்சுமி கிருஷ்ணமூர்த்தி. சத்தியமூர்த்தியின் வார்த்தைக்கு கிட்டப்பாவும் சரி சுந்தராம்பாளும் சரி மிகுந்த மரியாதை கொடுப்பார்கள்.

இருவருமே நாடகத்தில் ஓய்வில்லாமல் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ஆகையால் 1931–ல் பேசும்படம் வந்தபோதும் அதைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. பேசும் முதல் படமான ‘காளிதாஸ்’ 31.10.31 அன்று சென்னையில் சினிமா சென்ட்ரல் என்ற தியேட்டரில் வெளிவந்தது. இருப்பினும் நாடகங்களுக்கு இருந்த செல்வாக்கு சிறிதும் குறையவில்லை.

குன்னக்குடி வைத்தியநாதன்

“கே.பி.சுந்தராம்பாள் வேடன் – வேலன் – விருத்தன் என்று ராஜபார்ட்டாக நடித்தால் கிட்டப்பா வள்ளியாக ஸ்திரீ பார்ட்டாக நடிப்பார். இருவரும் மேக்கப் போட்டு வெளியில்

வருவதற்குள் ரசிகர்களின் ஆர்ப்பாட்டம் அதிகமாக இருக்கும்." கிட்டப்பா திரைக்கு வந்து ஒரு ஆலாபனை செய்துவிட்டுப் போனால்தான் ரசிகர்கள் கொஞ்சம் அமைதியடைவார்கள். சுந்தராம்பாளும் வந்து பாடமாட்டாரா என்று ஜனங்கள் ஏங்கிக் கிடப்பார்கள் என்பார் கலைமாமணி குன்னக்குடி வைத்தியநாதன் மேலும் தொடர்கிறார்.

கே.பி.சுந்தராம்பாள் கிட்டப்பா இருவரும் சினிமாவில் நடிக்காமலேயே தாயகத்தில் மட்டுல்லாமல் இலங்கை, பர்மா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழுகின்ற தமிழர்களின் இதய சிம்மாசனத்தில் இசைச் சக்கரவர்த்தியாக வீற்றிருந்தனர். சினிமா நடிகர்களைவிட இவர்களுக்கு அதிகமான ரசிகர்கள் இருந்தார்கள்.

கிட்டப்பாவும் சுந்தராம்பாளும் நாடகத்திலேயே கவனம் செலுத்தினார்கள். சினிமாப்பக்கம் வரவேஇல்லை. பிரம்மாண்டமாக சினிமா தயாரிப்பு ஒரு பக்கம் நடந்தது. நாடக தயாரிப்பும் அதிக பொருட் செலவில் தயாரிக்கப்பட்டன.

இந்து வினோத நாடக சபா சார்பாக சி.கன்னையா பிரம்மாண்டமான காட்சிகளுடன் 'பகவத் கீதை' என்ற நாடகத்தை அரங்கேற்றம் செய்ய அயராது உழைத்துக் கொண்டிருந்தார்.

காட்சிகள் – வசனங்கள் எழுதப்பட்டு, சென்னை ராயல் தியேட்டரில் ஒருமாத காலம் ஒத்திகைகள் நடந்தன. உடல் நலம் கெட்டுப் போயிருந்த கன்னையாவின் உடல் நிலை, கடுமையான உழைப்பினாலும் மேலும் மோசமானது. தன் உடல் நிலையைப் பற்றி உணர்ந்து கொண்டு சொன்னார்; 'என் உயிர் எந்த நேரத்திலும் என்னை விட்டுப் போகலாம். அறங்கேற்ற நேரத்தில், என் உயிர் பிரிந்துவிட்டால் நாடகத்தை பாதியில் நிறுத்தக் கூடாது. முடிந்த பிறகுதான் எனது இறுதிச் சடங்கைச் செய்ய வேண்டும்' என்று கன்னையா கூறியிருந்தார்.

நாடகம் அரங்கேறியது, மேடையின் ஓரத்தில் அமர்ந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கன்னையா கண்டு களித்தார்.

கன்னையாவின் மரணம்

மறுநாள் இரண்டாவது காட்சி தொடங்கியது. நாடகத்தில் கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு கர்மயோகத்தை உபதேசித்துக் கொண்டிருந்தார். அந்த உபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருந்த கன்னையாவின் உயிர் அவர் உட்கார்ந்த நிலையிலேயே பிரிந்து விட்டது. அவர் சொன்னதைப் போல நாடகம் இடையில் நிறுத்தப்பட வில்லை. நாடகம் முடிந்தே அவர் இறந்துவிட்ட செய்தி அறிவிக்கப்பட்டது.

அவரது இறுதியாத்திரை ஏற்பாடுகளை எஸ்.ஜி.கிட்டப்பா முன்னின்று கவனித்தார். தன் நாடக கம்பெனி முதலாளியின் மரணம் கிட்டப்பாவை பெரிதும் பாதித்தது. அவருக்கு முன்பு குடித்துவிட்டுக்கூட செல்லமாட்டார். அவர் மறைந்ததும அந்த வேதனையில் கிட்டப்பா மேலும் குடிக்க ஆரம்பித்தார்.

கும்பகோணம் அரண்மனைத் தியேட்டரில் வள்ளித் திருமணம் நாடகம் நடந்தது. சுந்தராம்பாள் கிட்டப்பா நாடகமென்றால் பட்டி தொட்டிகளில் இருந்து வண்டி கட்டிக் கொண்டு வந்து பார்த்தார்கள். 1933-ம் வருடம் தொடக்கத்திலிருந்தே கிட்டப்பாவின் உடல் நலம் பாதிக்கப்பட்டது. நாடக நிகழ்ச்சிகளை குறைத்துக் கொண்டார். இருப்பினும் நாடகம் நடிக்காமல், பாடாமல் இருப்பது அவருக்குப் பைத்தியம் பிடித்தது போலிருந்தது. ஒருவர் மீது ஒருவருக்கு அன்பு மாறாதிருந்தாலும் அவ்வப்போது எழுந்த மனஸ்தாபங்களால் மனதில் சங்கடங்கள் புகைந்து கொண்டே இருந்தன. மீண்டும் சுந்தராம்பாளைப் பிரிந்து சொந்த ஊருக்குச் சென்றுவிட்டார். உடல் நிலை காரணமாக கிட்டப்பா எப்போதாவது ஒரு சில நிகழ்ச்சிகளில் மட்டும் கலந்து கொண்டார். கிட்டப்பாவைப் பிரிந்து சுந்தராம்பாள் மீண்டும் தனிமரமாய் இருந்தார்.

சென்னைக்கும் கொடுமுடிக்கும் போய்வந்து கொண்டு நாடக நிகழ்ச்சிகளிலும், காங்கிரஸ் கூட்டங்களிலும் தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தார்.

அதே சமயம் கிட்டப்பாவும் போய்வந்து கொண்டு நாடக நிகழ்ச்சிகளிலும், காங்கிரஸ் கூட்டங்களிலும் தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தார்,

அதே சமயம் கிட்டப்பாவும் தனியாக நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்தார். ஆனால், அந்த முயற்சி வெற்றிபெறவில்லை.

நாடகக்காரர்களை கர்நாடக சங்கீத வித்வான்கள் மதிப்பதில்லை. ஆனால் இதில் விதிவிலக்காக சிலர் இருந்தனர். அவர்களில் கிட்டப்பா – சுந்தராம்பாள் ஜோடிக்கு என்றைக்கும் முதலிடம் இருந்தது. அதனால் தான் சிறந்த இசை வித்வான்களான முத்யைா பாகவதர், திருச்சி பிடில் கோவிந்தசாமி பிள்ளை, புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை, காஞ்சிபுரம் நாயனாப்பிள்ளை, அரியக்குடி, காரைக்குடி வீணை சகோதரர்கள், மதுரை பொன்னுசாமி நாயனக்காரர், திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, வீருசாமி பிள்ளை போன்றவர்கள் இவர்கள் நாடகம் எங்கே நடந்தாலும் முதல் வரிசையில் இருந்து ரசித்தார்கள்.

பிறமொழியினர் பாராட்டு

1924–ஆம் ஆண்டு வட இந்திய இசை விற்பன்னர் பண்டித விஷ்ணு திகம்பரர் சென்னைக்கு வந்து செல்லாராம் மாளிகையில் தங்கி இருந்தார். அவர் கிட்டப்பாவின் பாடலைக் கேட்டு அதிசயித்தார். இதுபோலவே ஹிந்துஸ்தானி பாடகர் புரொபஷர் கணேச பிரசாத்தும் பாராட்டியுள்ளார். 1922–ம் ஆண்டு திருச்சியில் கிட்டப்பா நாடகத்தைக் கண்டு பரவசம் அடைந்த அமெரிக்கர் ஈச்சிம் பாராட்டிய செய்தி அக்கால நாளிதழ்களில் வெளியாயின.

கிட்டப்பா தனது குரலை இசைத்தட்டில் பதிவு செய்தது 1931–ஆம் ஆண்டு தான். வானொலியும், சினிமாவும் பிரபலமாகாத காலத்தில் கிராமபோனும் இசைத்தட்டும் வீட்டில் இருப்பது பெரிய நாகரீகமாக கருதப்பட்டது என்பது இக்காலத்தவர்கள் அறியாத ஒன்று.

1933–ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் உடல் நிலை கவலைக் கிடமானதாக மாறியதால் உறவினர்கள் மற்றும் சுந்தராம்பாளின் யோசனையின் பேரில் சென்னை போய் டாக்டர் பி.ராமாராவிடம் சிகிச்சையை மேற்கொண்டார், கிட்டப்பா. குடல் வெந்து போயிருப்பதாகவும், ஈரல் சுருங்கி

இருப்பதாகவும் சிகிச்சையில் தெரியவந்தது. இதையடுத்து மருத்துவம் தொடர்ந்து செய்வதற்காக மயிலாப்பூரில் தனி வீடெடுத்து இரண்டு மாதம் இருந்தார். பின்னர் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் செங்கோட்டைக்கு வந்துவிட்டார். சிறுது காலம் மாமனார் வீட்டிலும், பின்னர் 'சந்திரவிலாஸ்' மாடியில் அறை எடுத்தும் தங்கி வந்தார்.

1933–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கடைசியில் திருநெல்வேலியில் இந்து கல்லூரிக்காக இலவசமாக ஒரு நாடகம் நடித்துக் கொடுத்தார். அதற்குக் காரணம் அன்று அவருக்கு 28–ஆம் ஆண்டு நிறைவு நாள்!

செப்டம்பர் மாதம் திருவாரூரில் நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போதே மயக்கமடைந்து விழுந்துவிட்டார். அப்போது அவருடன் நடித்துக் கொண்டிருந்தவர் எம்.எஸ். விஜயாள்.

அக்டோபர் இறுதியில் கிட்டப்பா சகோதரர்கள், அவரை அழைத்துக் கொண்டு திருவழாயுக்குச் சென்று சிகிச்சையை மேற்கொண்டனர். கொஞ்சம் தேவலாம் என்ற நிலை அடைந்தபோது மீண்டும் வயிற்று வலி உண்டாகியது, டாக்டர் அனந்தநாராயணன் வரவழைக்கப்பட்டு ஊசிபோடப்பட்ட பின்னர் குணம் ஏற்பட்டது. படுக்கையிலேயே இருந்து வரலானார். ஜீரண சக்தியை இழந்து அவதிப்பட்டார். 1933–ஆம் ஆண்டு டிசம்பர் 2 சனிக்கிழமை பகல் 12 மணி அளவில் மீண்டும் வலி ஏற்பட்டு மருத்துவம் செய்யப்பட்டது. தண்ணீர் வாங்கி குடித்துவிட்டு ஒரு பக்கமாக படுத்துக் கொண்டு முகத்தை மூடிக்கொண்ட சமயத்தில் உயிர் துறந்தார். அவர் தூங்குகிறார் என்றே எண்ணிய தமயனும், தங்கை பிச்சம்மாளும் இறந்து போய் பல மணி நேரம் கடந்தே அறிந்தனர்.

பிற்பகல் 3.10 க்கு இறந்தவரை 6 மணிக்கு தகனம் செய்தனர். பொதுமக்கள் அவர் முகத்தைப் பார்ப்பதற்காக வேண்டியும் கூட முகத் துணியை எடுக்கவில்லை.

கிட்டப்பா இறந்ததற்கு பின்னர் நாடு முழுவதும் உள்ள இசைக்கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், அரசியல் உலகப் பிரமுகர்கள், இளைஞர்கள் ஆகியோரின் அனுதாபக் கூட்டமும், தீர்மானமும் பல ஊர்களில் நிறைவேற்றப்பட்டன.

கிட்டப்பா இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்தான் அவர் மனைவியும், மாமனாரும் வந்து பார்த்தனர். அவர் கடைசி காலத்தில் தனிமையிலேயேதான் இருந்துள்ளார்.

எஸ்.ஜி.கிட்டப்பா பாடி இசைத்தட்டில் வந்துள்ள சில பாடல்கள்

1. தக்கோர்அபிமானசீல-தேவகாந்தாரி-வேதநாயகம்பிள்ளை
2.அன்றொருநாள்-காம்போதி (விருத்தகம்)
3. எல்லோரையும் போலவே - சுத்தசாவேரி - கவிகுஞ்சர பாரதியார்
4. கோபியர்கொஞ்சும்ரமண-தேஷ் - எஸ்.ஜி.செல்லப்பா
5.வனிதா மணியே-பார்ஸி ட்யூன் - எஸ்.ஜி.செல்லப்பா
6. தீங்கான மொழியே-ஆனந்தபைரவி - எஸ்.ஜி.செல்லப்பா
7.காமி சத்திய பாமா-கமாஸ்-சங்கரதாஸ் சுவாமிகள்
8.காயத கானகத்தே - பைரவி -சங்கரதாஸ் சுவாமிகள்
9.தாமதமேன் தாளை-கமாஸ்-சங்கரதாஸ் சுவாமிகள்
10.கோடையிலேஇளைப்பாறி-இராகமாலிகை-வள்ளலார்
11.இன்னமும் சொல்லவோ - வசந்தா - வள்ளலார்
12.ஆண்டவன் தரிசனமே - அசாவேரி - முத்தையா பாகவதர்
13. நாளை போகாமல் - சங்கராபரணம் - கோபாலகிருஷ்ண பாரதி
14.வேடிக்கையாகவே-முகாரி
15.வண்ணத்தாமரையைக்கண்டு-காவடிச்சிந்துமெட்டு
16.தர்மமல்லவே-மாண்ட்
17.மகாதேவ-இந்துஸ்தானி
18.எவரெனி-நாதசிந்தாமணி
19.அம்மா ராவம்ம - கல்யாணி
20.ஸ்ரீராம பாதமா - அம்ருதவாஹினி

கே.பி.எஸ்.ஸின் துறவுக்கோலம்

1927 ஆம் ஆண்டு கிட்டப்பாவை திருமணம் செய்து கொண்ட கே.பி.சுந்தராம்பாள், ஏழே ஆண்டுகளில் விதவையானார். அப்போது அவருக்கு வயது 25; கிட்டப்பாவுக்கு வயது 28.

கிட்டப்பா இறப்பு நிகழ்ச்சி முடிந்த பின்னரே சுந்தராம்பாளுக்கு தெரிவிக்கப்பட்டது. இதை அறிவித்தவர் காசி அய்யர். செய்தி அறிந்ததும் அலறி அடித்துக் கொண்டு ஓடினார். அதன் பின்னர் நடந்ததை அவரே சொல்கிறார், "அவர் இறந்துபோன செய்தி வந்ததும், ரூ.18,000 எடுத்துக் கொண்டு போனேன். கடன் வைத்துவிட்டு, அதைக் கொடுக்க முடியாமல் இறந்துபோனார் என்ற அவலக் குரலைக் கேட்க, என் மனம் பொறுக்கவில்லை. ஒருவரும் அவ்வாறு சொல்லக்கூடாது என்பது என் சங்கல்பம்" என்கிறார்.

பின்னர் கிட்டப்பாவின் அஸ்தி கலசத்தை எடுத்துக்கொண்டு காசிக்கு சென்றார். அங்குள்ள கங்கையில் அஸ்தியை கரைத்துவிட்டு சென்னை வந்தார்.

கிட்டப்பா இறந்ததும், இவருக்கு அடைக்கலம் தந்து ஆறுதல் கூறியவர்கள் கஸ்தூரி சீனிவாசனும், ஏ.ரங்கசாமி ஐயங்காரும். இந்து பத்திரிக்கையோடு தொடர்புடைய இந்த இருவரும் தேனாம்பேட்டை கிராமணியார் தோட்டத்தில் ஆசிரமம் மாதிரி ஒரு வீட்டை அமைத்துக் கொடுத்து சுந்தராம்பாளை அதிலே குடியிருக்க செய்தனர். இவர்களோடு ஜி.ஏ.நடேசனும் அடங்குவார். "அவர்கள் இருவரும் எனக்கு இரு கண்கள் என்றால், திரு.ஜி.ஏ.நடேசன் என் சிரசுக்கு ஒப்பானவர்" என்று சாவிக்கு அளித்த பேட்டியில் தன் நன்றியைப் புலப்படுத்தினார் கே.பி.எஸ்.

கிட்டப்பா நினைவாக, அவர் நண்பரும் சிறந்த தேசபக்தருமான ஆக்கூர் அனந்தாச்சாரியார் வாலாஜாவில் ஒரு பள்ளியும், திருவல்லிக்கேணியில் ஒரு இந்து பள்ளியும், இலவச இசை வகுப்பையும் தொடங்கினார். முதலாமாண்டு நினைவு நாள் அன்று வாலாஜா செங்காட்டில் ஸ்ரீமதி சுந்தராம்பாளால் அளிக்கப்பட்ட கிட்டப்பாவின் உருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அதே நாளில் செங்கோட்டையில் சுந்தராம்பாள் ஏழைகளுக்கு அன்னதானம் அளித்தார்.

கே.பி.சுந்தராம்பாளும் எஸ்.ஜி.கிட்டப்பாவும் நாடகங்களில் ஒன்றாக இணைந்து நடித்த நாடகங்களில் ஒன்று பவளக்கொடி இதோ அந்த விளம்பரம் அப்படியே,

ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ணய நமஃ

K. S. செல்லப்பா அய்யர், K. S. அனந்தநாராயண அய்யர்,

S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள்,

P. S. வேலு நாயர், S. R. கமலம்,

மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி,

ஸ்ரீ பால விநோத நாடக சபா

இவர்களால் நடத்திவரும்

பவளக்கொடி

உடுமலை: ஸ்ரீமான் சரபகவி மாணவரும்

சென்னை: ஸ்ரீ பால விநோத நாடக சபாவின் ஆசிரியருமான

ச. சு. சங்கரலிங்கக் கவிராயரவர்களின் மாணவர்

முத்தமிழ் க்ஷேத்திர மதுரை

K. குற்றாலம்பிள்ளை அவர்களால்

இயற்றியது.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

அடுத்து சங்கீத இரத்தினம் செங்கோட்டை கிட்டப்பா பாடிய சில பாடல்கள் இதோ;

சங்கீத ரத்னம்
மாஸ்டர் எஸ்.ஜி.கிட்டப்பா பாடிய கிராமபோன்
புதிய பிளேட் சங்கீதம்

வெண்பா

அன்றொரு நாள் குட்டி அருஞ்சிறையி லிட்டேனான்
இன்றதனை யெண்ணி யெனைவருத்த – தந்திரத்தால்
வள்ளியிவ ளைப்படைத்து மையல் சிறையிலென்னை
தள்ளியடைத் தான் பிரமன் தான்

இராகம் – பியாக் – தாளம் – ஆதி

பல்லவி

சமான ரஹித குணவதி யுவதி
அதி ருபவதி (ச)

அநுபல்லவி

உமாபதி வாக்பதி கமல
ரமாபதி கரர்பதி மகிழுஞ் (ச)

சரணம்

வனிதாமணி தருணிவேணி
மதன கலா நிபுணி கனக
மணிமயபூ ஷணி கோகில
பாஷணி வினய விதரணி (ச)

இராகம் – அசாவேரி – தாளம் – ஆதி

பல்லவி

ஆண்டவன் தெரிசனமே – த்யாகேசன்
தாண்டவ தெரிசனமே (ஆ)

அநு பல்லவி

பூண்டிடும் நாக குண்டலமாட
வேண்டுமடியர் வினை யோட - த்யாகேசன்
தாண்டவ தெரிசனமே (ஆ)

சரணம்

மங்களமாக மகிமையுண்டாக
இங்கித மாதுமையுற் சாகன் - த்யாகேசன்
தாண்டவ தெரிசனமே (ஆ)

இராகம் ஸஹேடி ராகம் - தாளம் - ஆதி

பல்லவி

கீதார்த்தமு ஸங் கீதானந்தமு
நீதாவுனஜஹேடரா ஓ மனஸா (கீ)

அநுபல்லவி

சீதாபதிசரண பஜமுனிடுகொள
வாதாத்மஜ்னிகி பாகதெலுஜஸஹேரா (கீ)

சரணம்

ஹரிஹர பாஸ்கர காலாதி கர்மமு
லனுமதமுல மர்ம முல னெரிங்கின
ஹரிவர ரூபுடு ஹரஹயவினுதுடு
வரதியாகரராஜ வரதுடுஸஹேகிரா (கீ)

பல்லவி

நானேன் ஏவினேன் - உனைத்தூதாக (நா)

அநுபல்லவி

நான்விழியே செந்
தென் மொழியே இங்கு
தான் பொழியே நில்லாதேகிப் போ (நா)

சரணம்

உடலெங்குங் கீறி ஊரெங்குங் கூறி
உனைத்தொழ வைத்தான் மதன்மீறி – சண்முகன்
உனைத்தொழ வைத்தான் மதன்மீறி
பைத்யக்காரி யெனச் சொல்லலாம் (நா)
சுந்தர வுடலில் சந்தனங் குளிர
தந்தகுறிபட்டு இதழ்வெளிற – முருகன்
தந்தக்குறிபட்டு இதழ் வெளிற
மொழி – குழற – தனியா யிப்போ (நா)

கிளிக்கண்ணி

இராகம் – இந்துஸ்தான் காப்பி – தாளம் ஆதி

கண்ணிகள்

ஐந்துகரனுக்கிளைய ஆறுமுக வேலனைச்
செந்திற்குகந்தவளை கிளியே
சேரமனங் கூடிதடி (ஐ)
ஐந்து வயதினிலே அறியாப் பருவத்திலே
பிஞ்சிலே கூடினேண்டி கிளியே
பிரியமன மில்லையடி (ஐ)
வள்ளிகணவன் பேரை வழிப்போக்கர் சொன்னாலும்
உள்ளங் குழையுதடி கிளியே
ஊடுருவிப் போகுதடி (ஐ)
மோகந்தவிர என்னை முந்தி பிடித்திழுத்து
ஏகவெளிதனிலே கிளியே
என்னையுங் கலந்தானடி (ஐ)
எட்டாப்பழமடியோ இறக்காத தேனடியோ
மட்டில்லாத ஆனந்தமே கிளியே
மாலமருகன் தந்த சுகம் (ஐ)
கன்னல் மதுரமொழி கட்டழகன் என் குரவன்

என்ன பொடி போட்டானோடி கிளியே
இணைபிரியக் கூடுதில்லை (ஐ)
கட்டுக்கொடி பறந்த கருவூருக் காட்டுக்குள்ளே
விட்டுப் பிரிந்தாரடி கிளியே
வேதனையும் படுவதற்கு (ஐ)
உண்டால் கிறுக்கவைக்கும் ஊரிலுள்ள கைச்சரக்கு
கண்டால் கிறுக்கவைக்கும் கிளியே
கட்டழகன் பேருருவம் (ஐ)

இராகம் - நாதசிந்தாமணி - தாளம் - ஆதி

பல்லவி

எவரினி நிர்ணயிஞ்சிரிரா - நின்
னெட்னா ராதிஞ்சிரிரா - நரவருள் (எவ)

அநுபல்லவி

சிவுடனே மாதவுடனே கமல
பவுடனே பரப்ரம்ம மனோநின் (எவ)

சரணம்

சிவமந்தரமுனகு மாஜீவமுமா
தவமந்த்ரமுனகு ராஜீவமு ஈ
விவரமு தெலிஸின கனுலகு ரொக்கத
விதரணகுண ஸ்ரீ த்யாகராஜனுதநின் (எவ)

இராகம் - கமாஸ் - தாளம் - ஆதி

பல்லவி

காமி சத்யபாமா கதவைத் திறவாய் - எந்தன் (கா)

அநுபல்லவி

கதவைத் திறவாய் திறவாய் திறவாய் - எந்தன் (கா)

சரணம்

பூமி புகழ் நேயன் புழுதியடைந்த வாயன்
நேமி வசந்தன் நானடி

நானடி
நானடி
நானடி - எந்தன் (கா)
அக்ரமங்கள் செய்திடும் அசுரரை யழித்திடும்
நானடி
நானடி
நானடி - எந்தன் (கா)

இராகம் - கமாஸ் - தாளம் - ரூபகம்

பல்லவி

தாமதமேன் தானை நீ திறவாய்
ததியிது தயவாய் (தா)

அநுபல்லவி

கோமள மயிலினமே கொஞ்சிடும் மடவனமே
கூறுவாய் சினமேன் கூறுவாய் சினமேன்
குணவதியெனை யகலவிடவோ - இனிமேல் (தா)

சரணம்

கோ தையழகி யதிவினய
கோ லமதிசய மதிபுகழ்
கோ மகளொடு குலவிட
கோ தையெனை யகலவிடலழ
கோ மொழிவை கோபடியில்
கொஞ்சும் மொழியுடைய அஞ்சுகமே (தா)

இராகம் - இந்துஸ்தான் பியாக் - தாளம் - ஆதி

பல்லவி

தேவா சுர குலத்தோர்
திவ்யாமுதம் உமக்கே நானே
தாரேன் பொறுப்பீரே (தே)

அநுபல்லவி

கேவல மிதே கலகம்
கண்யவான் நீரே செய்தால்
சேலிபேசு மிவ் வுலகம்

தொகையரா

விரோதம் வேண்டாமிதை
விட்டு நீ ரிருப்பீரே
விவேக மாக இதை
நீர்கவனிப் பீரே (தே)

இராகம் – இந்துஸ்தான் – பியாக் – தாளம் – ஆதி

பல்லவி

மாதரசே மயிலே
மௌன மாகுமோ குயிலே – ஆசை (மா)

அநுபல்லவி

நீதயவுபரி வாயே – எந்தன்
நேரிழையே வரு வாயே – ஆசை

சரணம்

மாமலரா லினியே – பொல்லா
மாமலரா லினியே – அந்த
மதவேள் செயும்வே தனையே சகியேன் (மா)

கோமளமே மகிழ்வாய் – எந்தன்
கோமளமே மகிழ்வாய் – எனைக்
குலவசக் சமயம் வருவாயே – ஆசை (மா)

ஒரு லட்சம் சம்பளம் வாங்கிய முதல் தமிழ் நடிகை

கலைஞர்களில் பெயரும் புகழும் பெற்றவர்கள் பலர். அவர்களில் முக்கியமானவர் கே.பி.சுந்தராம்பாள். 'நந்தனார்' நாடகத்தை அவர் எந்த இடத்தில் எப்போது நடத்தினாலும் பெரும் கூட்டம் திரண்டு விடும். இவர் மேடையில் நடிக்கும்போது ஓரத்தில் இசைக் கலைஞர்கள் அமர்ந்து வாத்தியங்களை இசைப்பார்கள். அதில் ஆர்மோனியம் வாசிப்பாவராக எஸ்.ஜி.கிட்டப்பா இருந்தார். சுந்தராம்பாள் பாட கிட்டப்பா உடன் பாடியபடி வாசிக்க, ரசிகர்கள் மெய்மறந்து போவார்கள். இரவு ஆரம்பிக்கும் நாடகம், அதிகாலை 4 மணிக்குத்தான் முடியும். இந்த இருவரின் கூட்டால் பல்வேறு நாடகங்கள் வெற்றிபெற்றன. இந்த வெற்றி, கிட்டப்பாவும் சுந்தராம்பாளும் வாழ்க்கையிலும் இணைய காரணமாக அமைந்தது. இருவரும் திருமணம் செய்து கொள்ளாமல் கணவன், மனைவியாக வாழ்ந்தனர். இந்நிலையில் திடீரென கிட்டப்பா ஒரு நாள் இறந்துவிட்டார். இது சுந்தராம்பாளை பெரிதும் பாதித்தது. 'இனி நாடகங்களிலேயே நடிக்க மாட்டேன், நடத்தவும் மாட்டேன்' என ஒதுங்கிக் கொண்டு கோயில்களில் மட்டும் கச்சேரிகளை நடத்தி வந்தார்.

இந்தச் சூழ்நிலையில்தான் அவரது 'நந்தனார்' நாடகத்தை படமாக்க சென்னைக்கு வந்தார் ஹசந்த்தாஸ். அதில் சுந்தராம்பாளை எப்படியும் நடிக்க வைக்க வேண்டும் என்பது அவரது திட்டம். நாடகத்திலேயே நடிக்க முடியாது என ஒதுங்கியவர், சினிமாவுக்கு எப்படி வருவார்? முடியாது என தீர்மானமாக சுந்தராம்பாள் மறுத்துவிட்டார்.

அப்போதெல்லாம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நிறைய பொதுக்கூட்டங்கள் நடக்கும் சத்தியமூர்த்தி பங்கேற்கும் கூட்டத்துக்கு போஸ்டர்கள் ஒட்டும்போது, நாடக நடிகைகள் சுந்தராம்பாளும், ராஜலட்சுமியும் பாட்டுப் பாடுவார்கள் என விளம்பரம் செய்வார்கள். இந்த விஷயம் ஹசந்தாஸூக்கு தெரிந்திருந்தது. அதனால் சத்தியமூர்த்தியை சந்தித்து தனது ஆர்வத்தை தெரிவித்ததுடன், அவரிடமிருந்து கைப்பட ஒரு கடிதத்தையும் பெற்றுக் கொண்டு, நேராக சுந்தராம்பாளிடம் வந்தார் ஹசந்த்தாஸ்.

கடிதத்தை சுந்தராம்பாள் பிரித்துப் படித்தார். அதில் ஹசந்ததாஸ் தயாரிக்கும் படத்தில் நடிக்கும்படி சிபாரிசு செய்திருந்தார் சத்தியமூர்த்தி. இதை ஏற்க சுந்தராம்பாள் மறுத்துவிட்டார். நான் விதவை கோலத்தில் இருக்கிறேன். சினிமாவில் நடிக்க முடியாது என்றார். ஹசந்த்தாஸ் விடவில்லை. அவர் தொடர்ந்து வற்புறுத்தவே, கோபமான சுந்தராம்பாள், 'ரூபாய் 1 லட்சம் தந்தால் நடிக்கிறேன்' என்றார் அந்தக் காலத்தில் ஒரு படத்தில் நடிக்க நடிகைக்கு ரூ.8 ஆயிரம் வரைதான் சம்பளம் தருவார்கள். 1 லட்சத்தை யாராலும் தர முடியாது என்பதால் தான் சுந்தராம்பாள் அப்படி கூறினார். ஆனால் ஹசந்த்தாஸோ, அதிர்ச்சியடையாமல், 'ஓ.... அதற்கென்ன, இதோ ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையை இப்போதே தருகிறேன்' என செக்கை நீட்டினார். சுந்தராம்பாள் திகைத்துப்போனார். ரூ. 1 லட்சம் தந்தால் நடிப்பேன்' என்று வாக்குபோல சொன்னதற்காகவே நடிக்க சம்பதித்தார். இதன் மூலம் ரூ.1 லட்சம் வாங்கிய முதல் நடிகை என்ற பெருமையும் சுந்தராம்பாளுக்கு கிடைத்தது. (தினகரன், வெள்ளிமலர் 12.3.2010, பிலிம் நியூஸ் ஆனந்தன் கட்டுரை)

ஒரு சாட்சியின் வாக்குமூலம்

கடந்த 1950களில், திரையுலகில் பிலபலமாக இருந்த நடிகர், நடிகைகளெல்லாம் ஆயிரக்கணக்கில் தான் சம்பளம் பெற்று வந்தனர். அந்த கால கட்டத்தில் தன் அபரிமிதமான குரல் வளத்தால், எல்லோரையும் மெய்மறக்கச் செய்துவிடும் அளவுக்கு, இசை மேதையாக திகழ்ந்த கே.பி.சுந்தராம்பாள், ஒரு லட்சம் ரூபாய் சம்பளம் பெற்று, 'அவ்வையார்' படத்தில், அவ்வையாராக நடித்தார் என்பது அன்றைய தமிழகத்தின் பெரிய செய்தியாக இருந்தது.

இன்றைக்கு சரியாக 90 ஆண்டுகளுக்கு முன்பு, கொழும்பு ஜிந்துபிட்டி ஹாலில் சுந்தராம்பாள் நடித்த நாடகங்கள் நடைபெற்றன.

"கிட்டப்பா ராஜபார்ட்! சுந்தராம்பாள் ஸ்திரீபார்ட்!" என்று இலங்கையில் விளம்பரம் செய்யப்படுகிறது.

சுந்தராம்பாளும் கிட்டப்பாவும் இலங்கையில் போட்டி போட்டுக் கொண்டு நடித்தார்கள். பணம் மழையாகக் கொட்டுகிறது.

வ.ரா

தமிழ்ப் பெரியார்கள் எனும் நூலினை இரண்டரை ரூபாய் விலையில் தமிழ்ப்பண்ணை மலர் 5 இல், ஜூலை 1943 சென்னையிலிருந்து வ.ரா. வெளியிட்டார்.

அதில் கே.பி.சுந்தராம்பாள் குறித்து 124 வது பக்கம் முதல் 137 வது பக்கம் வரை எழுதியுள்ள செய்திகள் இதோ;

'எங்க ஆத்துக்காரர்' என்றார் அவர். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. இவர் யாரை தங்கள் ஆத்துக்காரர் என்கிறார் என்பது எனக்குப் புரியவில்லை. ஒரு நிமிஷம் அப்படியே திகைத்துப்போய் உட்கார்ந்து கொண்டிருந்தேன். என்னைத்தவிர, அங்கே கூடியிருந்தவர்களுக்கு, அவர் சொன்னது விளங்கித்தான் இருக்க வேண்டும். ஏனென்றால், அவர்களுடைய முகங்களில் தெளிவைக் கண்டேனே யொழிய, திகைப்பை நான் காணவில்லை.

'எங்க ஆத்துக்காரர்' என்று நாலைந்து நிமிஷங்களுக்குள், இரண்டு மூன்று தரம் அவர் சொல்லிவிட்டார். கடைசியில், 'எங்க ஆத்துக்காரர்' யார் என்று தெரிந்துகொண்டேன். சுந்தராம்பாளின் காதலின் மாண்பும் அவரது துணிவும் எந்த நிலையில் இருக்கின்றன என்று எனக்கு ஒருவாறு புலனாயிற்று. பகிரங்கமாக கிட்டப்பாவை தமது புருஷன் என்று சொல்லிக்கொள்ள, சுந்தராம்பாளுக்கு எவ்வாறு துணிவு வந்தது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

'உங்களுக்கும் கிட்டப்பாவுக்கும் சட்டரீதிப் படிக்கோ அல்லது சடங்குமுறைப் படிக்கோ கலியாணம் ஆகியிற்றா' என்று நிதானமாக கேட்டேன். இல்லை என்றார் சுந்தராம்பாள். என்றாலும் அவர் விதவைக் கோலம் பூண்டிருக்கிறார். சுத்த வெண்மையான கதராடை, தலையில் புஷ்பம் வைத்துக் கொள்ளுவதில்லை. நெற்றியில் விபூதியைத்தவிர, குங்குமமோ அல்லது பொட்டோ வைத்துக் கொள்ளுவதை நான் பார்த்ததில்லை.

கலியாணம் ஆகாமல், சுந்தராம்பாள் விதவைக் கோலம் தரிப்பது விசித்திரமல்லவா? வைதிக உலகம் இதைப்பார்த்தும் கேட்டும், உள்ளம் கொதிப்படையலாம். கலியாணமாகாத விதவையா என்று கௌரவமில்லாமல் கேலி செய்யலாம். சட்டப்படி, சுந்தராம்பாள் ஜீவனாம்சத்துக்கு லாயக்கு இல்லை என்று வக்கீல்கள் வாதாடலாம். இதைப்பற்றி எல்லாம் கவலைப்படுவது காதல் அல்ல.

கிட்டப்பாவை, எங்க ஆத்துக்காரர்' என்று சுந்தராம்பாள், செல்லுகையில், அது இயற்கையாக இருக்கிறது. விரசமாக காதில் தெனிக்கவே இல்லை.

'எங்க ஆத்துக்காரர்' என்று சுந்தராம்பாள், கிட்டப்பாவை குறிப்பிடும் பொழுது, எவருக்கும் கலியாணத்தைப் பற்றியே நினைவு வராது. இது இயற்கையாக இருக்கிறது; இன்ப மயமாயிருக்கிறது என்றுதான் எல்லோரும் ஒரு முகமாகச் சொல்லுவார்கள். இனியும் சந்தேகமிருந்தால், ஒருமுறை நீங்களே, நேரில் கேட்டுப்பாருங்கள். அப்பொழுது உங்களுக்கு உண்மை விளங்கிப்போகும்.

இந்த தேசத்தில், ஆணுக்குத்தான் சன்னியாச பாத்தியம்! பெண்ணுக்கு இல்வாழ்க்கைதான். எனவே, சுந்தராம்பாளுக்கு இல்வாழ்க்கை உண்டா அல்லது அவர் நடத்தி வந்த வாழ்க்கை, இல்வாழ்க்கைதானா என்று கேட்கக் கூடியவர்களுக்காகத்தான் கிட்டப்பாவைப் பற்றி, முதன் முதலாக குறிப்பிடப்பட்டது.

சுந்தராம்பாள் கிட்டப்பாவை சந்திக்கும்முன், பிரபல 'ஸ்திரீபார்ட்' ஆகிவிட்டார். நாடக மேடையில், இவருக்கு தகுந்த 'ராஜபார்ட்' யாருமே கிடைக்கவில்லையாம். வந்த 'ராஜபார்ட்களையெல்லாம், சமாளிக்க முடியாமல், சில தினங்களுக்குள் ஓடிவிடுவார்களாம்.

இந்த நிலைமையில், சுந்தராம்பாள் கொழும்பில் ஒரு சமயம், 'ராஜபார்ட்' கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருந்தாராம். அதுவே கிட்டப்பா, கன்னையா கம்பெனியை விட்டுப் பிரிந்த காலம். ராஜபார்ட்டுக்கு, கிட்டப்பா வரவழைக்கப்பட்டார். கிட்டப்பா கொழும்புக்கு வருமுன்னர், எத்தனையோ பேர்கள், கிட்டப்பாவோடு சேர்ந்து, 'ஆக்ட்' செய்யப்படாது என்று சுந்தராம்பாளை தடுத்துப் பார்த்தார்கள்.

அவர்கள் சொன்ன காரணம் என்ன? கிட்டப்பாவின் சங்கீதத்துக்கு முன்னால், சுந்தராம்பாளின் பாட்டுத்திறன் எடுபடாது என்பதுதான் அவர்கள் கூறிய காரணம். 'கிட்டப்பாவினுடையது கந்தர்வகானமாயிற்றே' அதற்கு முன், நீ நின்று பெயர் சொல்லவாவது? சேர்ந்து ஆடவேண்டாம். உன் பெயர் கெட்டுப்போகும் என்று நெருங்கிய உறவினர் ஒருவர் சுந்தராம்பாளை தடுத்தார்.

"கிட்டப்பா கந்தர்வனாயிருக்கலாம்; ஆனால் சுந்தராம்பாள் அவருக்கு சளைத்தவரல்ல" என்று பதட்டமில்லாமல், சுந்தராம்பாள் பதில் சொன்னாராம். தன்னம்பிக்கைதான் வெற்றியின் ரகசியம் என்று சொல்லவும் வேண்டுமா?

குறித்த நாளில், கிட்டப்பா கொழும்புக்கு தமது தோழர்களுடன் வந்து சேர்ந்தார். ஸ்டேஷன் வந்து இறங்கியதும், 'சுந்தராம்பாளை அலட்சியமாக நினைக்க வேண்டாம்' என்று சில நண்பர்கள், கிட்டப்பாவுக்கு எச்சரிக்கை செய்தார்களாம். எச்சரிக்கையினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ, கிட்டப்பா, நாடக நாளுக்கு முன், சுந்தராம்பாளை அவர் இருந்த ஜாகையில் போய் பார்த்தார்.

சந்திப்பை கூடுமானவரையில், சுந்தராம்பாளின் சொற்களிலேயே சொல்லுகிறேன். சுந்தராம்பாள் சொல்லுகிறார்;

நான் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தேன், ராஜா மாதிரி ஒருத்தர், உன்னைப் பார்க்க வந்திருக்கிறார் என்று என் தாய் என்னிடம் வந்து சொன்னார். நான் எழுந்திருந்து, முகத்தை சுத்தம் செய்து கொள்ளுமுன்னமேயே, 'எங்க ஆத்துக்காரர்' (அப்பொழுது கிட்டப்பா) என் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

நான் பிரமித்துப் போனேன். கூச்சம் சிறிதும் இல்லாமல், என் கட்டிலில் வந்து உட்காரவாவது என்று எண்ணினேன். ஆனால், அவர் பேசத்துவங்கிவிட்டார். என்ன கம்பீரமான தோற்றம்! என்ன ஸ்பஷ்டமான வாக்கு! என்ன கந்தர்வன் வந்துவிட்டார் என்று தோன்றிற்று.

நாடகத்துக்கு முன், ஒத்திகை வேண்டும் என்றார். வேண்டாம் என்றேன். என் பாடல்கள் வேறு விதம் என்றார். எப்படியிருந்தாலும் சரிகட்டிக் கொள்ளுகிறேன் என்றேன். நீ ஏமாந்து போவாய் என்றார். யார் ஏமாந்து போகிறார் என்பது பின்னாலே தெரிகிறது என்றேன். அவர் என் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். நானும் அவருடைய முகத்தை அப்படியே விழுங்கிக்கொண்டிருந்தேன்.

'இதுதான் எங்கள் முதல் சந்திப்பு. அன்று முதல் அவர் மறைந்துபோகும் வரையில், நாங்கள் பிரிந்து போகவே இல்லை'.

இவ்வாறு சுந்தராம்பாள் சொன்னார். அவர் சொன்னதன் சாரமாக, நீங்கள் இதை கொள்ள வேண்டும். அவர் இதைச் சொன்னபொழுது, அவருடைய குரலும் முகமும் மாறிமாறிக் கொண்டு போன வகையை, என்னால் வர்ணிக்க முடியாது.

கனவும் நனவும் காதலும் பிரிவும் கலந்து வந்த வரலாறை நேரிலே கேட்டால்தான், அதன் பூரண பாவமும் உங்களுக்கு விளங்கும். ஏதோ கற்பனை செய்து பாருங்கள். கை கூடின வரையில், லாபம் தான்.

'என்னை, அவர் பலகாலும் எப்படி எப்படியோ ஆட்டிவைப்பார். இருந்தாலும் அதைப்பற்றி, ஏன் இப்பொழுது வருந்த வேண்டும்' என்று சுந்தராம்பாள், சிறு கண்ணீர்த் துளிகளுடன், சொல்லும்பொழுது, மனதுக்கு ரொம்பவும் வருத்தமாயிருந்தது.

'அவர் இறந்துபோன செய்தி வந்ததும்,' ரூ.18000 எடுத்துக்கொண்டு போனேன். கடன் வைத்துவிட்டு, அதைக் கொடுக்க முடியாமல் அவர் இறந்துபோனார் என்ற அவக்குரலைக் கேட்க, என் மனம் பொறுக்கவில்லை. ஒருவரும் அவ்வாறு சொல்லக்கூடாது என்பது என் சங்கற்பம் என்று சுந்தராம்பாள் சொன்னபொழுது, என் உடல் 'கிடு கிடு' வென்று ஆடிவிட்டது.

காதலின் மாண்பு எந்த தன்மை கொண்டது என்பது எனக்கு ஒருவாறு, அப்பொழுது விளக்கமாயிற்று.

சுந்தராம்பாளும் கிட்டப்பாவும் தமிழ்நாட்டை, ஒரு ஆட்டு ஆட்டிவிட்டார்கள். அவர்களுடைய மேதையையும் காதலையும் கண்டு, தமிழ்நாடு பரவசமடைந்தது. தமிழர்கள் இன்பத்தை, அனுபவிக்க முடியாமல் ஏங்கிக் கடந்த காலத்தில், நாடக மேடையின் மூலமாக, அவர்களுக்கு இன்பத்தை ஊட்டிய சுந்தராம்பாள் நீடூழி வாழ்க!

கிட்டப்பா ஞாபகம்

பழ.சிதம்பரன் 1957இல் வெளியிட்ட நூல் கண்கொள்ளாக் காட்சிகள். அதில் மூன்றாவது கட்டுரை கிட்டப்பா ஞாபகம் பக்கம் 38 முதல் 46 வரை இதோ கட்டுரையின் சில பகுதிகள்;

அற்புதம், அதிசயம், அசாத்தியம் எல்லாம் நடைபெற்று நான் பார்த்தது, வாலாஜாபேட்டை என்ற பட்டணத்தில், சென்னையிலிருந்து 65 மைல் தூரத்தில் வேலூர் மார்க்கத்தில் உள்ள மேற்படி பழைய புராதனப் பட்டணத்தில் ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார் என்னும் பலமுறை சிறை சென்ற தேசத்தொண்டர் காலஞ்சென்ற கலைஞர் கிட்டப்பா ஞாபகார்த்தமாக கிட்டப்பா இலவச ஹிந்தி சங்கீத பாடசாலை நடத்தி வருகிறார்.

தமிழ்நாட்டிலே கவிஞர்களுக்கும் காலஞ்சென்ற தேச பக்தர்களுக்கும் ஞாபகர்த்தம் ஏற்படுத்தும் பல முயற்சிகள் நடந்து வருகின்றன. இதற்கு மத்தியில், கலைஞர் கிட்டப்பாவின் ஞாபகார்த்தத்தை நிலைநாட்டவும் அவர் பெயரால் ஒரு ஸ்தாபனத்தை நிறுவவும் ஒரு தேசபக்தத் தொண்டர் பெரு முயற்சி செய்து வருகிறார் என்பது சிலருக்கு வியப்பு அளிக்கலாம். ஆனால், பதினைந்து – இருபது வருஷத்துக்கு முந்திய தமிழ்நாட்டு நாடக மேடையைப்பற்றி அறிந்தவர்களுக்கு அது ஆச்சரியமளிக்காது. அந்த நாளில் சங்கீதக் கலையிலும் நாடக் கலையிலும் பற்றுடையவர்களுக்கு ‘கிட்டப்பா’ என்று சொன்னால் உடம்பு புல்லரிக்கும்.

ஸ்ரீ கிட்டப்பாவின் நாடகத்தைப் பார்த்து அவர் மேல் அபிமானம் கொண்டவர்களைத் தவிர, அவருடன் நெருங்கிப் பழகிச் சிநேகிதர்களானவர்கள் அவருடைய

சிறந்த குணங்களுக்குத் தங்களுடைய இதயத்தைப் பறிகொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரி ஒருவர். "கிட்டப்பா பாடசாலை" யின் வருஷாந்திர அறிக்கையின் முன்னுரையில் ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார், ஸ்ரீ கிட்டப்பாவின் உயர்ந்த குணநலன்களைப் பற்றி எழுதியிருப்பதைப் படிக்கும்போது, மேற்படியார் இருவர்களிடமும் நமது மதிப்பு பன்மடங்கு உயர்ந்துவிடுகிறது.

"மனிதர் என்றால் இவர் அல்லவா மனிதர்!" என்றும், "சிநேகம் என்றால் இதுவல்லவா சிநேகம்!" என்றும் எண்ணிப் பூரித்துப் போகிறோம்.

ஸ்ரீ எஸ்.ஜி.கிட்டப்பா அவருடைய காலத்தில் நாடக மேடையில் இணையற்ற கலைஞராய் விளங்கினார். தமது அபூர்வ இனிமை வாய்ந்த சாரீரத்தில் அற்புத கந்தவர்வகானத்தை பொழிந்து லட்சக்கணக்கான தமிழர்களைப் பரவசப்படுத்தினார். அவருடைய நாடகம் ஒன்றைப் பார்த்தவர்கள் அதைப்பற்றி ஒரு வருஷம் வரையில் பேசிக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட கலைஞர் பன்னிரண்டு வருஷத்துக்கு முன் காலமானார். அவருக்கு ஒரு ஞாபகச் சின்னத்தை நிலைநாட்ட வேண்டுமென்று எண்ணி அதற்கான பிரயத்தனம் வேறு யாரும் தொடங்கவில்லை. அத்தகைய எண்ணம் தேசத் தொண்டர் ஸ்ரீ கிட்டப்பாவுடன் நெருங்கிப் பழகி அவருடைய தேசபக்தி, தயாள குணம் இவற்றை நன்கு அறிந்திருந்தபடியால் ஸ்ரீ அனந்தாச்சாரியாருக்கு மேற்படி எண்ணத்தை, நிறைவேற்றுவதில் ஆர்வமும் ஊக்கமும் ஏற்பட்டன. சாதாரணமாய்ப் பல பெரிய மனிதர்கள் சேர்ந்து பெரும் பிரயத்தனங்கள் செய்து நடத்த வேண்டிய ஒரு காரியத்தைத் தன்னந்தனியாகத் தொடங்கித் தீரத்துடனும், படிவாதத்துடனும் நடத்தி வருகிறார். தேசத்துக்கு மிகவும் உபயோகமான முறையில் நடத்தி வருகிறார். எவ்வளவோ இடையூறுகளையும் தடங்கல்களையும் சமாளித்துக்கொண்டு தளரா ஊக்கத்துடன் நடத்தி வருகிறார்.

இதற்குப் பரிகாரமாக ஆக்கூர் அனந்தாச்சாரியார் இன்னொரு காரியமும் செய்திருக்கிறார். குழந்தைகளுக்கெல்லாம்

தக்களியில் அபூர்வமான திறமையுடன் நூல் நூற்கக் கற்றுக் கொடுத்திருக்கிறார்!

பணம் இல்லாத குறைதான்

இந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெண்கள் தங்களுக்கும் தங்கள் கணவர்மார்களுக்கும் வேண்டிய துணிமணிகளுக்கு நூல் நூற்றுக் கொடுத்துவிடுவார்கள். கல்யாணம் செய்துகொள்கிறவனுக்கும் பாதி குடும்பக் கவலை விட்டது!

நவம்பர் 20ம் தேதி கிட்டப்பாவின் பன்னிரண்டாவது வருஷாப்திக தினமும், கிட்டப்பா இலவச ஹிந்தி சங்கீத பாடசாலை ஆண்டு விழாவும் வாலாஜா பேட்டையில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் கொண்டாடப்பெற்றன. இந்த விசேஷமான வைபவத்தைக் கண்டும் கேட்டும் களிக்கும் பாக்யம் எனக்கும் கிடைத்தது. ஆக்கூர் அனந்தாச்சாரியாரின் தொண்டை வாலாஜா பேட்டை வாசிகள் எவ்வளவு தூரம் மதித்துப் பாராட்டுகிறார்கள் என்பதை நேரில் பார்த்தேன். கிட்டப்பா ஞாபகார்த்த பாடசாலைக்குத் தர்மமாகக் கிடைத்திருக்கும் நிலத்தையும் அதில் நாட்டப்பெற்றிருக்கும் அஸ்திவாரக் கல்லையும் பார்த்தேன். ராஜாஜியின் அரிய சொற்பொழிவைக் கேட்டேன். ஆக்கூர் அனந்தாச்சாரியாரின் உருக்கமான பேச்சைக் கேட்டேன். அன்றிரவு சங்கீத வித்வான் மாயவரம் ராஜம் அவர்கள் செய்த அரிய தமிழிசைக் கச்சேரியையும் கேட்டுக் களித்தேன்.

எல்லாம் வெகு திருப்திகரமாக இருந்தது. நல்ல கலைஞருக்கு ஞாபகார்த்தம். ஸ்தாபனம் வெகு நல்ல ஸ்தாபனம். வேலை மிக மிக உபயோககரமானது. நடத்துகிறவர் அரியய தேசத் தொண்டர். ஒரே ஒரு குறைதான் தெரிந்தது. அது நல்ல முயற்சிகளுக்கெல்லாம் உலகத்தில் சாதாரணமாக ஏற்படுகிற குறையேயாகும். வேறு என்ன? பணம் இல்லாத குறைதான்!

என் அருமைத் தம்பி கிட்டப்பா

என் அருமைத் தம்பி கிட்டப்பா என்று எஸ்.ஜி. நாடக மன்றத் தலைவர் எஸ்.ஜி.காசி அய்யர் எழுதிய கட்டுரை இதோ;

இறைவன் அடியை அடைந்த இசை மேதை எனது அருமைத் தம்பி கிட்டப்பாவின் வாழ்க்கையில் நிகழ்ந்த சில குறிப்புகளை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

1912-ல் நாடக ஆசிரியர் தவத்திரு சங்கரதாஸ் ஸ்வாமி அவர்கள் நாடகக் கம்பெனி மதுரை பெரிய தகரக் கொட்டகையில் நாடகம் நடத்தி வந்தார்கள். அத்தருணம் ஸ்வாமியின் மாணக்கர்களாகிய நான், என் சகோதரர்கள் எஸ்.ஜி.சுப்பையர், காலம் சென்ற எஸ்.ஜி.செல்லப்பா ஐயர், நிரந்தர நடிகர்களாக இருந்து வந்தோம். ஒரு நாள் நாடக ஆரம்பத்தில் சூத்திரதார் விதூஷகன் பிரவேசம் ஆனதும் பிரபல்யமான சிரிப்பு நடிகர் ஸ்ரீ எஸ்.வி. ஸேதுராம ஐயர் திடீரென்று ஸைடு விங்ஸ் பக்கம் நாடகம் பார்க்க நின்ற 6-வது நிரம்பிய எனது தம்பி கிட்டப்பாவை மேடையில் தூக்கி நிறுத்தி இரண்டொரு துதிப் பாடல்களை பாடவைத்தார். அதுதான் கிட்டப்பாவிற்கு நாடக ஆரம்பப் பிரவேசம்.

1912 பிற்பகுதியில் சங்கரதாஸ் கம்பெனியார் திருச்சி பாலக்கரை கொட்டகையில் சுமார் 6 மாதகாலம் பல நாடகங்களை நடத்தி வந்தார்கள். அது சமயம் பிரதி நாடகத்திற்கும் ஆரம்பத்தில் தம்பி கிட்டப்பா நடிகனாகத் தோன்றி சபை வணக்கம், பிள்ளையார், சரஸ்வதி துதிகள் பாடுவது வழக்கம். ஒரு தினம் நாடகத்தன்று காலையில் மதுரையில் இருக்கும் தாயாரை நினைத்துக் கொண்டு கிட்டப்பா யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் காலை 10.00 மணிக்கு திருச்சியிலிருந்து புறப்படுகிற 109 திருவனந்தபுரம் பாசஞ்சரில் மாலை 5 மணிக்கு மதுரையில் இருக்கும் எங்கள் பெற்றோர்களிடம் வந்து சேர்ந்துவிட்டான், அன்று நாடகமும் நின்றுவிட்டது.

குழந்தை அலாவுதீன்

1913 முற்பகுதியில் ஸ்ரீ எஸ்.ஜி.ஸ்வாதிநாத முதலியார், வி.பி.ஜானகி அம்மாள் அவர்களின் நாடக குழுவோடு குழந்தை கிட்டப்பாவோடு நாங்கள் நாலு சகோதரர்களும் மலேசியாவிற்கு சென்றோம். அங்கு பின்னாங்கு, கேலாலம்பூர், ஈபோ, டைப்பிங், சிரம்பால், ஜோஹீர், சிங்கப்பூர் முதலிய இடங்களில் நாடகங்கள் நடந்து வந்தது. சிங்கப்பூரில் எனது

கிட்டணை, அலாவுதீன் அல்லது அற்புத தீபம் என்ற நாடகத்திற்கு குழந்தை அலாவுதீனாக காலஞ்சென்ற ஆர்டிஸ்ட் டி.பொன்னுசாமி பிள்ளை அவர்கள் தயார் செய்து அலாவுதீன் நாடகத்தில் கிட்டப்பாவிற்கு புகழை தேடித்தந்தார்.

குறுக்குத்துறை முருகன் சன்னதியில்

பிறகு தாயகம் திரும்பி பல கம்பெனிகளில் நடிகர் தொழிலை நடத்தி ஜீவித்து வந்தோம். ஒரு சமயம் நாங்கள் திருநெல்வேலியில் இருக்கும்பொழுது தாமிரபரணி ஆற்றில் குறுக்கு துறைக்குச் சென்று நீராடி விட்டு குறுக்குத்துறை முருகன் சன்னதியில் ஆண்டவனை தரிசித்துக் கொண்டிருக்கும்பொழுது கிட்டன் தானாகவே “ஈராறு காதிலே” என்று பிள்ளைத் தமிழைப் பாட ஆரம்பிக்க, மயக்க முற்று கீழே விழுந்து, நினைவற்ற நிலையலிருந்து பிறகு எழுந்தான். அன்று தான் சாஸ்திரீய சங்கீதம் அனாயசமாக பாட கிட்டனுக்கு முருகன் அருள் புரிந்தான்.

1916–ம் வருஷம் யாழ்ப்பாண புத்துவாட்டி இரத்தினம் பிள்ளை நாடக கம்பெனிக்கு நாங்கள் சகோதரர்கள் ஐவரும் சிலோனுக்கு போனோம். சில மாதங்கள் கழித்து எங்கள் சகோதரர்கள் சுப்பையர், செல்லப்பா ஐயர் இருவரும் மதுரைக்கு வந்துவிட்டார்கள். நானும் கிட்டனும் எங்கள் மூத்த தமையனார் அப்பாத்துரை ஐயர் அவர்களுடன் சில மாதங்கள் சிலோனில் பல நகரங்களில் நடந்த நாடகத்தில் கிட்டன் நடிகனாகவும் நான் ஆர்மோனியம் வாசிப்பதும் இப்படியாக தொழிலை நடத்தி தாயகம் திரும்பி மதுரையில் பெற்றோர்கள் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தோம்.

புகழ்பெற்ற நடிகரும் நாடகத் தயாரிப்பாளருமான காலம் சென்ற சி.கன்னையா அவர்கள் எங்கள் சகோதரர்கள் சுப்பையர், செல்லப்பா ஐயர் இவர்களை தனது கம்பெனியில் சேர்த்துக்கொண்டு 1919–ம் வருடம் சென்னையில் ராயல் தியேட்டரில் நாடகங்களை நடத்தி வந்தார். நான், கிட்டப்பா, அப்பாத்துரை அண்ணா மதுரைக்கு வந்து சேர்ந்த விவரமறிந்த ஸ்ரீமான் சி.கன்னையா அவர்கள் எங்கள் பெற்றோர்களிடம் உங்கள் புத்திரர்கள் பஞ்ச பாண்டவர்கள் போல ஐவர், என் பெயரோ கண்ணன் ஆகையால் பஞ்சபாண்டவர்களைக்

கண்ணன் காத்ததுபோல் நான் உங்கள் பிள்ளை ஐவர்களையும் காப்பாற்றுகிறேன் என்று உறுதியளித்து என்னையும், கிட்டனையும் அண்ணாவையும் சென்னைக்கு கூட்டிச் சென்றார். நாங்கள் சென்ற மறுதினம் சனிக்கிழமை இரவு வள்ளி திருமணம் நாடகம், அதில் சுப்பையர் வேலனாகவும், செல்லப்பா ஐயர் வள்ளியாகவும், தம்பி கிட்டப்பா நாரதராகவும் பிரவேசிக்கும் தருணம் ஆரம்பப் பாட்டு கரஹரப்ரியா ராகத்தில் பட்டணம் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் சுருதியான “சங்கல்பமே” என்றதில் அனுபல்லவியான பங்கேருகா என்று கிட்டன் பாட ஆரம்பித்து கண்ணனின் குழலோசையைப் போல் அமைந்த தனது குயிலினும் இனிய தொனியால் பாடி, ரசிகப் பெருமக்களை பரவசப்படுத்தி எய்திய புகழ் அன்றும், இன்றும், என்றும் மங்காது விளங்குகிறது. அந்தக் காலத்தில் கிட்டப்பாவின் நடிப்புத் திறனையும், இசைத்திறனையும் மெச்சிய பிரமுகர்கள் பலபேர்கள் உண்டு. அவர்களில் சிலரைக் குறிப்பிடுகிறேன். பெஸன்ட் அம்மையார், கர்னெல் வெட்ஜ் உட் எம்.பி. மேன்மைதங்கிய லார்டு வில்லிங்டன் பிரபு, வைகவுண்ட் கோஷன் பிரபு, பரத்வான் மகாராஜா, உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளான ஸர் எஸ்.மணி ஐயர், டி.வி.சேஷகிரி ஐயர், குமாரசுவாமி சாஸ்திரிகள், வி.வி.சீனிவாஸ ஐயங்கார், பிரதம நீதிபதியாய் இருந்த ஸர் அப்துல் ரஹிம், ஸர் ஸி.பி. அவர்கள், சத்தியமூர்த்தி அவர்கள் (மகாகனம்) Right Honourable சாஸ்திரிகள், மஹான் விஷ்ணுதிகம்பர் முதலியவர்கள் கிட்டனின் நடிப்பையும், இசையையும் ரசித்து மெச்சி, தோடா, மெடல், நற்சான்றிதழ் கொடுத்தார்கள்.

ஸ்ரீ சி, கன்னையா அவர்கள் சுமார் மூன்று லட்ச ரூபாய் அளவில் தசாவதாரம் நாடகம் தயார் செய்து கொண்டிருக்கும் சமயம் பொருள் பற்றாக்குறை ஏற்பட, புகழ்பெற்ற வெளி நடிகர்களை கிட்டனோடு சேர்ந்து ஸ்பெஷல் நாடகங்கள் நடத்தி பொருளை சம்பாதிக்க முயன்றார். அதில் குறிப்பிடத்தக்கவை புகழ்பெற்ற நடிகரும் எழுத்தறிவாளருமான ஸ்ரீ கே.எஸ். அனந்தநாராயண அய்யரை கிட்டனோடு நடிக்க சிரமப்பட்டு ஏற்பாடு செய்து, அய்யருக்கு புகழ் தந்த ஞானசவுந்திர என்ற நாடகத்தை வைத்து அய்யர் ஞானசவுந்திரியாகவும், கிட்டன் கதாநாயன் பிலேந்திரனாகவும் நாடகம் நடக்கும் சமயம்

பகுதி நாடகத்துக்கு மேல் ஞானசவுந்தரியிடம் அந்தப்புரத்தில் பிலேந்திரன் பக்கத்து தேசத்து அரசன் படையெடுப்பில் சிக்கிக்கொண்டிருக்கிறான்; நான் உதவிக்குப் போயாக வேண்டும் என்று விடை பெற்றுக்கொள்ளும் சமயம் ஸ்ரீ அய்யர் அவர்கள் கிட்டனை பேச விடாது நிறுத்தி சுமார், அரை மணி நேரம் பூக்கோர்த்தாற்போல் சரமாரியாக பேச, வியப்புடன் கவனித்து வந்த ரசிகர்கள் அய்யர் அவர்களிடம் கிட்டப்பா ஒன்றும் செய்துகொள்ள முடியாதென்று தீர்மானிக்கும் தருணம், கிட்டன் பின்புறம் கையைக் கட்டிக்கொண்டு ஸ்டேஜில் அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருக்க, ஞானசவுந்தரி வேடத்தில் இருக்கும் அய்யர், பிலேந்திரனாக நிற்கும் கிட்டனைப் பார்த்து, “நாதா, நான் உங்கள் பால் வைத்திருக்கும் அன்பு உங்களுக்குப் புரியவில்லையா?” நான் கேட்பதற்கு பதில் சொல்லாமல் பேந்த பேந்த விழித்துக்கொண்டு இருக்கிறீர்களே, என்று அய்யர் சொல்லி முடித்ததும், நாடகம் பார்க்கும் ரசிகர்கள் புயல் காற்றில் எழும் ஓசையைப்போல் கைதட்ட ஆரம்பிக்கும் தருணம், கிட்டன் ஜனங்களைப் பார்த்து கைகொண்டு சமிக்கை செய்ய, குழுமியிருந்த மக்கள் நிசப்தமாக ஆகிவிட்டார்கள். ஞானசவுந்தரி வேடத்தில் இருக்கும் அய்யரைப் பார்த்து பிலேந்திரனாக நிற்கும் கிட்டப்பா, “வனிதா மணியே, உன் கிஞ்சுக மொழிக்கு மெச்சுகிறேன், காட்டில் கை துண்டிக்கப்பட்டு அலறிக்கொண்டிருந்த உன்னை வேட்டையார்த்தம் வந்த நான் கண்டு உனக்கு ஆதரவு கொடுத்து பெற்றோர்களின் எதிர்ப்பையும் சமாளித்து உன்னை அன்புடன் மணந்து கொண்டேன். பக்கத்து நாட்டு அரசனிடம் பகைவர் படையெடுத்து நிற்க, என் உதவியை நாடி அழைப்பு வந்தமையால் நான் உதவிக்குப் போக வேண்டிய தருணத்தில், என் மேல் வைத்த அன்பின் காரணமாக நீ என்னை பிரிய மனமில்லாதவளாய் நிறுத்தி பேசுகிறாயே அதை உன் பாங்கிமார்கள் யாராவது கவனித்து, நமது அரசன் போக வேண்டிய அவசரமென்ன, அவரை நிறுத்தி வைத்துக் கொண்டு சந்தர்ப்ப சூழ்நிலை உணராது நமது ராணி பேசிக் கொண்டிருக்கிறாளே, நமது ராணி சுத்த வாயாடி போலிருக்கிறதே என்று பரங்கிமார்கள் நினைப்பார்கள் என்பதை கருத்தில் கொண்டு, பரங்கிமார்கள் யாராவது இருக்கிறார்களா என்று அங்கும் இங்கும் கவனித்தேன், வேறென்றும் இல்லை.”

என்று சொல்லி முடித்தவுடன் கிட்டனின் சமயோஜித பதிலைக் கேட்ட ரசிகப் பெருமக்கள் பரவசமடைந்து தங்களை மறந்து கரகோஷம் செய்தார்கள்.

கன்னையா கம்பெனியோடு நாங்கள் திருச்சியில் தேவர் ஹாலில் முகாம் செய்து தசாவதாரம் நாடகம் சுமார் 200, தினந்தோறும் நடத்தி முடிந்த சமயம், 1925–ல் நான், கிட்டப்பா ஸ்ரீ சி.கன்னையா கம்பெனியை விட்டு விலகிக் கொண்டோம். அங்கு பெரும் நிலச்சுவான்தார்களான சிங்கம் ஐயங்கார், கஸ்தூரி ஐயங்கார், சீமி என்று அழைக்கப்படும் சீனிவாஸ ஐயங்கார் சகோதரர்கள் மூவர், தொழிலதிபர் சேஷசாயி முதலியவர்களின் நட்பும், ஆதரவும் எங்களுக்கு கிடைத்தது. நாங்கள் கன்னையா கம்பெனியை விட்டு விலகியதை அறிந்து, கொழும்பிலிருந்து கே.பி.சுந்தராம்பாளுக்கு ராஜபார்ட்டாக கிட்டனையும், என்னை பக்க மேளத்திற்கும் பேச வந்தார்கள். ஆறு நாடகத்திற்கு ஒப்பந்தம் செய்து கொழும்புவிற்குப் போனோம். அங்கு கே.பி.எஸ்.ஸை வைத்து சுமார் ஒரு வருஷம் நாடகம் நடத்தி வந்தார்கள். கதாநாயகனாக யார் வந்தாலும், ஒரு நாடகத்துக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாது இருக்கும் சமயம் அது. நானும் கிட்டனும் கொழும்புவிற்கு போய் இறங்கிய அன்று ‘வள்ளி திருமணம்‘. கே.பி.எஸ். வள்ளியாகவும், கிட்டன் வேலனாகவும், நான் பக்க மேளமாகவும், நாடகம் துவங்கினதும், கே.பி.எஸ். முதற்பாட்டாக ‘சாரமதி’ ராகத்தில் ஆதி தாளத்தில் “மோட்சமகலதா” என்ற கிருதியின் அனுபல்லவியான ‘சட்சாத்காரிணி’ என்று அவளது இனிய தொனியில் பாடக் கேட்ட நானும், கிட்டனும் மெய்மறந்து விட்டோம். நான், கிட்டனை எச்சரிக்கை செய்தேன். கழுகாசல சீனில் கிட்டப்பா ‘தக்கோரபிமான’ என்ற வேதநாயகம் பிள்ளை கீர்த்தனையை தேவகாந்தாரியில் பாடக்கேட்ட, ஸ்ரீமதி கே.பி.எஸ். பிரமித்து அசைவற்று நின்றாள். இவர்கள் ஒருவருக்கொருவர் பொருத்தமான ஜோடி என்று தங்களை நிர்ணயித்துக் கொண்டார்கள். இவர்கள் இரண்டு பேரும், தினைப்புண சீனில் ஒருவருக்கொருவர் சளைக்காமல் பிரசண்ட மாருதமாய் கான மழையை பொழிந்து ரசிகர்களை பரவசமாக்கினார்கள்.

கிட்டன் கவிகுஞ்சர பாரதி பாடலில் சுத்த சாவேரிராகத்தில், "எல்லோரையும் போல என்னை எண்ணலாகுமோடி, போடி" என்று பாடியவுடன் சபையினர் விண் அதிர கரகோஷம் செய்தார்கள். கே.பி.எஸ். தாயகம் திரும்பியவுடன், அதை அறிந்த எங்கள் தமையனார் அப்பாத்துரை அய்யரும், கே.பி.எஸ். மாமா மலைக்கொழுந்துவும் ஒப்பந்தம் செய்து கொண்டு காரைக்கால் திருநாவலூர், கும்பகோணம், மாயவரம், தஞ்சை முதலிய இடங்களில் புரட்சிகரமாய் நாடகங்களை நடத்தி வந்தார்கள். தஞ்சை மாவட்டத்திலுள்ள பெரும் நிலக்கிழார்களான கடைக்காநெல்லூர் கே.மருதநாயகம் பிள்ளை, மேனாங்குடி மருதவாணம் பிள்ளை, பட்டுக்கோட்டை நாடிமுத்துப் பிள்ளை, கபிஸ்தலம் மூப்பனார் இவர்களைப் போன்ற பெரியவர்கள் அறிமுகமானார்கள். இதன் மத்தியில் கே.பி.எஸ்.ஸீம், கிட்டனும் ஒருவருக்கொருவரின் நேசத்தை அறிந்த, எங்கள் தமையானர் அப்பாத்துரை அய்யர், கே.பி.எஸ். மாமாவிடம் கலந்து கிட்டனுக்கும், கே.பி.எஸ்.ஸுக்கும் முறைப்படி திருமணத்தை முடித்து வைத்தார்கள். அவர்களது நாடகங்களைக் கண்டு ரசித்தவர்கள் பல்லாயிரக்கணக்கில் உண்டு. ஒரு சமயம், இசைத்தட்டு இரண்டாம் முறை கொடுத்து வந்த தருணம், மாதம் சித்திரை எங்கள் ஊரில் நாங்கள் இருக்கும் சந்தர்ப்பம் நாதஸ்வர சக்கரவர்த்தி டி.என்.இராஜரத்தினம் பிள்ளை அவர்கள் எங்கள் இல்லத்தில் ஒருநாள் தங்கி கிட்டனோடு அளவளாவிக் கொண்டிருந்த தருணம். அன்றிரவு, இரண்டு பேர்களும் மாடியில் திறந்த வெளியில், வளர்பிறைச் சந்திரன் ஒளி வீச, இருவரும் உட்கார்ந்து கொண்டு சக்ரவாக ராகத்தில் "எட்டுலா பிரோத்துவோ" என்ற கீர்த்தனையை பாடி இருவரும் ஸ்வரம் பாடிக்கொண்டிருக்கும் சமயம், வெளியில் போய்விட்டு வந்த நான், கிட்டன் ஸ்வரம் பாடுவதைக் கேட்டதும், பிரமித்துப் போய்விட்டேன், என்னைக் கண்டதும் பாட்டு நின்று விட்டது.

இசை அரசர் எஸ்.ஜி. கிட்டப்பா

ஆக்கூர் அனந்தாச்சாரியார் எஸ்.ஜி.கிட்டப்பா மீது அலாதி பிரியம் கொண்டவர். ஆனந்த விகடனில் 1966களில் அவர் எழுதிய கட்டுரை இதோ;

நான் பதினாறு வயதில் பெற்றோரையும் சகோதர சகோதரிகளையும் இழந்து அநாதையாகி ஒரு நாள் சென்னை சைனா பஜார் ரோட்டிலுள்ள கிட்டப்பாவின் வீட்டின் மொட்டை மாடியில் நானும் கிட்டப்பாவும் உலாவிக் கொண்டிருந்தோம். திடீரென என் திக்கற்ற நிலையை நினைத்தேன். துக்கம் அதிகமாகிக் கொண்டு வந்தது. 'ஓ' வென சத்தம் போட்டு அலறினேன். "ஏனப்பா நீ அழுகிறாய்?" என்று கிட்டப்பா என்னிடம் கேட்டார். நான் வேதனையால் "எனக்கு யாரப்பா இந்த உலகத்தில் இருக்கிறார்கள்?" என் அநாதை நிலைமையை நினைத்ததும் துக்கம் பெரிதும் வருகிறது என்றேன்.

"அட பயித்தியமே! நீயா அநாதை யார் அப்படிச் சொன்னது? என் தந்தை, தாயார் தான் உன் பெற்றோர்கள். என் சகோதரர்கள் தான் உன் சகோதரர்கள். நான் தான் உனது கடைகுட்டித் தம்பி. உன்னை யார் அநாதையென்று சொன்னது? அது முற்றிலும் பொய். சொன்னவர்களைச் சொல்லு. அவர்களை தண்டிக்கிறேன்" என்று எனக்கு ஆறுதல் கூறி சமாதானப்படுத்தினார் கிட்டப்பா.

ஒரு முறை திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளையவர்கள் கிட்டப்பாவின் செங்கோட்டை வீட்டில் வந்து ஒரு வாரம் முகாம் போட்டார்கள். சாப்பிடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் கையும் குழந்தையுமாகத்தான் இருப்பார் பிள்ளைவாள். இடையிடையே கிட்டப்பாவையும் பாடச் சொல்லிக் கேட்பார்.

ஒரு நாள் பிள்ளையவர்கள் கிட்டப்பாவிடம் சொன்னார்; "தம்பி! இந்த காலத்து சங்கீத வித்வான்கள் யாரானாலும் சரி, நான் நாதஸ்வரத்தில் போடும் சங்கதிகளையும், உதிர்க்கும் ராகங்களையும் வாய்ப்பாட்டில் கேட்டால் நான் அவர்களுக்கு அடிமையாகி விடுகிறேன். நீ என்ன சொல்கிறாய்?"

கிட்டப்பா சட்டென்று பதிலளித்தார். "வந்த சங்கதிகள் வராமல் நான் பாடுகிறேன், பிர்க்காக்களும் அப்படியே! உன் சவாலை நான் ஏற்றுக்கொள்கிறேன், என்ன சொல்லுகிறாய்? பந்தயம் கட்டுகிறாயா?" இத்தகைய பதிலைப் பிள்ளையவர்கள்

ஒருவாறு சமாளித்துக்கொண்டு தம்பி, உனக்கா நான் சவால் விடுத்தேன்? பிறருக்கல்லவா அது! என்றார்.

சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த விஷயம், நான் அப்போதுதான் வேலூர் சிறையிலிருந்து விடுதலையானேன். ஒவ்வொரு முறையும் சிறைவாசம் முடிந்ததுமே நான் சில மாதங்கள் அவருடன் தங்கியாக வேண்டும் என்று கிட்டப்பாவின் அன்புக் கட்டளை. அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைக்க நான் செங்கோட்டை சென்றேன். கிட்டப்பா என்னை உள்ளன்புடன் வரவேற்று, இராஜோபசாரம் செய்தார். இவ்வாறு அநேக நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் மாலை நேரத்தில் தமது பூதாகரமான காரை ஷெட்டிலிருந்து எடுத்து வெளியே நிறுத்திக்கொண்டு குரல் கொடுத்தார் கிட்டப்பா. "எங்கே போகிறாய் நீ? நானும் வர வேண்டுமா?" என்று கேட்டேன் நான். "அவசியம் வரத்தான் வேண்டும்! உன் தலையணை உறையை (சட்டையை) சீக்கிரம் மாட்டிக் கொண்டு வர, நேரம் ஆகிவிட்டது. இப்பொழுது கிளம்பியாக வேண்டும்" என்றார் என் நண்பர்.

நான் உடனே உள்ளே போய் கதர் ஜிப்பாவை அணிந்து கொண்டு, கிட்டப்பா ஓட்ட, அவர் பக்கத்தில் உட்கார்ந்தேன். வாயு வேகம் மனோவேகத்தைப் போன்றே அவர் காரை அதிக வேகமாக ஓட்டினார்.

வழியில் ஓர் ஊர் வந்தது. அது பெயர் இப்போது மறந்துவிட்டது. அது திருநெல்வேலிக்கு அருகிலுள்ள ஓர் இடம் என்று நினைக்கிறேன்.

நாடகம் ஒன்றைக் காண கொட்டகை ஒன்றில் பிரவேசித்தோம் நாங்கள். தம்மை யார் என அறிந்து கொள்ள முடியாதபடி தலையில் முண்டாசு போட்டுக் கொண்டார் கிட்டப்பா. நாங்கள் இருவரும் எங்கள் ஆசனத்தில் அமர்ந்தோம். முதல் காட்சியில், கயிலை மலையில் முருக பெருமான் காட்சியளித்தார். முருகர் வேடம் பூண்டவர் மயில் மீது அரையும் குறையுமாக அமர்ந்து கொண்டு கையில் வேல் தாங்கி 'காயாத கானகத்தே' என்கிற பைரவி ராகத்தை

கீர்த்தனையாகப் பாடினார். அவர் பாடி முடித்தாரோ இல்லையோ, கிட்டப்பாவின் முண்டாசும் நீங்கியது. அதே சமயத்தில் பாடகருடைய பார்வையும் கிட்டப்பா மீது பட்டது. அவரால் தன் கண்ணையே நம்ப முடியவில்லை. 'மிரள மிரள' விழித்தார். உண்மையைக் கண்டு கொண்டார். அடுத்த விநாடி திரையும் விழுந்தது.

எம்.கே.தியாகராஜ பாகவதர்

திரை விழுந்ததும், "தாங்கள் கிட்டப்பா ஐயா இல்லையா? உங்களை உள்ளே அழைத்து வரச் சொன்னார்கள் எங்கள் முதலாளி" என்றான் வந்தவன். "வேண்டாம். நான் இங்கேயே உட்கார்ந்திருக்கிறேன். இங்கே சௌகர்யமாகத்தான் இருக்கிறது" என்று சொல்லிப் பார்த்தார் கிட்டப்பா, வந்தவன் விடேன் தொட்டேன் என்று அவரை உள்ளே அழைத்துப் போனான். நானும் கூடவே சென்றேன். மேடைக்குச் சென்றதும் கிட்டப்பாவின் முன் (ஓர் உருவம் 'தடா' லென்று விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தது! ஆம்!.... முருகன் வேடம் தாங்கியவரே அவ்வாறு செய்தார். அவரை கிட்டப்பா வாரியெடுத்து அனைத்துக் கொண்டு "அப்படியெல்லாம் செய்யக்கூடாது" என்று அன்போடு செல்லமாக அதட்டினார்.

வேஷக்காரர் சொன்னார்; "சுவாமி! தாங்கள் என் எதிரில் உட்கார்ந்தால், எம்மால் நடிக்கவோ, பாடவோ முடியாமல் அவஸ்தைப் படுகிறேன். என் கை, கால்கள் நடுங்குகின்றன. ஆதலால் தாங்கள் மேடையிலே வீற்றிருக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அவர் யார் தெரியுமா? அவர் தான் பிற்காலத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய தியாகராஜ பாகவதர் அவர்கள். கிட்டப்பா சொன்னார். "நீ ஸுஸ்ஸுரமாக இனிமையாகத்தானே பாடுகிறாய்! என்னைக் கண்டு எதற்காகப் பயப்பட வேண்டும்? தைரியமாகப் பாடு!"

கிட்டப்பாவின் படத்திற்கு வணக்கம்

ஒவ்வொரு காட்சிக்கும் போய்த் திரும்பியதும் தியாகராஜ பாகவதரைக் கிட்டப்பா உற்சாகமூட்டினார். ஏகலைவன் துரோணரைத் தனது குருவாக நினைத்தது போலவே, பாகவதர்

கிட்டப்பாவை கடைசி நாள் வரை எண்ணியிருந்தார். எந்த நாடகத்திலும் வேஷம் போட்டுக் கொள்வதற்கு முன்னால் தமது பௌடர் பெட்டியிலிருக்கும் கிட்டப்பாவின் படத்திற்கு வணக்கம் போட்டுவிட்டே பௌடர் போட்டுக் கொள்வார் பாகவதர்.

1924ம் வருடம் சென்னை தண்டையார் பேட்டை பரமானந்த தாஸ் சோட்டாதாஸ் பங்களாவில் கிட்டப்பா, கிட்டம்மாளை மணந்து கொண்டார். கல்யாணத்திற்கு தென்னிந்தியப் பிரபல சங்கீத வித்வான்கள் அனைவரும் வந்திருந்தனர். மணமகனுக்கும் மணமகளுக்கும் நலங்குச் சடங்கு நடந்து கொண்டிருந்தது. திருச்சி ராஜு நலங்குப் பாட்டுக்களை வாங்கி குழலில் வாசித்துக் கொண்டிருந்தார். முடிவில் மங்களம் பாடும்போது தவில் வாசிப்பு பிரமாதமாக இருப்பதைக் கேட்டு ஓடி வந்து ரேழியில் பார்த்தார்; அங்கே, தட்சிணாமூர்த்தி பிள்ளை தவில் வாசித்துக் கொண்டிருக்கிறார்.

"ஏன் அண்ணா! நீங்கள் எப்போது தவில் வாசிக்க கற்றுக் கொண்டீர்கள்? நீங்கள் மிருதங்கமும் கஞ்சிராவும் வாசித்துத்தான் நான் பார்த்திருக்கிறேன். அதிருக்கட்டும், நீங்கள் இப்படிச் செய்யலாமா?" என்றார் கிட்டப்பா. பிள்ளைவாள் சொன்னார், "ஆண்டவனே! என் தம்பி கல்யாணத்திற்கு நான் எதை வேணுமானாலும் செய்வேன். இதிலென்ன கேவலம்!" அதோடு நிற்கவில்லை. "மாங்காய் பாலுண்டு மலைமேலிருப்போர்க்கு தேங்காய்ப் பால் ஏதுக்கடி?" என்கிற சித்தர் பாடலையும் பதினைந்து நிமிடங்களுக்கு மிகவும் உருக்கமாகப் பாடி, வாய்ப் பாடகராகவும் காட்சியளித்தார். உணர்ச்சி வசப்பட்டவராய் கிட்டப்பா, "பேஷ் பேஷ்!" என்று தன்னையும் அறியாமல் இடையிடையே கூச்சலிட்டு வெகுவாக ரசித்தார்.

சங்கீத மேதை கிட்டப்பா

ஆக்கூர் அனந்தாச்சாரி தனது அரசியல் நினைவு அலைகள் நூலினை கோவை மெர்க்குரி புத்தகக் கம்பெனி 1968இல் வெளியிட்டது. அதில் 68வது பக்கம் முதல் 83வது பக்கம் வரை ஆக்கூர் ஆனந்தாச்சாரி எழுதிய கட்டுரையின் சில பகுதிகள் இதோ;

நானும் ஜமதக்னியும் கிராமந்தோறும் சுற்றி மாந்தரிடை தேசபக்தி குன்றாதவாறு இருக்கச் செய்ய முயன்றோம். அவ்வப்போது சங்கீத மேதையும், தேசபக்தருமான கிட்டப்பா இருக்கும் செங்கோட்டைக்குப் போய் வருவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டிக் கொண்டு இருந்தது. தென்னாட்டின் சிறந்த சங்கீதப் புலவர்கள் அவர் இல்லத்திற்கு வந்து கிட்டப்பாவைச் சந்தித்து அவர் கையால் 'சன்மானம்' பெற்ற பிறகே தம் பிறவி உய்யப் பெற்றோம் என்று கருதுவர். நாதசுவரப் புலவர் இராஜரத்தினம் பிள்ளை கிட்டப்பா வீட்டில் விலகாமல் இருந்ததைக் கண்டு வியப்புற்றேன். கிட்டப்பா பாடுவதை நாதஸ்வரத்தில் அப்படியே வாசித்துக் காட்டுவார். ஒரு நாள் இராஜரத்தினம் பிள்ளை கிட்டப்பாவிடம் செருக்குடன் கூறுவதை நான் நேரில் கேட்டேன்."இதோ பார் தம்பி! நான் நாதஸ்வரத்தில் பிடிக்கும் பிர்க்காக்களை தற்கால வாய்ப்பாட்டுக்கு இசைப் புலவர்கள் யாராவது பிடிக்க முடியுமா? அறைகூவுகிறேன்." இதனைக் கேட்டு, வெண்முத்து வரிசைகள் இளநிலவு வீசப் புன்முறுவல் பூத்தவராய் கிட்டப்பா விடை பகர்ந்தார். "நான் பிடிப்பேன் அண்ணா. வேண்டுமென்றால் பரீட்சை செய்துபார்?". அதனைக் கேட்டுத் தழுதழுத்த குரலில் இராஜரத்தினம் சொன்னார். "உன்னைக் கவனத்தில் வைத்துக் கொள்ளவில்லை தம்பி! உன்னைத் தவிர்த்து மற்ற இசைப்புலவர்களைப் பற்றித்தான் கூறுகிறேன்."

கிட்டப்பாவின் எல்லையற்ற இசை ஞானம், தேசபக்தி இரண்டுமே என் உள்ளத்தை ஈர்த்தன. அநேகமாக கதராடையே உடுத்துவார். காங்கிரஸ் நிதி திரட்டப்பெற்றது. அப்போது தம் பேனாவை ஒரு கூட்டத்தில் அளித்தார். அது ஏலம் போடப்பெற்றது. 50 ரூபாய்க்குப் போயிற்று. மீண்டும் மறு ஏலம் போடப்பெற்றது. அதனை 100 ரூபாய்க்குத் தாமே எடுத்துக்கொண்டு தொகையை அப்போதே அளித்து விட்டார். அவருக்கு காங்கிரசில் மிகுந்த பற்று இருந்தது. காந்தியடிகளிடத்தில் எல்லையற்ற பக்தியும் மதிப்பும் இருந்தன. ஒரு சமயம் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு இராஜப்பிரதிநிதி விஜயம் செய்தார். திருவாங்கூர் போலீசார் கிட்டப்பா வீட்டிற்குப் பெரும் எண்ணிக்கையில் வந்தனர். போலீஸ் கமிஷனர் தலைமை வகித்தார். கிட்டப்பாவைக் கண்டு,

“உமது இல்லத்தில் ஆக்கூர் ஆனந்தாச்சாரியர் என்ற ஓராள் இருக்கின்றார். அவரிடம் கைத்துப்பாக்கி இருக்கிறது என்று கேள்விப்பட்டோம். வைசிராய் விஜயம் செய்ய உள்ளார். அவர் பாதுகாப்பு எம் கையில் உள்ளது. அனந்தாச்சாரியாரை சமஸ்தானத்தினை விட்டு அப்புறப்படுத்த வந்தோம்“ என்றார். கிட்டப்பா நகைத்து “அனந்தாச்சாரியார் அப்படிப் பட்டவர்?” என்று வினவியவராய் என்னை அழைத்தார்.

“பாருங்கள் சார், இவர் எவ்வளவு குள்ளமாக இருக்கிறார். இவர் அஹிம்சைக் கொள்கைக்காரர். ஒரு கன்னத்தில் ஒருவர் அறைந்தால், மற்றொரு கன்னத்தை அவருக்கு காட்டும் ஏசுநாதர் போதனையை யேற்றவர். அவரை நான் நெடுநாள் அறிவேன். நீங்கள் சொன்னது போன்று பயங்கரப் புரட்சிக்காரராகத் தென்படவில்லை; காந்தியவாதி என்றே எனக்குக் காட்சியளிக்கிறார். இவ்வளவு சிறிய மனிதரிடம் அச்சப்படுகிற ஒரு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆற்றலும் தைரியமும் பாராட்டுதற்குரியன” என்றார்.

இதைக் கேட்ட போலீஸ் அதிகாரி, “அவர் எம் பார்வை முன் ஆபத்தான பேர்வழியே; அவரை உமது இல்லத்தில் சேர்த்து வைத்திருப்பது உமக்கே கேடு விளைவதாகும், சொல்லிவிட்டோம்“ என்றார்.

கிட்டப்பா, “என்ன அப்படிச் சொல்லி என்னைப் பயமுறுத்துகின்றீரா? என் உயிர் நண்பனுக்குப் புகலிடம் தருவது என் போன்றவர்தம் கடமையாகும். அவர் என் வீட்டில் இருத்தலால், நீங்கள் என்னை கைது செய்தாலும் பொருட்படுத்த மாட்டேன்” என்றார்.

போலீஸ் அதிகாரி, “அவரை வெளியேற்றுவது எங்கள் கடமை; மேலதிகாரியின் கட்டளை. நீங்களாக அவரை அனுப்பாமற் போனால், அவராகவே வெளியேறாவிட்டால், நாங்கள் அவருக்குக் குவிட் (வெளியேற்று) ஆர்டர் தரவேண்டி இருக்கும்“ என்றார்.

நான் யோசித்தேன். நானாக வெளியேறிவிட்டால் குவிட் ஆர்டர் எனக்குப் பலவந்தமாக வழங்கி விடுவார்கள். பிறகு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருக்கும் வரை

செங்கோட்டைக்குப்போக முடியாது. ஆதலின் வெளியேறுவதே தக்கது என்று முடிவு செய்து சொன்னேன், "கிட்டப்பா! நானே வெளியேறுகிறேன்; என்னால் உனக்கு எத்தீங்கும் நிகழலாகாது" என்று.

அதற்குக் கிட்டப்பா சொன்னார், "எனக்கு கஷ்டம் வரும் என்று பிரச்சினை என் மனத்தில் இல்லை. நீ, அடிக்கடி இங்கு வந்து போய்க் கொண்டிருக்க வேண்டும், அதற்குக் குந்தகம் விளையக்கூடாது" என்று.

நான் போலீஸ் அதிகாரி முன்பாகவே, கிட்டப்பாவிடம் விடை பெற்றுக் கொண்டு, மூன்று மைல் தொலைவில் உள்ள தென்காசிக்கு போய்விட்டேன். அங்குப் பிரிட்டிஷ் போலீசார் என்னிடம் கைத்துப்பாக்கி இல்லை என்று திருப்திபட்டனர். என்றாலும் வைசிராய் திருவாங்கூர் விஜயம் முடியும் வரை என்மீது கடுமையான கண்காணிப்பு வைத்திருந்தனர். அவர் விஜயம் முடிவுற்றதும் நான் செங்கோட்டைக்குப் போவதில் யாதொரு தடையும் இருக்கவில்லை.

நான் செங்கோட்டையை விடுத்துக் கிட்டப்பாவிடம் விடை பெற்றுத் தென்காசிக்குப் போனேனே, அங்குத் தினமணி ஆசிரியர் ஏ.என்.சிவராமனின் மாமனார் இல்லம் இருந்தது. அங்குச் சென்று நான் "என்னைக் கண்டு பயங்கரவாதி என்று என் நண்பர்கள் பலர் அஞ்சுகின்றனர்" என்றேன். "கிடக்கிறார்கள் அவர்கள், விடுங்கள், நீங்கள் என் வீட்டில் தங்குங்கள். நான் உமக்கு அடைக்கலம் தருகிறேன். அதனால் என்னைச் சிறைக்குள் தள்ளினாலும் குற்றமில்லை" என்று வீர முழக்கம் செய்தார். இராமாயண நிகழ்ச்சியொன்று எனக்கு நினைவிற்கு வந்தது. திருமால் அசுரருடன் போர் செய்து கொண்டிருந்தான். அசுரர் அஞ்சி ஓடிப் பிறகு முனிவர் இல்லாத போழ்து அவர்தம் தர்மபத்தினியிடம் புகலடைந்தனர். அஞ்சி வந்தவர்க் கபயம் ஈந்தாள் மாதர் திலகம். ஆசிரமத்துள் அசுரர் ஒளிந்து கொண்டனர். திருமால் வந்து அசுரர்களைத் தம் கைவசம் ஒப்படைக்க மாதினை வேண்டினார். "திருமாலே திரும்பிப் போ. அஞ்சினார்க்கு அடைக்கலம் ஈதலே சிறந்த அறம்" என்றாள் அம்மாதரசி. திருமால் வெகுண்டு சக்ராயுதத்தால் அவள் கழுத்தைச் சடக்கென்று அறுத்துவிட்டார். அடைக்கலம்

ஈத்து ஆருயிர் வழங்கினார் அப்பெண்மணி. அவர்தம் அஞ் சாமையைக் கோடான விளைவையும் பொருட்படுத்தாத ஆற்றலைச் சீதாராமய்யரிடம் கண்டு வியந்தேன்.

கிட்டப்பாவின் வீட்டிற்கு காயாப்பிரசாத் சிங் எனற லாகூர் வாசி, சிறந்த வடநாட்டுச் சங்கீதப் புலவர் தம் பரிவாரத்தோடு ஒரு சமயம் வந்தார். அவரை ஒரு மாதம் வரை. தம் வீட்டில் வைத்துக் காத்து, அவர் இசையமுதத்தை முகந்துண்டு அவருக்கு நிறைய சன்மானம் வழங்கி என்னுடன் அனுப்பி வைத்தார். அவருடன் வாலாஜாப்பேட்டைக்கு வந்தேன். ஜமதக்னி அவ்விசைவாணரை வரவேற்றார். வாலாஜாபேட்டையில் ஒரு கச்சேரி ஏற்பாடு செய்தோம். அவ்விசைப் புலவரின் சங்கீதத்தைச் சாத்திர ரீதியில் சுவைப்பவர் இல்லை. இருப்பினும், அவர் திறமையைக் கண்டு மாந்தர் வியந்தனர். நாக்கை வெளியே இழுத்துப் பிடித்துக் கொண்டு சரமாரியான பிர்க்கா அடித்ததை இன்றும் நான் மறக்கவில்லை. பிறகு அவரை லாகூருக்கு அனுப்பி வைத்தேன். அரசியல் பிரசாரத்துடன் அவ்வப்போது இசையையும் நுகர்ந்து வந்தோம். திருப்புகழ் வல்லுநர் ஒருவர் வந்தார். அவரை அழைத்துப் பலவூர்களில் கச்சேரி செய்ய வைத்தோம். ஜமதக்னி அவ்வப்போது என் அரை குறை சங்கீத அறிவு உதவி கொண்டு தேசீய கீதங்கள் இயற்றி வந்தார்.

ஸ்ரீமான் எஸ்.ஜி. கிட்டப்பா

1934இல் ஸ்ரீமான் எஸ்.ஜி. கிட்டப்பா என்று ஆக்கூர் அனந்தாச்சாரி எழுதிய நூல் முழுவதும் இதோ;

முன்னுரை

காலஞ் சென்ற ஸங்கீத நடிகர் ஸ்ரீமான் எஸ்.ஜி. கிட்டப்பாவின் ஜீவிய சரித்திரத்தை எழுதியுள்ள இந்நூலாசிரியர் இதற்கு முன்னுரையாக சில வார்த்தைகள் எழுத வேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டதற் கிணங்க சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மேனாட்டில் ஒவ்வொரு தேசத்திலும் அதிலுதித்த பிரபல மனிதர்களுடைய ஜீவிய சரித்திரமானது ஆயிரக்கணக்காக எழுதப்பட்டு வருகிற விஷயம் நாம் எல்லோரும் அறிந்ததே. ஆயினும் நமது நாட்டில் மாத்திரம் அப்படிப்பட்ட ஜீவிய சரித்திரங்கள் எக்காரணத்தினாலோ அதிகமாயில்லாததும் நாம் அறிந்த விஷயமே. ஆகவே பல துறைகளிலும் தேர்ச்சிபெற்று, நமது தாய் நாடாகிய தமிழ் நாட்டின் பெயரை முன்னுக்கு கொண்டு வந்த சிரேஷ்டர்களின் சரித்திரமானது வெகு முக்கியமானது என்பதைப்பற்றி நான் அதிகமாய் எழுத வேண்டியதில்லை.

காலஞ்சென்ற எனது நண்பர் ஸ்ரீமான் கிட்டப்பா அவர்கள் முக்கியமாக ஸங்கீதத்தில் தமிழ் நாட்டின் பெயரை, அத்தமிழ் பாஷையானது போற்றப்படும் எல்லா தேசங்களிலும் முன்னுக்குக் கொண்டு வந்தார் என்பது ஒருவராலும் மறுக்கக்கூடாத விஷயமாகும். அவரது ஜீவிய சரித்திரம் ஸங்கீத வித்வான்களுக்கும், நடிகர்களுக்கும் பல வழியில் வழிகாட்டியாயிருக்குமென்பது எனது அபிப்பிராயம். ஆகவே நாடக மேடையில் தேர்ச்சி பெற வேண்டுமென்ற நடிகர்களுக்கும் ஸங்கீத ஸங்கீதப் பிரியர்களுக்கும் இந்த ஜீவிய சரித்திரமானது மிகவும் பயன் தருமென்று நம்புகின்றேன்.

இப்புத்தகத்தை பலரும் வாங்கிப் படித்து இந்நூலாசிரியரை ஆதரிப்பாரென நம்புகிறேன்.

ப.சம்பந்தம்

சென்னை
23.12.33

சிறப்புரை

"தெய்வம் எவர்களிடத்தில் அன்பு காட்டுகின்றதோ அவர்கள் அற்பாயுசுகள்" என்று கிரேக்க பாஷையில் ஒரு பழமொழி உண்டு. அம்மாதிரியே எனது பால்ய நண்பர் ஸ்ரீமான் எஸ்.ஜி.கிட்டப்பா தனது 28வது வயதிலேயே காலகதியடைந்தார். அவருடைய அகால மரணம் தமிழ்நாட்டிற்கும், ஸங்கீத உலகிற்கும், நாடக மேடைக்கும் பெரிய தீராத நஷ்டமென்றே நான் கருதுகிறேன். பால்ய வயதில் நாடக மேடை மீதேறி தம்முடைய ஸங்கீதத்தின் மகிமையாலும், நல்ல நடிப்பினாலும் தமிழ் மக்கள் மனதையெல்லாம் கொள்ளை கொண்டார். மற்ற நாடுகளைப் போல் நமது நாட்டிலும் நடிகர்களுக்கும், பாடகர்களுக்கும் சரியான கௌரவம் கொடுப்பதாயிருந்தால் அவருக்குப் பெரிய பட்டம் கிடைத்து எல்லா கௌரவமும் வந்திருக்கும். அதில்லாவிட்டாலும் அவர் தம் நாட்டினரின் அன்பையும், ஆதரவையும் ஏராளமாகப் பெற்றார். என் சொந்த அனுபவத்தில் அவருடைய தேசபக்தியும், தாராள மனதும், சிநேக பாவமும் எனக்குத் தெரியும். அவர் இவ்வளவு சீக்கிரம் இறந்து போய்விட்டது என்போன்ற நண்பர்களுக்கு ஆராத் துயரத்தை அளித்திருக்கின்றது. அவருடைய வாழ்வின் பயனாக தமிழ்நாட்டில் இனிமேலாவது நல்ல நடிகர்களுக்கும், பாடகர்களுக்கும் தீர்க்காயுசு ஏற்பட்டு, சுகமாய் தேசத்திற்கும் தங்களுக்கும் நல்ல உதவி செய்வதற்கு வழி பிறக்குமென நம்புகின்றேன். அவர் சரித்திரத்தை எழுதி வெளியிடுவது மிகவும் நல்ல காரியமே.

எஸ்.ஸத்யமூர்த்தி

திருவல்லிக்கேணி
26.12.33

ஆசிரியர் குறிப்பு

முகநக நட்பது நட்பன்று செஞ்சத்து
அகநக நட்பது நட்பு - (திருக்குறள்)

ஸ்ரீமான் கிட்டப்பா எனது ஆருயிர் நண்பராவார். என்னைவிட அதிக அந்தஸ்தும், மதிப்பும் வாய்ந்த நண்பர்கள் அவருக்குப் பலர் உண்டு. ஆயினும் அவர் என்னிடத்தில் பிரத்யேகமான அன்பு காட்டி வந்தார். சிறுபிராயம் முதற்கொண்டே எங்களிருவருக்கும் நட்பு ஏற்பட்டது. அக்காலம் முதல் ஸ்ரீமான் கிட்டப்பாவின் உயிர் நீங்கும் வரையில் அந்நட்பு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. நாங்களிருவரும் ஒரே தாய் வயிற்றில் உதித்த சகோதரர்களாகவே வாழ்ந்து வந்தோம்.

ஸ்ரீமான் கிட்டப்பா ஸங்கீத உலகில் சம்பந்தப்பட்டவர், நானோ தேசப்பணியில் ஈடுபட்டுள்ளவன். ஆகவே நான் அடிக்கடி சிறை புகவேண்டிய அவசிய மேற்படுவதுண்டு. நான் சிறைக்குச் செல்லும்பொழுதெல்லாம் எனது பிரிவுக்காக ஸ்ரீமான் கிட்டப்பா எவ்வளவோ துயரங்கொள்ளுவார். ஒவ்வொரு முறையும், நான் சிறையினின்று வெளிவந்தவுடன் குறைந்தது ஆறுமாத காலத்திற்காவது தம்முடன் சேர்ந்து வசித்து ஓய்வெடுத்துக் கொள்ளும்படி அவர் என்னை அழைப்பதுண்டு, ஸ்ரீமான் கிட்டப்பா மட்டுமல்ல, அவரது குடும்பத்தினர் அனைவருக்குமே என் மீது அளவிலாப் பாசம் உண்டு. அவர்களது இத்தகைய சிநேகம் எனக்கில்லாமலிருந்திருந்தால், இளம் பிரயாத்திலேயே பெற்றோர்களையும், சகோதர, சகோதரிகளையும் பறிகொடுத்துவிட்ட எனது வாழ்க்கை மிக்க துக்ககரமானதாகவே இருந்திருக்கும்.

சமீப காலத்தில் சில சகவாச தோஷத்தால் ஸ்ரீமான் கிட்டப்பா தீய வழியில் இறங்குவதை நான் கண்டேன். அவரது ஆப்த நண்பனாயிருந்து எவ்வளவோ முயற்சிகள் செய்தும் அவரை அவ்வழியினின்று திருப்ப முடியாமல் போய்விட்டது. அப்பொழுதுதான் தீய வழக்கங்களின் கொடுமையை நான்

நன்குணர்ந்தேன். அவ்வழக்கங்களுக்கு அடிமைப்படுபவர்கள் தங்கள் அரிய தோழர்களின் உபதேசங்களுக்குச் செவிகொடுத்துக் கேட்டு, தங்கள் வாழ்க்கையைத் திருத்திக்கொள்ள முடியாத விபரீத நிலைமையை அடைந்துவிடுகின்றனர் என்பதற்கு எனது ஆப்த நண்பர் ஸ்ரீமான் கிட்டபாவின் வாழ்க்கையைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

நிற்க, ஸங்கீத உலகிற்கும், நாடக மேடைக்கும் அவர் செய்த அரிய சேவையை நாம் என்றும் மறக்கமுடியாது. அவர் இன்று நம்மிடையே உயிருடனில்லையாயினும், தேனினுமினிய அவரது பாடல்களை இன்னும் நாம் கிராமபோன் ரிக்கார்டுகள் மூலம் கேட்டு அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அவரது சரித்தரத்தைச் சுருக்கமாக எழுதி வெளியிடுவதே அவருக்கு நான் செய்யக்கூடிய சிறந்த கைம்மாறு என எனக்குத்தோன்றிற்று. இச்சிறு புத்தகத்தை எழுதியாவது ஸ்ரீமான் கிட்டப்பாவின் பிரிவினால் எனக்கேற்பட்டுள்ள வருத்தத்தை ஒருவாறு தீர்த்துக்கொண்டு, ஆறுதலடையலாமென நான் கருதினேன். இந்த எனது யோசனையை ஸ்ரீமான் கிட்டப்பாவின் குடும்பத்தினரும் முழுமனதுடன் ஆதரித்தனர். இத்தகைய நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கான சகல பொறுப்புகளையும் என்னிடமே ஒப்படைத்திருப்பதாக ஸ்ரீமான் கிட்டப்பாவின் சகோதரர், ஸ்ரீமான் எஸ்.ஜி.காசி அய்யர், சமீபத்தில் பத்திரிக்கைகள் மூலம் அறிவித்ததும் பொதுமக்களுக்குத் தெரிவித்தேன்.

அவருடன் அதிகமாக நெருங்கிப் பழகியவன் என்ற முறையில் அவரைப் பற்றி எனக்குத் தெரிந்த விஷயங்களையெல்லாம் இச்சிறு நூலில் வெளியிட்டிருக்கிறேன். என்னால் இயன்ற வரையில் தகவல்களைத் திரட்டி இதில் சேர்க்க முயற்சி செய்துள்ளேன். எனினும், இன்னும் சேர்க்க வேண்டிய விஷயங்கள் எவையேனுமிருந்து, அன்பர்கள் அவற்றைத் தயவு செய்து எனக்கு அனுப்பி வைப்பார்களானால் அடுத்த பதிப்பில் அவையும் இடம் பெறுமென அவர்களுக்கு உறுதி கூறுகிறேன்.

எனது வேண்டுகோளுக்கிணங்கி தமது பல அலுவல்களுக்கிடையேயும் இச்சிறு நூலுக்கு முன்னுரை எழுதி உதவிய ராவ் பஹதூர் **பி. சம்பந்த முதலியார்** அவர்களுக்கும், எனது

கோரிக்கையைப் பெருமகிழ்ச்சியுடன் ஏற்று சிறப்புரை வரைந்து கொடுத்த ஸ்ரீமான் **எஸ்.ஸத்யமூர்த்தி** அவர்களுக்கும், எனது மனமார்ந்த வந்தனைத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீமான் கிட்டப்பாவின் சரித்திர சம்பந்தமான தகவல்கள் என்னிடம் இருந்தனவெனினும், அவற்றைக் கோர்த்து எழுதி புத்தகமாக வெளியிடும் வேலையில் எனது பிரிய நண்பரும், சிறந்த காந்தி பக்தரும், கடந்த பத்து ஆண்டுகளாக பத்திரிகை தொழிலில் ஈடுபட்டு உழைத்து வருபவருமான **ஸ்ரீமான் சக்கரவர்த்தி ஸ்ரீனிவாசன்** எனக்கு பேருதவி செய்ததை நான் இங்கு குறிப்பிட வேண்டியதவசியமாகும். இப்புத்தகத்தில் வெளியிடுவதற்காக ஸ்ரீமான் கிட்டப்பாவின் படங்களில் சிலவற்றை கொடுத்துதவிய சென்னை, கர்னாடிக் ஸ்டுடியோ மானேஜர் அவர்களுக்கு எனது வந்தனம் உரித்தாகுக!'

– ஆக்கூர் அனந்தச்சாரி.

சென்னை,
28.12.33.

ஸ்ரீமான்
எஸ்.ஜி. கிட்டப்பா
அவரது சரித்திரச் சுருக்கம்

– ஆக்கூர் அனந்தச்சாரி.

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று – திருக்குறள்

நமது தாய் மொழியாம், தமிழ் மொழியானது மூவகைப் படும்; அதாவது இயல், இசை, நாடகம், இயற்றமிழ் என்பது தமிழ் மொழியில் பாட்டுகள் அல்லது கவிகள் இயற்றுவது; இசைத்தமிழ் என்பது அங்ஙனம் இயற்றப்படும் பாட்டுகளையோ அல்லது கவிகளையோ இசைத்து அல்லது ஒலித்துப் பாடுவது; நாடகத் தமிழ் என்பது தமிழ்ப் பாஷையில் நாடகங்கள் நடிப்பது. இயற்றுதல், இசைத்தல், நடித்தல் இம்மூன்றும் ஒருவரிடத்தில் ஒருங்கே அமைந்திருப்பது மிகவும் அரிதாகும். சிலர் பாட்டுகள் கட்டுவதில் சமர்த்தராக விருக்கின்றனர்.

வேறு சிலருக்குப் பாட்டுக்கள் கட்டத் தெரிவதில்லை; ஆனால் பிறரால் இயற்றப்படும் பாட்டுகளை வெகு அழகாகப் பாடும் ஆற்றல் அவர்களுக்குண்டு. இன்னும் சிலருக்குப் பாட்டுகளை இயற்றவோ அல்லது பாடவோ தெரியாமலிருக்கின்றது; ஆனால் தங்களது திறமை வாய்ந்த நடிப்பு மூலமாக அவர்கள் மகாஜனங்களின் மனதைக் கொள்ளை கொண்டு விடுகிறார்கள்.

இம்முத்தொழிலும் அல்லது அவற்றில் எந்த ஒரு தொழிலும் தமிழுலகிற்குச் செய்யப்படும் சேவையேயாகும். ஆகவே அத்தகைய அருஞ் சேவை புரியும் அல்லது புரிந்த ஒருவரைப் போற்றிப் புகழ்ந்து, வணங்க தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. இப்பொழுது நாம் எந்த ஒரு புருஷரின் சரித்திரத்தை எழுத முற்பட்டிருக்கிறோமோ அவர் அத்தகைய பாராட்டுதலுக் குரித்தானவரேயாவார். அவர் இசைத்தல், நடித்தல் இரண்டிலும் இணையற்ற கீர்த்தியுடன் திகழ்ந்தவர்.

ஓரிருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஸங்கீதப் பிரியர்களும், நாடக அபிமானிகளும் பரவசப்பட்டுக் கிடக்குமாறு பாடியும், நடித்தும் வந்த புருஷர் யார்? நாடக மேடைச் சங்கீதத்தில் நமக்கு நிகரில்லை யெனப் புகழ்க்கொடி நாட்டியவர் யார்? அரங்கமேடையில் முதன் முதலாக உயரிய ஸங்கீதக்கலை திருவிளக்கேற்றி வைத்தவர் யார்? நடிப்புச் சொகுசிலும் தேசத்தை மறவாதிருந்தவர் யார்? நாடகங்கள் நடித்து அவ்வப்பொழுது தேச ஷேம நிதிகளுக்குத் தாராளமாகப் பொருளுதவி புரிந்தவர் யார்? அவர் தான் ஸ்ரீமான் கிட்டப்பா!

தமிழ் பேசப்படுகிறவர்களிடையே ஸ்ரீமான் கிட்டப்பாவின் பெயர் வீட்டுச் சொல்லாகும். அவரது நடிப்பையும், ஸ்ங்கீதத்தையும் கேட்டு மகிழ்ந்தவர் பலர்; அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பவர்களின் தொகையோ அனந்தம். இப்பொழுது அவர் நம்மை விட்டுப் பிரிந்திருக்கும் நிலைமையில் அவரது வரலாறு பூராவையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் யாருக்குத் தான் ஏற்படாது?

பூர்வீகம்

ஸ்ரீமான் கிட்டப்பாவின் முழுப்பெயர் ஸ்ரீமான் செங்கோட்டை கங்காதரய்யர் கிட்டப்பா. சுமார் நூறு வருஷங்களுக்கு முன்பு திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம் தாலுகாவைச் சேர்ந்த ஆழ்வார்குறிச்சியில் பிராம்மண மரபிலே ஒருவர் தோன்றினார்; அவரது பெயர் ஸ்ரீமான் கைலாசமய்யர். அவர் தெய்வ பக்தி மிகுந்தவர்; அபார ஜோதிட ஞானம் படைத்தவர்; அஷ்ட ஸஹஸ்ர பிரிவைச் சேர்ந்தவர்; கோத்திரம் கௌசிக கோத்திரம், அவருக்குப் பூர்வீகமாக ஏதோ கொஞ்சம் பூஸ்திதி யிருந்தது. அதைக் கொண்டு தான் அவரது ஜீவனம் நடந்து வந்தது. காலக்கிரமத்தில், திருவாங்கூர் ராஜ்யத்தைச் சேர்ந்த செங்கோட்டை என்னுமிடத்தில் வசித்து வந்த ஸ்ரீமான் சூரியநாராயணய்யரின் புத்திரி சுப்புலக்ஷ்மிக்கும், அவருக்கும் விவாகம் நடந்தேறியது. சுப்புலக்ஷ்மியின் தகப்பனார் அதிகப் பணக்காரர்; ஆகவே ஸ்ரீமான் கைலாசமய்யர் தமது பத்தினிக்குத் தாயகத்திலிருந்து ஸ்ரீதனமாகக் கிடைத்த ஏராளமான திரவியத்தைக் கொண்டு அதிக கௌரவமாகக் காலங் கழித்து வந்தார். இவ்விருவருக்கும் பிறந்த குழந்தைகள்

மொத்தம் நான்கு. இரண்டாவது புதல்வர் ஸ்ரீமான் கை. கங்காதரய்யர் என்பவர். ஸ்ரீமான கைலாசமய்யர் தமது புதல்வனான கை.கங்காதரனை மிக்கச் செல்லமாக வளர்த்து, சிறிது ஆங்கிலப்படிப்பும் சொல்லி வைத்து, அவரது 23–வது பிராயத்தில் செங்கோட்டை மீனாஷிசுந்தர சாஸ்திரிகளின் புதல்வி 11 வயதுடைய மீனஷியம்மாளை அவருக்கு மணம் செய்து வைத்தார். விவாகமான சிறிது காலத்திற்கெல்லாம் ஸ்ரீமான் கெங்காதரய்யர் தமது பெற்றோர்களை இழந்தார். பெற்றோர்களிறந்த சொற்ப வருடங்களுக்குள்ளாகவே அவர் சில நண்பர்களுடன் கூடிக்கொண்டு தமக்கு தாய் வழியாய்க் கிடைத்த ஆஸ்தி பூராவையும் இழக்கலானார்.

புத்திரப்பேறு

இவருக்கு விவாகமாய் சுமார் 25 வருடங்களுக்குள்ளாக 7 ஆண் குழந்தைகளும் 3 பெண் குழந்தைகளும் ஆக மொத்தம் 10 குழந்தைகள் பிறந்தன. அவர்களுக்கு முறையே சுப்புலஷ்மி, சிவகாமி, அப்பாதுரை, சுப்பய்யா, செல்லப்பா, சங்கரன், காசியப்பா, பிச்சம்மா, நாராயணன், ராமகிருஷ்ணன் (கிட்டப்பா) எனப் பெயரிடப்பட்டது.

குடும்ப கஷ்டம்

எவ்விதமான ஆஸ்தியுமில்லாமல் இவ்வளவு குழந்தைகளையும் காப்பாற்றுவது பெற்றோர்களுக்கு மிகக் கஷ்டமாகவேயிருந்து வந்தது. செல்வமாய் வளர்ந்து வந்த ஸ்ரீமான் கங்காதரய்யர் உள்ளூர் செல்வந்தரொருவரிடத்தில் சொற்ப சம்பளத்தில் வேலைக்கு அமர்ந்தார். அவதரு புதல்வர்களாக சுப்பய்யா, செல்லப்பா இவ்விருவர்களும் வீடு வீடாகச் சென்று பிச்சையெடுத்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியதாயிற்று. இப்பெரிய குடும்பத்தில் ஸ்ரீமான் கங்காதரய்யரின் வருமானம் போதுமானதாயில்லாதிருந்ததே இதற்கு காரணம்.

நாடகத் தொழிலில் இறங்குதல்

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தும் சுப்பையா, செல்லப்பா இவ்விருவரும் தங்கள் குடும்பத்தின் நெருக்கடியான நிலைமையை உத்தேசித்து, தங்களுக்கு முறையே 11 வயதும், 9 வயது மாயிருக்கும்போது அச்சமயம்

செங்கோட்டையிலிருந்தோர் நாடகக் கம்பெனியில் 18 ரூபாய் சம்பளத்தில் அமர்ந்தனர். எனினும் கஷ்டம் நீங்கினபாடில்லை. படிப்படியாக இவர்கள் தொழிலில் முன்னேற்றமடைந்து தங்கள் தாய் வழியாகக் கிடைத்த சங்கீக ஞானத்தினால் பிரகாசித்தனர்.

பிறப்பும் வளர்ப்பும்

இத்தகைய நிலைமையிலே பராபவஸ்ரீ ஆவணி மாதம் 10ம் தேதி சனிக்கிழமை விடியற்காலை 2.30 மணிக்கு (1906ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 25ம் தேதி) விசாக நட்சத்திரத்திலே செங்கோட்டையில் ஸ்ரீமான் கிட்ப்பா பிறந்தார். குழந்தையில் இவருக்கிடப்பட்ட பெயர் ராமகிருஷ்ணன். இந்த ராமகிருஷ்ணனே பிற்காலத்தில் உறவினர்களால் பொங்கப்பா என்றும், ஆப்த நண்பர்களால் கிட்டனென்றும், நாடகவுலகிலே கிட்டப்பாவென்றும் அழைக்கப்படலானார்.

குடும்பக் கஷ்டம் ஒருவாறிருந்தபோதிலும் பெற்றோர்களும், சகோதர சகோதரிகளும் இவரை மிக்கச் செல்லமாகவே வளர்த்து வந்தனர். இவரை இவரது தகப்பனார் தமது தோள்களை விட்டுக் கீழே இறக்குவதேயில்லை.

படிப்புக்குப் பணமில்லை

ஸ்ரீமான் கிட்டப்பாவை படிப்பதற்காக பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப குடும்பத்தில் போதிய சௌகர்யமில்லாமலிருந்தது. ஆகையினால் மதுரை ஜில்லா, மேலூர் தாலுக்காவைச் சேர்ந்த கொட்டாம்பட்டி என்ற கிராமத்தில் இவருக்கு ஐந்து வயதாயிருக்கும்போது விஜயதசமி தினத்தன்று ஹரிநமோத்துச்சிந்தம், ஓம் நமச்சிவாய நம என்று மணலில் இவரது தகப்பனாரால் இவருக்கு எழுதிக்காட்டப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ டி.டி. சங்கரதாஸ் ஸ்வாமி அவர்களால் கற்றுக் கொடுக்கப்பட்ட பாட்டுகளையும் வசனங்களையும் இவரது சோதரர்கள் நடிக்கும்போது உபயோகப்படுத்தியதை இவர் நன்கு கவனித்து வந்தார். இதுவே இவருக்குக் கிடைத்த சிறந்த கல்வியெனலாம்.

இளமைப் பருவமும் விளையாட்டுகளும்

இவர் சிறு பிராயத்தில் தம்மைவிட வயதில் பெரியவர்களாயுள்ள பையன்களுடன் வீணில் சண்டையிட்டுவிட்டு வீட்டுக்கு ஓடிவந்து விடுவது வழக்கம். சிறு வயதில் இவர் மிக்க மூர்க்க குணமுடையவராயிருந்தார். இவரது பாட்டைக் கேட்க ஆவல் கொண்டு அநேகர் இவரை நல்ல வார்த்தை சொல்லி, தங்கள் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் பாடச்செய்து, அதைக்கேட்டு ஆனந்தித்து, தின்பண்டங்கள் வாங்கிச் சாப்பிடுவதற்காக வேண்டி இவருக்கு ஓரிரண்டணா கொடுத்தனுப்புவது வழக்கம். இவர் கோலி ஆடுவதில் வெகு சமர்த்தர். ஒரு தடவை கோலி ஆடுவதற்காக வெளியேறினால் குறைந்தது 40, 50 கோலிகளாவது ஜெயிக்காமல் வீடு திரும்பமாட்டார். மிக்க சாமர்த்தியமாக சீட்டாடுவார். காற்றாடி விடுவதில் இவர் மிகவும் பெயர் பெற்றவர். கிரிக்கெட், கால்ப்பந்து, கிட்டிப்புள்ளு, கிளித்தட்டு, சலிங்குடுகுடு முதலிய விளையாட்டுகளை முதல் தரமாக ஆடுவார். துவிச் சக்கரவண்டி விடுவதிலும், மோட்டார் ஓட்டுவதிலும், நீந்துவதிலும் இவரையே தான் இவருக்கிணையாகச் சொல்ல வேண்டும்.

நாடகத் துறையிலிறங்கியது

இறைவனின் அனுக்கிரகத்தினால் இவருக்கு இயற்கையாகவே ஸங்கீத ஞானம் அமைந்திருந்தது. இது இவருக்கொரு வரப்பிரசாதமாகும். இவருக்கு 6 பிராயமாயிருக்கும்போது (1912 ம் வருஷம்) மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தர ஸெண்டால் டவுண் ஹாலில் ஸ்ரீலஸ்ரீ டி.டி.சங்கரதாஸ் ஸ்வாமி அவர்களின் சமரச சன்மார்க்க நாடக சங்கத்தினரால் ஒரு நாடகம் நடிக்கப்பட்டது. அத்தினத்தில் ஸ்ரீ கிட்டப்பா, வேஷம் போட்டுக்கொள்ளாமல் ஓர் துண்டை இடுப்பிலே உடுத்திக் கொண்டு, நாடக மேடையில் தோன்றி, தமக்குத் தெரிந்த ஓர் பாட்டைப்பாட, ஜனங்கள் உளம் பூரித்தனர். பிறகு இவர் பாலப் பார்ட்டாக நாடக அரங்கத்தில் தோன்றி, விநாயகர் ஸ்துதி, ஸூப்ரமண்ய ஸ்துதி, சபையோர்களுக்கு வந்தனம் முதலியவைகளைப் பாடத் தலைப்பட்டார். இவர் அலி பாதுஷா நாடகத்தில் பாதுஷாவின் பிள்ளையாக வேடம் பூண்டு பிச்சை எடுக்கும் காஷியைக் கண்டு ஜனங்கள், உண்மையாகவே நிகழ்கின்றதென

நினைத்து மனமுருகி, மெய்மறந்து பவுன்களையம், நோட்டுகளையும் மேடையை நோக்கி இவரிடம் எறிந்தனர். நல்லதங்காள் நாடகத்தில், அவ்வம்மையின் குழந்தைகளில் ஒருவராக நடித்து “தந்தையே எவ்விதம்“ என்ற பாட்டைப் பாடிக்கொண்டு வருவது கல்மனதையும் கரையச் செய்துவிடும். நாடகம் காண வருபவர்கள் அழுது விடுவது வழக்கம். தமது 6–வது வயதிலேயே ஸ்ரீலஸ்ரீ டி.டி.சங்கரதாஸ் ஸ்வாமிகளின் அருளினால் ஸ்ரீமான் கிட்டப்பா நாடகத் துறையில் பேசவும், பாடவும் கற்றுக்கொண்டார். பிறகு திருச்சி, கரூர் முதலிய இடங்களுக்குப் போய் சில நாடகங்கள் நடத்திவிட்டு இவர் தமது தமையன்மார்களுடன் சிங்கப்பூருக்குப் போய் ஸ்ரீ சாமிநாத முதலியார் நாடகக் கம்பெனியில் சேர்ந்தார். அங்கு சில மாதங்களிருந்து விட்டு பிறகு இந்தியாவிற்குத் திரும்பினார்.

7வது– வயதில் தென்னாடெங்கும் விஜயம்

இச்சமயத்தில் இவருக்கு வயது 7 தான். அந்த வயதிலேயே இவர் கோபிசெட்டிபாளையம், நாமக்கல், எர்ணாகுளம், கொச்சி, லால்குடி, திருப்பத்தூர், திண்டுக்கல், திருநெல்வேலி, செங்கோட்டை, திருவனந்தபுரம், காரைக்குடி, வெள்ளாகுளம் முதலிய விடங்களுக்கெல்லாம் விஜயஞ் செய்து அநேக நாடகங்களை நடிக்கலுற்றார்.

மூர்ச்சையும் முருகனின் அருளும்

இவர் நாடகம் நடத்தி தென்னாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்யும் சமயம், ஒரு நாள் திருநெல்வேலியில் தாம்பரபரணி நதியில் தமது தமையன்மார்களுடன் ஸ்நானம் செய்துவிட்டு குறுக்குத் துறையில் கோயில் கொண்டிருந்த ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமியை தரிசிக்கச் சென்றார். அச்சமயம் திடீரென மூர்ச்சையற்றுக் கீழே விழுந்துவிட்டார். அது கண்டு இவருடனிருந்த சகோதரர்கள் பெரிதும் கவலை கொண்டனர். எனினும் அக்கோவில் குருக்கள் கிட்டப்பாவின் சகோதரர்களை தேற்றி, ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமியன் அருளெனச் சொல்லி, ஸ்ரீ கிட்டப்பாவின் மீது ஸ்வாமியின் தீர்த்தத்தை ப்ரோஷிக்க, இவர் தூங்கி விழித்தவர்போல் எழுந்தார். பிறகு இவருக்கு ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமியின் பிரசாதம் கொடுக்கப்பட்டது. மூர்ச்சை தெளிந்தவுடன் ஸ்ரீ கிட்டப்பாவை, அவரது

சகோதரர்கள் யாது நேர்ந்தது எனக் கேட்க, அதற்கவர் தாம் "ஈராறு காதிலே" என்ற சுப்ரமண்யர் பதிகத்தைப் பாடி முடித்தவுடன், ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமி தம்மை அழைப்பது போலிருந்ததென்றும், பிறகு என்ன நிகழ்ந்ததென தமக்குத் தெரியாதென்றும், கூறினார். இச்சம்பவத்திற்கு முன்பு ஸ்ரீமான் கிட்டப்பாவின் சாரீரம் மிக்க இனிமையாயிருக்குமே ஒழிய சங்கீத ஞானத்துடணும், லக்ஷணத்துடனும் இவர் பாடியது கிடையாது. ஆனால் இதற்கப்புறம் எப்படியோ இவருக்கு திடீரென்று அபரிமிதமான சங்கீத ஞான மேற்பட்டுவிட்டது. சில நாட்களுக்குப் பிறகு சாவேரி, தோடி முதலிய ராகங்களை மிக்க அருமையாக ஸ்ரீமான் கிட்டப்பா பாடியதைக் கேட்டு இவரது சகோதரர்களும் மிக்க ஆச்சரியமடைந்தனர். அப்பொழுதுதான் அவர்கள் குறுக்குத்துறையில் நடந்த சம்பவத்தின் அற்புதத்தை உணர்ந்தனர்.

கொழும்புப் பிரயாணம்

பிறகு இவர் தமது தமையன்மார்களுடன் கொழும்புவிற்குப் பிரயாணமானார். இவருக்கு அப்போது வயது எட்டுதானிருக்கும். கொழும்புவிலிருந்து காலி, மாத்ரை, நாபடா, ஜாப்னா (யாழ்ப்பாணம்) முதலிய விடங்களுக்கும் போய் மறுபடியும் கொழும்புவிற்கே திரும்பி நாடகம் நடிக்கலாயினர். ஒவ்வொரு வேடத்திலும் மிக்கத் திறமையாக நடித்துப் பாடியதால் இவருக்குச் சென்றவிடமெல்லாம் புகழேற்பட்டது. இலங்கை இந்திய வியாபாரிகள் சங்கத்தின் சார்பாக, திவான் பகதூர் பி.கேசவப் பிள்ளையவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீமான் கிட்டப்பாவுக்கு இவரது ஸ்ங்கீத திறமைக்காக நற்சாஷிப் பத்திரமும், தங்கப்பதக்கமும் பரிசளிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்திலுள்ள செல்வந்தர்களும் ஸ்ரீமான்கள் எஸ்.பொன்னுசாமி, பி.சௌரிமுத்து முதலியவர்களின் தலைமையின் கீழ் ஓர் கூட்டம் கூட்டி ஸ்ரீமான் கிட்டப்பாவின் ஸங்கீத வன்மையைப் புகழ்ந்து அவரைக் கௌரவித்தனர். பிறகு இவரது மூத்த சகோதரர்களான ஸ்ரீமான்கள் எஸ்.ஜி. சுப்பய்யர், எஸ்.ஜி.செல்லய்யர் இவ்விருவரும் இந்தியாவுக்குப் புறப்பட, ஸ்ரீமான் கிட்டப்பா மட்டும் தமது அடுத்த மூத்த சகோதரரான கவாய் எஸ்.ஜி.காசி அய்யருடன் கொழும்புவிலேயே தங்கி நாடங்களை நடத்தி வந்தார்.

கன்னையா கம்பெனியில் சேருதல்

இச்சமயம் தென்னிந்தியாவிலேயே பிரசித்திபெற்ற நாடகக் கம்பெனியாக விளங்கி வந்த ஸி.கன்னையா கம்பெனியின் கீர்த்தி நாளுக்கு நாள் ஒடுங்க ஆரம்பித்தது. ஸ்ரீமான் கன்னையா அவர்கள் தமது கம்பெனியின் ஸீன்களையும், உடைகளையும் அடகு வைத்து கடன்காரரானார். அவருக்கு அச்சமய மேற்பட்டிருந்த நெருக்கடியான நிலைமைமய அளவிட்டுச் சொல்ல முடியாது. இந்நிலைமையில் ஸ்ரீமான் கன்னையா தமது நண்பரான தஞ்சாவூர் மாடி கிளப் வெங்கடராமய்யர் மூலம் ஸ்ரீமான்கள் எஸ்.ஜி.சுப்பய்யர், செல்லப்பய்யர் இவ்விருவர்களையும் தமது கம்பெனியில் சேர்த்துக் கொண்டார். இரண்டு மாத காலமான பிறகு அதாவது 1919 –ம் வருஷம் ஜூலை மாதத்தில் தமது உற்றார் உறவினர்களைப் பார்க்க வேண்டுமென்கிற ஆவலுடன் கொழும்புவிலிருநது திரும்பி ஸ்ரீமான் கிட்டப்பாவும் தமது சோதரர் காசி அய்யருடன் கன்னையாவின் வேண்டுகோளுக்கிணங்கி அவரது கம்பெனியில் சேர்ந்தார். முதன் முதலாக ஸ்ரீ வள்ளி நாடகத்தில் ஸ்ரீ கிட்டப்பா நாரதராக வேடம் பூண்டு மிகத் திறமையாக நடித்து “ஸங்கல்பமே” என்ற கீரத்தனையைப் பாடி சென்னைவாசிகளின் மனதைக் கவர்ந்தார். இதுவே இவருக்குப் பிற்காலத்தில் கிடைத்த கீர்த்திக்கு சங்கல்பமாக இருந்தது. இவருக்கு அப்போது வயது பன்னிரெண்டு. 1920–ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் இவருக்கு சென்னையில் சிறப்பாக உபநயம் நடந்தேறியது.

முடிவில்லாக் கீர்த்தி

ஸ்ரீமான் கிட்டப்பா பிறகு பற்பல நாடகங்களில் வெவ்வேறு வேடங்கள் பூண்டு தமது சங்கீத வன்மையினாலும், சாரீர சம்பத்தினாலும், அழகிய தோற்றத்தினாலும் இனிமை பொருந்திய பேச்சுகளினாலும், ஒருங்கே பாமரர்களையும் பண்டிதர்களையும் பிரமிக்கச் செய்து, அவர்கள் உள்ளத்தை ஒரு நொடியில் கவர்ந்தார். இதனால் இவரது பெயர் சென்னை முழுவதும் பிரதிபலிக்கத் தொடங்கியது. வியாபாரிகள் தங்கள் சரக்குகளுக்கு இவரது பெயரைச் சூட்டலாயினர். ஸ்ரீமான் கிட்டப்பாவின் பெயரால் சாந்து முதலியவைகளும் விற்கத் தலைப்பட்டன. பிறகு கன்னையா கம்பெனியார் ஸ்ரீ கிருஷ்ண

லீலா நாடகம் நடத்த ஆரம்பிக்க அதில் இவர் முக்கியமான வேடம் பூண்டு தென்னாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து முடிவில்லா கீர்த்தி பெற்றார்.

பண்டித விஷ்ணு திகம்பரர் பரவசமாதல்

1924ம் வருடம் ஏப்ரல் மாதம் 30ம் தேதி பூனா கந்தர்வமாக வித்யாலயத்தின் தலைவரும், வட இந்தியாவில் பிரசித்திபெற்று விளங்கும் சங்கீத வித்வான்களின் குருவும், சங்கீதக் களஞ்சியமுமான பண்டித விஷ்ணு திகம்பரர் சென்னைக்கு வந்து செல்லாராம் மாளிகையில் தங்கியிருந்தார். அவ்வமயம் ஸ்ரீமான் கிட்டப்பாவை நான் பண்டித விஷ்ணு திகம்பரரிடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தேன். ஸ்ரீ திகம்பரர் முதலில் கிட்டப்பாவைப் பற்றி பிரமாதமாக நினைக்கவில்லை. கர்நாடக சங்கீதத்தில் 'பியாகடை' என்ற ராகத்தை பாடும்படி திகம்பரர் கிட்டப்பாவுக்கு கட்டளையிட்டார். அந்த ராகத்தை வெகு நேர்த்தியாக கிட்டப்பா பாடி முடித்தாரோ இல்லையோ தாமிருந்த ஆசனத்தைவிட்டு முன்னோக்கி ஓடி வந்து ஸ்ரீ கிட்டப்பாவைத் தழுவிக்கொண்டு முத்தமிட்டு ஆசி கூறினார். அடுத்த நாள் ஸ்ரீ காசி அய்யரும் "துடுகு" என்ற தியாகராஜ கீர்த்தனையை பாடி திகம்பரரை சந்தோஷப்படுத்தினர். தமது நாடகத்தைக் கண்டு ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஸ்ரீமான் கிட்டப்பா திகம்பரரை வேண்டிக் கொண்டார். அவர் தமது பரிவாரத்துடன் அன்றிரவு பெங்களூருக்குப் போக வேண்டி சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தபோதிலும் அவைகளை உடனே ரத்து செய்துவிட்டு அன்றிரவு கிட்டப்பாவின் நாடகத்தைக் காண சென்னை ராயல் தியேட்டருக்கு விஜயம் செய்தார். அன்று ஸ்ரீமான் கிட்டப்பா முதலில் குறத்தியாகவும், பிறகு மார்க்கண்டேயனாகவும் நடித்து, அவ்வச்சமயத்திற்கேற்ப காதுக் கினிமையான சாரீரத்தோடும் கூடிய பாடல்களைப்பாடி திகம்பரரின் உள்ளத்தைக் கவர்ந்து அவ்வுணர்ச்சிக்கு அறிகுறியான கரகோஷத்தையும் பன்முறைபெற்று, அவரை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்திவிட்டார். தமது வழக்கத்துக்கு நேரிடையாக நாடகம் முடியும் வரையிருந்த திம்பரர் மேடை மீது ஏறி ஸ்ரீ கிட்டப்பாவுக்கு மாலையிட்டு, மரியாதை செய்து தழுவிக் கொண்டு, அவரை ஓர் அவதார புருஷரெனப் புகழ்ந்து பேசினார். இம்மஹானின் சந்திப்பின் ஞாபகர்த்தமாகவே ஸ்ரீ

கிட்டப்பாவும் அவரது சோதரர்களும் திகம்பரருக்கு மிக்க பிரியமான “ரகுபதி ராகவ ராஜாராம் பதீத பாவன ஸீதாராம்“ என்ற ஸ்தோத்திர கானத்தை தாங்கள் நடிக்கும் ஒவ்வொரு நாடகத்தின் இறதியிலும் பாடுவதென்று ஓர் நியதியை ஏற்படுத்திக் கொண்டனர்.

விவாகம்

1924ம் ஆண்டு ஜீன் மாதம் 23ம் தேதி சென்னை, தண்டையார்பேட்டை பரமானந்ததாஸ் சோடதாஸ் பங்களாவில் நல்லதொரு சுபமுகூர்த்தத்திலே **திருநெல்வேலி ஸ்ரீமான் விசுவனாதய்யர் புதல்வி கிட்டம்மாளுடன் ஸ்ரீ கிட்டப்பாவுக்கு மிகச் சிறப்பாக விவாகம் நடந்தேறியது. ஸ்ரீமான்கள் முத்தையா பாகதர், மகாராஜபுரம் விஸ்வனாதய்யர், ப்ளேட் வெங்கடராமய்யர், சௌடய்யா, தஷிணாமூர்த்தி பிள்ளை முதலிய அரிய பெரிய ஸங்கீத வித்வான்களும், பெரிய ஜமீன்தார்களும் ஏராளமான நண்பர்களும் விஜயம் செய்து ஸ்ரீ கிட்டப்பாவை கௌரவித்தனர்.** *அவரது மணக்கோல ஊர்வலம் விசேஷ மகிமை பொருந்தியதாயிருந்தது. பெரிய பெரிய ஷேத்திரங்களில் உத்சவங்களுக்கு எவ்வளவு ஜனத்திரள்கூடுமோ அவ்வளவு கூட்டம் ஒவ்வொரு வீதியிலும் காணப்பட்டது. ஸ்ரீமான் கன்னையா இவ்விவாகத்திற்கு ஓராயிரம் ரூபாய் கொடுத்துதவினார்.* **மணப் பந்தலில் திலகர் ஸ்வராஜ்ய நிதிக்கும் சம்பாவினை செய்யப்பட்டது.**

தசாவதாரச் சிறப்பு

விவாகமாய் ஆறு மாதங்களான பிறகு ஸ்ரீ கன்னையா கம்பெனியார் தசாவதார நாடகம் நடத்த ஆரம்பித்தனர். அதில் ஸ்ரீ கிட்டப்பா அலை கடற்றுயின்ற ஹரியாகவும், அதாவரெனினும் மையல் கொண்டு மதிமருளச் செய்யும் மோகினியாகவும், ஸ்ரீ வைகுண்ட நாதனாகவும், ஸ்ரீராமனாகவும், ஸ்ரீ கிருஷ்ணனாகவும் தோன்றி நடித்த காலத்து அந்தந்த அவதாரத்திற்குரிய தத்ரூப மூர்த்தியாகவே விளங்கினார். நாடகங் காண வந்தவர்களனைவரும் மெய்மறந்து, உளம் பூரித்து ஆனந்த பாஷ்பத்தை ஆறாய்ப் பெருக்கினர். இவர் ஸ்ரீ வைகுண்ட நாதனாக மேடையில் தோன்றியபோது இவரை சாஷாத் மகாவிஷ்ணுவாக நினைத்து அங்கு குழுமியிருந்தவர்கள் தாளும் தடக்கையும் கூப்பிச் சென்னையில் அறைந்து கொண்டதாக நேரில் கண்டவர்கள் இன்றும் கூறி வருகின்றனர்.

இந்நாடகத்தைக் காண ஜனங்கள், நாடக ஆரம்ப நேரத்தில் 7,8 மணி நேரத்திற்கு முன்பே நாடக வாயிலில் கூடிவிடுவது வழக்கம். தேசத்தின் நாலாபக்கங்களிலிருந்தும் ஜனங்கள் இந்நாடகத்தைக் கண்டுகளிக்க வந்தனர். சென்னையில் தொடர்ச்சியாக மாதக்கணக்காய் இந்நாடகம் நடத்தப்பட்டது. அந்தக் காலத்தில் சென்னை ராயல் தியேட்டரின் வாசலில் அனுதினமும் எவ்வளவு ஜனத்திரள் குழுமியிருந்த தென்பதை இதற்குள் சென்னைவாசிகள் மறந்திருப்பதிற்கில்லை. மறுபடியும் ஸ்ரீமான் கிட்டப்பா தென்னாடெங்கும் சுற்றுப்பயணம் செய்தார். இதன் பிறகு, ஏற்கனவே இவருக்கிருந்த புகழ் பன்மடங்கு அதிகமாயிற்று.

கீர்த்திக்குக் காரணங்கள்

ஸ்ரீமான் கிட்டப்பாவினிடம் இயற்கையாகவே அமைந்திருந்த சிறந்த சங்கீத ஞானமும், பேச்சுத்திறமையும், கம்பீரமான தோற்றமும், அவரது சோதரர்களின் ஒத்துழைப்பும், ஸ்ரீலஸ்ரீ டி.டி. சங்கரதாஸ் ஸ்வாமி அவர்களின் அருளும், இவரது மூத்த சோதரரான ஸ்ரீமான் அப்பாத்துரை அய்யர் அவர்களின் பாதுகாப்புமே இவர் அழியாப் புகழை அடைய முக்கிய காரணங்களாயிருந்தன.

கிட்டப்பாவும் கன்னையாவும்

ஸ்ரீ கன்னையா அவர்களும் ஸ்ரீ கிட்டப்பா தீய வழியில் செல்லாமலிருக்க வேண்டி விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டாரென்பதை எவரும் மறக்க முடியாது. அதற்குக் கைம்மாறாக கடவுளும் ஸ்ரீ கிட்டப்பாவின் மூலமாக ஏராளமான திரவியத்தை கன்னையாவுக்கு ஈந்தருள, தமது கடன்களையெல்லாம் தீர்த்துவிட்டு கன்னையா செல்வந்தரானார். தசாவசதார நாடகத்திற்கு வேண்டிய விலையுயர்ந்த உடுப்புகளும், ஸீன்களும் தயார் செய்வதில் பணம் ஏராளமாக செலவாகிக் கொண்டிருக்கையில், ஸ்ரீ கிட்டப்பா தமது சோதரர்களுடன் சில மாத காலம் வரை சம்பளம் பெறாமலேயே உழைத்து வந்தார். எனினும் இடையே சில மனத்தாங்கல்கள் ஏற்பட்ட தன் காரணமாக ஸ்ரீமான் கிட்டப்பா 1926ம் வருஷம் மார்ச் மாதம் ஸ்ரீ கன்னையா கம்பெனியை விட்டு விலகினார். ஓரிராண்டு சென்ற பிறகு

மறுபடியும் அக் கம்பெனியில் சேர்ந்தாரெனினும் அவர் வெகு நாள் அதில் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கவில்லை. நிரந்தரமாகவே கம்பெனியை விட்டு விலகிக் கொண்டார்.

ஸ்ரீமதி சுந்தராம்பாள் சந்திப்பும், நட்பும்

கன்னையா கம்பெனியை விட்டு விலகிய பிறகு ஸ்ரீ கிட்டப்பா தமது சோதரர் கவாய், எஸ்.ஜி.காசி அய்யருடன் கொழும்புவிற்கு சில நாடகங்கள் நடிப்பதற்காகச் சென்றார். அங்கு ஏற்கனவே ஸ்ரீமதி, கே.பி.சுந்தராம்பாள் மாதக் கணக்காக நாடகம் நடத்திக் கொண்டிருந்தார். அவர் குயிலையும் பழிக்க வல்ல தமது இனிய சாரீரத்தின் காரணமாக அளவிலாக் கீர்த்தி பெற்றிருந்தார். அவ்வம்மையாருடன் ராஜபார்ட்டாக நடித்த எந்த நடிகருக்கும் நல்ல பெயர் கிடைக்கவில்லை. இத்துடன் நிற்காமல் பலர் அவமானமடைந்ததும் வீடு திரும்ப வேண்டி நேரிட்டது. இச்சமயத்தில் தான் ஸ்ரீமதி சுந்தராம்பாளுடன் ஸ்ரீ கிட்டப்பா முதன் முதலாக நடிக்க ஆரம்பித்தார். இவ்விருவர்களும் முறையே ஸ்ரீ வள்ளியாகவும், வேடனாகவும் நாடக அரங்கத்தில் தோன்றினர். ஸ்ரீ கிட்டப்பா 'அம்மா ராவம்மா' என்ற கீர்த்தனையைப் பாடிக் கொண்டே நாடக மேடையில் தோன்ற, ஸ்ரீமதி சுந்தராம்பாளைத் தவிர எந்த ராஜபார்ட்டையும் மதிக்காத ஜனங்கள், சந்தோஷத்தால் பெருத்த ஆரவாரம் செய்தனர். தேன் பருகிய வண்டுவின் நிலை எவ்வாறிருக்குமோ அந்நிலையையே, ஸ்ரீ கிட்டப்பாவின் அபரிதமான சங்கீத ஞானத்துடன் கூடிய இனிய பாடல்களைக் கேட்ட ஜனங்கள் அனுபவித்தனர். ஸ்ரீமதி சுந்தராம்பாளும் தமக்கிணையான நடிகர் ஸ்ரீமான் கிட்டப்பாவேயென தீர்மானித்துவிட்டார். இப்படியிருக்க திடீரென 1926 ம் ஆண்டு மார்ச் 16ம் தேதி செங்கோட்டையில் ஸ்ரீ கிட்டப்பாவின் தாயாரான ஸ்ரீமதி மீனாட்சியம்மாள் தமது 62–வது வயதில் சிவலோகப்ராப்தியாக அச்செய்தியைக் கேள்வியுற்ற ஸ்ரீ கிட்டப்பா தமது ஊருக்குப் போய் தாயாரின் ஈமக்கடன்களை முடித்துக்கொண்டு மறுபடியும் கொழும்புவிற்கு புறப்பட்டார். ஸ்ரீமதி சுந்தாரம்பாளுக்கு, ஸ்ரீ கிட்டப்பாவுடன் நடிக்க வேண்டுமென்கிற ஆவல் எல்லையற்றிருந்தது. அவ்வம்மையாருக்கு ஸ்ரீ கிட்டப்பாவின் மீது அபரிமிதமான பய பக்தி விசுவாசமுண்டு. இவ்விருவரும் சேர்ந்து தென் தேசங்களிலும், மைசூர், திருவாங்கூர்,

ஹைதராபாத் முதலிய சுதேச சமஸ்தானங்களிலும், ரங்கூன் முதலிய இடங்களிலும் பிறகு சுற்றுப் பிரயாணம் செய்து கணக்கற்ற நாடகங்களை நடித்து ஏராளமாகச் சம்பாதித்தனர். இவ்விருவரும் சேர்ந்து நடிப்பதென்றால் எவ்வளவு தொகை கட்டணமாக விதித்தாலும் அதைச் செலுத்த ஜனங்கள் சிறிதும் பின்வாங்கியதில்லை. ஸ்ரீமான் கிட்டப்பா அபூர்வராகங்களைப் பாடும்போது அதை ஊன்றிக் கவனித்த அவரது வழிகளை ஸ்ரீமதி சுந்தராம்பாள் பின்பற்றி, பிறகு நன்கு பிரகாசிக்க ஆரம்பித்தார். ஸ்ரீமதி சுந்தராம்பாளுக்கு ஸ்ரீமான் கிட்டபாவினிடமும் அவரது குடும்பத்தாரிடமும் அளவற்ற பற்றும், சிரத்தையும் ஏற்பட்டது. ஸ்ரீமான் கிட்டப்பாவின் மீது ஒரு சிறு துரும்பு விழுந்தாலும் கண்ணீர் சிந்தும் சுபாவமுடையவர். ஸ்ரீமான் கிட்டப்பாவையே தமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் விளக்கென மதித்து

வந்தார். மத்தியிலுள்ளவர்கள் அவ்வப்போது செய்து வந்த விஷமத்தனத்தினால் இவர்களுக்குள் அடிக்கடி மனஸ்தாப மேற்படலாயிற்று. எனினும் அவ்விருவர்கள் மனதிலும் ஒருவர் மீதொருவருக்கு அன்பெனும் தேன் ஊறித் ததும்பிக் கொண்டேயிருந்தது.

தமையன் மரணமும் வாழ்க்கையில் மாறுதலும்

ஸ்ரீ கிட்டப்பாவுக்கு 1927ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28ம் தேதி செங்கோட்டையில் மிக்க விமரிசையாக சாந்தி முகூர்த்தம் நடத்தி வைத்துவிட்டு, சில மாதங்களுக்குள்ளாக, ஸ்ரீ கிட்டப்பாவின் மூத்த சகோதரரான ஸ்ரீ அப்பாதுரை அய்யர் பித்தபாண்டுவினால் உயிர் துறந்தார்.

ஸ்ரீ கிட்டப்பாவை சிறு பிராயம் முதற்கொண்டே தவறான வழியில் செல்லாதவாறு பாதுகாத்து வந்தவர் இவரே! ஸ்ரீ கிட்டப்பா இவரது வார்த்தையை ஒரு போதும் மீறி நடக்கமாட்டார். ஸ்ரீ கிட்டப்பாவுக்கு இவரிடம் பூரண அன்பும், பயமும் சமமாக இருந்து வந்தன. அருமைத் தாயை இழந்து ஓரிராண்டுக்குள்ளாக தமது மூத்த தமையனையும் இழந்ததினால் ஸ்ரீ கிட்டப்பாவுக்கு ஏற்பட்ட துக்கத்திற்கு எல்லையேயில்லை. எனினும் தாம் அடங்கிப் பதில் சொல்ல வேண்டியவர்கள் இனியொருவருமில்லை யெனத்தேர்ந்து ஸ்ரீ கிட்டப்பா தம் மனம்போனவாறு வாழ்க்கையை நடத்தவும், மதுபானம் முதலிய தீய வழிகளில் ஈடுபடவும் ஆரம்பித்தார்.

"துஷ்ட சகவாசம் பிராண சங்கடம்" அல்லவா? ஸ்ரீ கிட்டப்பாவின் விஷயத்தில் துஷ்ட சகவாசம் பிராணன் பிரிவதிலேயே முடிந்தது. தாமே தம்மைப்பெரிய மனிதர்களென அழைத்துக் கொண்டு திரியும் பலர் இரவோடு சேர்ந்து கொண்டு, தங்கள் சுய நலத்தை உத்தேசித்து, இவரிடையே தீய பழக்கங்களை விருத்தி செய்வதிலேயே முனைந்து நின்று, அதனால் தாங்களும் ஏராளமான லாபமடைந்து, இவரது திரேக நிலை கெடுவதற்குக் காரணபூதர்களாயிருந்தனர். இவரை மதுவெனும் பேய் நன்றாய்ப் பற்றிக் கொண்டது. இவருக்கு அப்பழக்கங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. பிறராலும் இவரை விடுவிக்க முடியாமற்போய்விட்டது. அத்தகைய நிலைமையை இவர்

வெகு சீக்கிரத்திலேயே அடைந்து விட்டார். இவரது வஜ்ஜிர சரீரம் நாளுக்கு நாள் தளர்ச்சியடைந்து வந்தது.

திடீரென 1933ம் ஆண்டு மார்ச் மாதம் 29ம் தேதி பிற்பகல் இவரது நிலை கவலைக்கிடமானதாக மாறியது. காலில் வீக்கமேற்பட்டது; கண்கள் மஞ்சளாயின. ஸ்ரீ கிட்டப்பா தமது நண்பர்கள், உறவினர்கள், ஸ்ரீமதி சுந்தராம்பாள் முதலானவர்களின் யோசனையின் பேரில் உடனே சென்னை போய் டாக்டர் பி.ராமாராவ் அவர்களிடம் டையாதர்மி, அல்ட்ராவைலட் ரே என்ற பெயருடைய இவ்விரண்டு மின்சார சிகிச்சைகளில் இருந்து வரலானர். இவரது குடல் வெந்து போயிருப்பதாகவும், ஈரல் சுருங்கியிருப்பதாகவும், டாக்டர் எக்ஸ்ரே படமெடுத்துப் பார்த்துக் கூறினார். ஏராளமான பொருட் சிலவில் ஸ்ரீ கிட்டப்பா தமது உறவினருடனும், நண்பர்களுடனும் மயிலாப்பூரில் தனி பங்களா ஒன்றை அமர்த்திக் கொண்டு அதில் 2 மாத காலம் தங்கி தகுந்தபடி சிகிச்சை பெற்று சற்று குணமடைந்து வந்தார்.

துர்ப்போதனையும் குடும்பத்தில் வெறுப்பும்

எனினும் இவரது கெடு வழிக்குத் தூண்டுகோலாயிருந்தவர்கள் மறுபடியும் இவரிடம் வந்து சேர இவர் பூரண சௌக்யமடைவதற்கு முன்பே, டாக்டரிடமும் சொல்லிக் கொள்ளாமல், செங்கோட்டைக்கு திரும்பிவிட்டார். உடனே இவரது நடையுடைபாவனைகள் மறுபடியும் மாறிவிட்டன. ஆகாரம் உட்கொள்வதையும், தூங்குவதையும் விடுத்து சதா போலி நண்பர்களுடன் மதுபானமருந்தி காலங்கழிப்பதையே தொழிலாகக் கொண்டார். இவரது கூர்மையான புத்தியும் மங்கிப்போகும் வண்ணம் யாரோ சிலர் சூழ்ச்சி செய்து ஸ்ரீ கிட்டப்பாவுக்கு தமது நண்பர்களிடமோ, பொதுவாக குடும்பத்தாரிடமோ சிறிதும் பற்றில்லாமற் செய்துவிட்டதால், அவர் தமது வீட்டைவிட்டுப் புறப்பட்டு திருநெல்வேலியில் தங்க ஆரம்பித்தார். சில நாட்கள் திருநெல்வேலி வீரராகவபுரத்திலுள்ள தமது மாமனார் வீட்டிலும் பிறகு “சந்திர விலாஸ்” மாடியில் அறை அமர்த்திக் கொண்டு தங்கலுற்றார்.

இவருடைய உறவினர்களிலொருவர் இவருக்கு ஆகாரம் கொடுக்கும்போது எதையாவது சேர்த்துக் கொடுத்திருக்க வேண்டுமென்றும், அதன் காரணமாகவே சிறந்த புத்திசாலியான ஸ்ரீ கிட்டப்பா சித்த ஸ்வாதீனமற்று நாளுக்குநாள் வலிமை இழந்தாரென்றும் அங்கங்கே சிலர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். எனினும் உண்மை ஈசனுக்கே வெளிச்சம்!

மனக்கவலையும் மறுபடியும் தொழில் ஆரம்பித்தலும்

இருபது வருடகாலமாக தொடர்ச்சியாக தொழில் நடத்தி வந்த தாம், அநேக மாத காலமாய் தொழில் நடத்தாமலிருப்பதே தமது மனேவேதனைக்குக் காரணமென ஸ்ரீ கிட்டப்பா அபிப்பிராயப்பட்டார். ஆகையினால் 1933ம் ஆண்டு ஆகஸ்ட் மாதக் கடைசியில் திருநெல்வேலியில் அவ்வூர் ஹிந்து கலாசாலை நிதிக்காக ஓர் இலவச நாடகம் நடத்தி மறுபடியும் நாடகத் தொழிலை துவங்கினார். தமது 28–வது ஆண்டு நிறைவு தினத்தன்றே இப்புனிதமான காரியத்திற்குப் பொருளுதவி செய்தார். பிறகு திருவாரூரில் நடிக்கப்போன இவருக்கு பாதி நாடகத்திலேயே திடீரென திரேக அசௌக்ய மேற்பட்டுவிட்டது. அதன் பிறகு திருமங்கலத்தில் சங்கீத சபைக்காக இரண்டு இலவச நாடகங்கள் நடத்திக் கொடுத்தார். இதன் பிறகு நாடகத் தொழில் நடத்த முடியாதபடி இவரது திரேகம் அவ்வளவு பலஹீனமடைந்தது.

அந்திய காலம்

இதற்குள் ஸ்ரீ கிட்டப்பா உள்ளதை உள்ளபடி உணர்ந்து தமது கிராமத்திற்கு மறுபடியும் திரும்பி வந்தார். அப்போது இவரிடம் சகல வகையிலும் விசேஷமாறுதல் காணப்பட்டது. உலக வாழ்விலே சிறிதும் பற்றில்லாதவராகத் தெரியவந்தது. நாளாக நாளாக இவரது திரேக பலம் குன்றிக் கொண்டே வந்தது. எத்தனையோ வைத்தியர்களிடம் சிகிச்சை செய்து கொண்டார். எனினும் எவ்வைத்தியரிடமும் தொடர்ச்சியாக சில நாட்கள் கூட மருந்து சாப்பிடுவது கிடையாது. தமக்கு ஒரு வியாதியும் இல்லையென்றும், தமது திரேகம் குன்றி வருவதற்கு காரணம் தமக்குள்ள மனக்கவலையே என்றும் அடிக்கடி ஸ்ரீ கிட்டப்பா கூறிவந்தார். எனினும் எத்தகைய மனக்கவலை அவரது மனதில் குடிகொண்டிருந்தது என்பது தான் அவரது

நெருங்கிய நண்பர்களுக்கும், பந்துக்களுக்கும் கடைசி வரையில் தெரியவேயில்லை.

வயிற்று வலியால் துடிப்பு

பிறகு ஸ்ரீ கிட்டப்பா தமது சோதரர்களால் சிகிச்சைக்காக திருவழாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டார். திருவழாய்க்குப் போய் திரும்பிய பிறகு திரேகம் சற்று குணமடைவது போல் தென்பட்டது. அநேக மாதகாலமாய் பாராதிருந்த மனைவியும், மாமனாரும் ஸ்ரீ கிட்டப்பாவைக் காண செங்கோட்டை வந்து சேர்ந்தனர். பிறகு ஒரு நாள் திடீரென இவருக்கு வயிற்று வலி உண்டாயிற்று. அவ்வலியை சகிக்க மாட்டாது ஸ்ரீ கிட்டப்பா கதறினார். தென்காசியிலிருந்து டாக்டர் ஸ்ரீ அனந்தநாராயண அய்யர் வரவழைக்கப்பட்டு, ஓர் இன்ஜெக்ஷன் கொடுக்கப்பட்டதும் சற்றுக்குணமேற்பட்டது. எனினும் அன்று முதல் ஸ்ரீ கிட்டப்பா படுத்த படுக்கையாகவே இருக்க நேரிட்டது. சதா தமது வீட்டு மாடியிலேயே இருக்க விரும்பும் சுபாவமுடைய ஸ்ரீ கிட்டப்பா, தமது கட்டிலை தமது உறவினர்களனைவரும் நடமாடிக்கொண்டிருக்கும் கூடத்திலேயே கொண்டுபோய் போடும்படி செய்தார். கஞ்சி, பழரசம் முதலியவைகளே அவருக்கு ஆகாரமாகக் கொடுக்கப்பட்டன. **எந்த ஆகாரமும், எந்நிலைமையில் உட்செல்கின்றதோ அந்நிலைமையிலேயே உடனே வெளிவர ஆரம்பித்தது. ஜீர்ணசக்தி என்பது சிறிதும் இல்லாமற் போயிற்று.** ஆகாரம் உள்ளே தங்காமற் போனபடியால் அவரது திரேகம் துரும்பாக இளைத்துவிட்டது. அவரது தமையனாரான கவாய் எஸ்.ஜி. காசி அய்யரும், சகோதரியான ஸ்ரீமதி பிச்சம்மாளும் சர்வ ஜாக்ரதையுடனும் அன்புடனும் சிஸ்ரூஷை செய்து வந்தனர்.

மகிமை பொருந்திய நடிகரின் மறைவு

ஸ்ரீ கிட்டப்பாவினால் மற்றவர்கள் உதவியின்றி படுக்கையைவிட்டு எழுந்திருக்கவோ, உட்காரவோ முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. பேசும் சக்தியும் குன்றி விட்டது.

1933 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ம் தேதி சனிக்கிழமை பகல் 12 மணிக்கு திடீரென வயிற்று வலி கடுமையாகிவிட்டது.

சுமார் 1 மணி நேரம் ஸ்ரீ கிட்டப்பா துடிதுடித்தார். உடனே இஞ்ஜெக்ஷன் செய்யப்பட்டது. அவர் தாகமெடுப்பதாகக் கூறி கொஞ்சம் பாலும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அதை அவர் சிறிது சிறிதாக விழுங்கினார். திடீரென தாமே ஒரு பக்கமாகத் திரும்பிப் படுத்துத் தமது கைகளால் முகத்தை மூடிக் கொண்டார். அச்சமயத்தில் தான் அவரது ஆத்மா உடலைவிட்டுப் பிரிய வாரம்பித்தது. அவரருகில் சிஸ்ரூஷை செய்துக்கொண்டிருந்த தமையனாரும், தமக்கையும் ஸ்ரீ கிட்டப்பா தூங்குகிறாரென நினைத்து அவரைத் தொந்திரவு செய்யக்கூடாதென சும்மா விருந்தனர். அவர் இறந்துபோய் இருந்ததை வெகுநேரம் கழித்தே அவர்கள் உணர்ந்தனர்.

வீட்டு வாசலில் ஜனத்திரள்

இச்செய்தி காட்டுத்தீபோல் ஊரெங்கும் பரவ, உடனே ஆயிரக்கணக்கான ஜனங்கள் அலறியடித்துக் கொண்டு அவரது வீட்டுவாயிலில் வந்து குழுமினர். இச்செய்தியை ரயில்வே அதிகாரிகள் தென்னாடெங்கும் தந்தி மூலம் பரப்ப வெளியூர்களிலிருந்த ஸ்ரீமான் கிட்டப்பாவின் நண்பர்கள் சவத்தை தாங்கள் செங்கோட்டைக்கு வந்த பிறகே எடுக்க வேண்டுமென தந்தி மூலம் கேட்டுக் கொண்டனர். பிற்பகல் 3 –10 மணிக்கு இறந்தவரை மாலை 6 மணிக்கே எடுக்க நேரிட்டது. காரணம் அவரது வீடு அக்கிரகாரத்தில் இருப்பதுதான்.

முகத்தைக் காண ஆவல்

பிராம்மணர்களின் வழக்கப்படி அவரது சவம் பூராவாகத் துணியால் மூடப்பட்டது. வீட்டு வாயிலில் குழுமியிருந்த **ஜனங்கள் அவரது முகத்தைக் கடைசியாகப் பார்க்க மிக்க ஆவல் கொண்டனர்.** எனினும் அவர்களின் எண்ணம் ஈடேறவில்லை. பிறகு சவம் ஸ்மசானத்திற்கு எடுத்துக் செல்லப்பட ஜனங்கள் அதைத் தொடர்ந்து சென்றனர். அச்சமயம் ஜனங்கள் அவரது முகத்தைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். ஜனங்களனைவரும் அவரது குணாதிசியங்களைப் பற்றி புகழ்ந்து கொண்டே கண்ணீரும் கம்பலையுமாய் நின்றனர். ரோஜா மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்த அவரது புன்சிரிப்பு தவழ்ந்த முகத்தைக் கண்டு அவர் இறந்தது உண்மைதானேவென அனைவரும் சந்தேகித்தனர்.

எங்கும் துக்கம்

தேசத்தின் நாலாபாகங்களிலிருந்தும் தேசீயவாதிகள், ஜமீன்தார்கள், சங்கீத வித்வான்கள், நடிகர்கள், வியாபாரிகள், மாணவர்கள் முதலியவர்களிடமிருந்து அனுதாபச் செய்திகள் வந்து குவிந்தன. அவருடன் நெருங்கிப் பழகிய நண்பர்களும், உறவினர்களும், சங்கீத வித்வான்களும் செங்கோட்டைக்கு ஓடோடியும் வந்து அழுது புலம்பினர். ஸ்ரீமான் கிட்டப்பா தமக்கு மரணம் சம்பவிக்காதெனத் திடமான அபிப்பிராயமுடையவராகயிருந்தபடியால் குடும்ப விஷயமாக யாதொரு ஏற்பாட்டையும் செய்யவில்லை. அவருக்கு புத்திர சந்தானமில்லாதபடியால் அவரது தமையனாரான கவாய் காசி அய்யர் தகனக்கிரியையும், மூத்த சகோதரரான ஸ்ரீமான் எஸ்.ஜி.சுப்பய்யர் மற்ற கருமங்களையும் செய்து முடித்தனர்.

எங்கும் அனுதாபம்

ஸ்ரீமான் கிட்டப்பா இறந்த செய்தியைக் கேட்டு சென்னை மாகாணத்திலுள்ளவர்கள் திடுக்கிட்டுப் போயினர். பல இடங்களில் பொதுகூட்டங்கள் கூட்டப்பட்டு அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சில இடங்களில் வாலிபர்கள் ஸ்ரீ கிட்டப்பாவின் படத்துடன் ஊர்வலமாக வந்தனர். செங்கோட்டை ஸ்ரீமூலம் வாசகசாலையில் அவரது திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டது. திருநெல்வேலி ஹிந்து கலாசாலை, திருப்பூர், சென்னை முதலிய விடங்களிலுள்ள வாலிபர் சங்கங்கள் முதலியனவைகளும் அனுதாபம் தெரிவித்துக்கொண்டன. சென்னை ராஜதானியிலுள்ள சகல பத்திரிக்கைகளும் ஸ்ரீ கிட்டப்பாவின் மரணத்தைக் குறித்து வருந்தின. பாமர ஜனங்கள் பெரிதும் துக்கித்தனர். நடிகர்களும், சங்கீத வித்வான்களும் இவருக்குத் தக்க ஞாபகச் சின்ன மேற்படுத்த வேண்டுமென தீர்மானித்தனர். ஸ்ரீ கிட்டப்பா பேசும் படக்காட்சியில் நடித்து, அவரது உருவத்தை நாம் சதா பார்த்து மகிழும்படி செய்யாமற்போய்விட்டாரே என்று பலர் ஏங்குகின்றனர். அவர் இறந்ததினால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்வதென்பது முடியாத காரியம், ஸ்ரீ கிட்டப்பா 77 வயதுடைய தகப்பனாரையும் மூன்று சகோதரர்களையும், ஒரு சகோதரியையும், 18 வயதுள்ள மனைவியையும், ஏராளமான பந்துக்களையும், நண்பர்களையும் விட்டுப் பிரிந்து விட்டார்.

ஸ்ரீ கிட்டப்பாவின் சேவை

பரம்பரையாக சங்கீத ஞானமுள்ளதோர் குடும்பத்திலுள்ள ஸ்ரீமதி மீனாட்சியம்மாளுக்குப் புத்திரராக பிறந்தமையால், ஸ்ரீமான் கிட்டப்பாவுக்கு இளமையிலலேயே அபரிதமான சங்கீதஞானமும் அதற்கேற்றால்போல் இனிய சாரீரமும் அமைந்திருந்தது. மேலும் அவர் எடுத்துக்கொண்ட அக்கரையும், முயற்சியுமே அவரை ஓர் உன்னத நிலைக்குக் கொண்டு வந்தன. எந்நாடகம் நடிப்பதென்றாலும் ஒத்திகை என்பதே அவருக்கு அவசியமில்லை. அவர் பாடவேண்டிய பாட்டுக்கள் எழுதப்பட்டு, அதை அவர் தம் கண்ணால் கண்டாலே போதும், உடனே பசு மரத்தாணிபோல் அவர் மனதில் பதிந்துவிடும். தமக்குத் தோன்றிய வசனத்தை மிகவும் பொருத்தமாக, இடத்திற்கு தகுந்தவாறு கணீர் கணீரென ஸ்பஷ்டமாகச் சொல்லும் சக்தி வாய்ந்தவர். தம்முடன் வேடம் பூண்டு நடிப்பவர்கள் எத்தகைய சாமர்த்தியத்துடன் சரமாரியாகப் பேசினாலும் சரி, தமது கற்பனை சக்தியினாலும், வெடுக்கென வெட்டிப் பேசும் திறமையினாலும், இரண்டே வார்த்தைகளில் அவர்களை அடக்கிவிடுவார். தாம் எடுத்துக்கொள்ளும் பாத்திரத்திற்குத் தகுந்தவாறு நடித்து உணர்ச்சியை உண்டாக்குவதில் வெகு சமர்த்தர். ஐந்து கட்டையிலும் சில சமயங்களில் 6 கட்டையிலும்கூட தங்கு தடங்கலின்றி பாடுவதில் வெகு சமர்த்தர். சிறதுகூட சிரமமில்லாமல் நன்றாக உழைத்து சபையினரைக் களிக்கச் செய்ய வேண்டுமென்ற அவாவுடையவர். நாடகத்துடன் ஸ்ங்கீதத்தைப் பிணைத்து தியாகராஜ கீர்த்தனைகள், தீட்சிதர் கீர்த்தனைகள், பிரபல தமிழ் வித்வான்களால் இயற்றப்பட்ட பதஸாஹித்யங்கள் முதலியவைகளைக் கேட்டு ஆனந்திக்க வேண்டுமென்ற எண்ணத்தை பாமர ஜனங்களுக்கு உண்டு பண்ணியவர் இவரேயாகும். இவரது பாட்டுகள் விறுவிறுப்புடன் கூடியவை; கவர்ச்சியுடையவை.

திறமை கண்டு வியப்புற்றவர்கள்

ஸ்ரீமான் கிட்டப்பாவின் பாட்டில், பிரமை உடைய தென்னிந்திய சங்கீத வித்வான்களில் முக்கியமானவர்கள் ஸ்ரீமான்கள் முத்தையா பாகவதர், பிடில் கோவிந்தசாமிப் பிள்ளை, மகாராஜபுரம் விசுவனாதய்யர், அரியக்குடி

ராமானுஜய்யர், காரைக்குடி வீணா சகோதரர்கள், காஞ்சிபுரம் நயினாப்பிள்ளை, தட்சிணாமூர்த்தி பிள்ளை, மைசூர் பிடாரம் கிருஷ்ணப்பா, சௌடய்யா, மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யர், நாதசுரக்காரர்களான மதுரை பொன்னுசாமிப்பிள்ளை, திருவாடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, வீரசாமி பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணியம் முதலானவர்கள். இவர்களெல்லாம் இவரை ஓர் உயர்ந்த சங்கீத வித்வனாகவே மதித்து வந்தனர். இவரது சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தமடைவதற்காகவே இவர்கள் இவரை அடிக்கடி சந்தித்து நேரில் பாடச் சொல்லிக் கேட்டு ஆனந்தமடைவதுண்டு. சென்னை கவர்னர்களாயிருந்த லார்டு வில்லிங்டன், லார்டு கோஷன் பிரபுக்களும், இவரது சங்கீத ஞானத்தைக் கண்டு வியப்படைந்து இவருக்குத் தங்கப் பதக்கங்கள் பரிசளித்து ஆசி கூறியிருக்கின்றனர்.

ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் பற்று

ஸ்ரீ கிட்டப்பாவுக்கு கர்நாடக சங்கீதத்தில் எவ்வளவு பற்றிருந்ததோ அவ்வளவு பற்று ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் இருந்து வந்தது. வடதேசத்திய சங்கீத வித்வான்களின் பாட்டுக்களை ரிக்காடு மூலம் அடிக்கடி கேட்டுஆனந்திப்பார். தமது சோதரரும், சிறந்த தமிழ் வித்வானுமான ஸ்ரீமான் எஸ்.ஜி.செல்லப்பா அய்யரின் உதவியினால் ஹிந்துஸ்தானி மெட்டிலே அநேக தமிழ்ப்பாட்டுக்களை தாமே பாடிவந்தார். இத்தகைய பாட்டுக்கள் ஸ்ரீ கிருஷ்ணலீலா, தசாவதாரம் முதலிய பிரபல நாடகங்களிலும் அமைந்திருக்கின்றன. அவைகளில் சிலவற்றை ரிகார்டுகளிலும் கொடுத்திருக்கிறார்கள். “மகாதேவபரசிவா” என்ற பாட்டு அவைகளிலொன்றாகும். ரீவா சமஸ்தான சங்கீத வித்வானும், வட இந்திய அரசர்களால் சன்மானிக்கப்பட்டவருமான ப்ரொபெஸர் கணேசப்பிரசாத் அவர்கள் 1931 ம் ஆண்டு தென்னாட்டுக்கு விஜயம் செய்து தம்மிடமிருந்த பணத்தையெல்லாம் செலவழித்துவிட்டு திருவனந்தபுரத்தில் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் நிலைமையில், ஸ்ரீமான் கிட்டப்பா அவரைத் தம்மிடம் வரவழைத்து பாடச் சொல்லி, அவரது அபூர்வமான சங்கீத ஞானத்தைக் கண்டு அவருக்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களை சந்தோஷத்துடன் செலவு

செய்து, தம்முடனேயே அவரை அநேக மாதங்கள் வரை வைத்துக்கொண்டிருந்து பிறகு அவரது சொந்த ஊராகிய பிஷாவருக்கு அனுப்பி வைத்தார்.

இவரது தேசபக்தி

இவருக்கு இயற்கையாகவே தேசபக்தி உண்டு. எனினும் என் மூலமாக இவர் ராஜ்ய விஷயங்களையும், தேசீய வீரர்களின் சரித்திரங்களையும் அறிந்து கொண்டார். 1921 ஆம் வருடத்திலேயே ஸ்ரீமான் கிட்டப்பா கதர் உடுத்த ஆரம்பித்தார். பஞ்சாப் படுகொலை நிதிக்காக 1919ம் வருடம் ஸர்.எஸ்.சுப்பிரமணிய அய்யர் முன்னிலையில் சென்னை ராயல் தியேட்டரில் சிறுத்தொண்டனாக நடித்தும், கோகலே மண்டபத்தில் சங்கீதகச்சேரி வைத்தும், அதில் கிடைத்த வசூலைக் கொடுத்துதவினார். 1921ம் வருஷம் திலகர் சுயராஜ்ய நிதிக்காகவும், 1923ஆம் ஆண்டில் மதுரையில் கதர் நிதிக்காகவும், 1924ம் ஆண்டிலே திருநெல்வேலியில் தேசபந்துதாஸ் அவர்களிடம் சுயராஜ்யக் கட்சிக்காகவும், 1930ம் ஆண்டிலே சென்னை உப்பு சத்தியாக்கிரகத்திற்காகவும் ஏராளமான பண உதவி செய்தார். 1930ம் வருடம் சென்னை உப்பு சத்தியாகிரகத்திற்காக தமது பவுண்டன் பேனாவைக் கொடுக்க, அது திருவல்லிக்கேணி கடற்கரைப் பொதுக்கூட்டத்தில் ஏலத்தில் விடப்பட்டதில் ரூ.50 கிடைத்தது.

அவருக்கு அறிமுகமில்லாத தேசீயத் தலைவர்கள் அநேகமாக ஒருவரும் கிடையாதெனலாம். ஆழ்ந்த தேசபக்தியுடையவர். 1924ம்ஆண்டிலே அகில பாரத சர்க்கார் சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது தாமே கையால் நூல் நூற்று அதை மகாத்மா காந்திக்கு அனுப்பி அச்சங்கத்தில் தாமும் ஓர் அங்கத்தினரானார். மகாத்மா காந்தியடிகளிடமும், ஸ்ரீமான்கள் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், தேவதாஸ் காந்தி, வ.வெ.சு.அய்யர், சுப்பிரமணிய பாரதியார் முதலியவர்களிடமும் அளவற்ற அன்புடையவர், பண்டிகைக் காலங்களில் தமது நண்பர்களுக்கும், வேலையாட்களுக்கும் கதரையே வாங்கி வழங்கி வந்தார். மகாத்மா காந்தியடிகளை தமது கிரகத்தில் ஒரு நாளாவது தங்கும்படி செய்து, அவரை உபசரித்து, அவர் முன்னிலையில் பாடி, அம்மஹானிடம்

ஆசிபெறவேண்டுமென்கிற அவா ஸ்ரீமான் கிட்டப்பாவுக்கு இருந்து வந்தது. அவருக்கு பாரதியார் கீதங்கள் நன்றாகத் தெரியும்.

தர்மங்கள்

ஸ்ரீ ரங்கநாதர் கோயிலில் பிரதி வருடமும் மார்கழி மாதம் மோஹினி அவதார உத்சவக் கட்டளை ஸ்ரீமான் கிட்டப்பாவினுடையதே. அதற்காக அவர் ரூ,.3,000 மூலதமனாக வைத்திருக்கிறார். காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி, மைசூர் ராமமந்திரம் முதலிய இடங்களிலுள்ள தியாகராஜ சுவாமி சங்கீத சபைகளுக்கும், திருநெல்வேலி ஹிந்து கலாசலைக்கும், செங்கோட்டை ஸ்ரீமூலம் வாசகசாலைக்கும் ஆயிரக்கணக்காக பண உதவி செய்திருக்கிறார்.

தோற்றம்

அகன்ற நெற்றியும், பரந்த அழகான கண்களையும், நடுத்தரமான மூக்கையும் உடையவர். அவரது பல் வரிசைகள் பார்ப்பதற்கு மிக்க அழகாயிருக்கும். அவர் சிரிக்கும்போது மற்றவர்கள் மனதை எளிதில் வசியப்படுத்தி விடுவார். விரிந்த மார்பையும் தடித்த தோளையும் கட்டுமஸ்தான திரேகத்தையும் உடையவர். இவர் நாடக மேடையில் எவ்வேடத்தில் தோன்றினாலும் அவ்வேடத்திற்க்குத் தகுந்தாற்போலிருக்குமாறு இவரது திரேகம் இயற்கையாகவே அமைந்திருக்கிறது.

இவரது குணாதிசயங்கள்

மகாமேதாவி, தாராள சிந்தனையும், உயர்ந்த நோக்கமும் இவருக்குண்டு. கூர்மையான புத்தியும், அபாரமான ஞாபக சக்தியும் உள்ளவர். பெருந்தன்மையான சுபாவமுடையவர். சிறந்த வீரர், பயங்கொள்ளித்தனம் என்பதே இவரிடம் கிடையாது. பெரிய செலவாளி, நூறு ரூபாய் நோட்டுகளை வெறுங் காகிதமாக எண்ணுபவர். இவர் 1929 முதல் 1933 வரை இந்நான்கு வருடங்களில் சுமார் 3 லட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறார். எவ்வளவு சம்பாதித்தாலும் பணத்தை தமது கையால் தொட்டதை நான் கண்டதே கிடையாது. ஆயிரக்கணக்கான ரூபாயை ஒருவரிடம் ஒப்படைத்து அன்னாரை கொண்டே செலவு செய்யச் சொல்பவர். வரவு செலவு கேட்பது என்பதேயில்லை.

யாராவதொருவர் பணத்திற்காக அவஸ்தைப்பட்டு கண்ணீர் விடுவதைக் கண்டால் சகிக்கமாட்டார். அத்தகையோருக்கு வேண்டும் தொகை எதுவாயிருந்தாலும் அதைக் கொடுத்துதவத் தவறமாட்டார். சமயோசிதமாக நடந்து கொள்ளும் திறமையுடையவர். மிக்க பொறுமைசாலி, எனினும் சில சமயங்களில் கோடை காலத்து இடிபோல இவருக்கும் கோபம் வருவதுண்டு. ஆனால் மின்னல் எவ்வளவு வேகமாகத் தோன்றி மறைகின்றதோ அத்துனை வேகமாகவே வார்த்தைகளை மழை பொழிவதுபோல் பொழிந்து மனம் குளிரும்படி செய்வார். "நீர்க்கிழிபோல் மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்" என்ற பழமொழி இவர் விஷயத்தில் மிக்க பொருத்தமானது.

எவரிடத்திலாவது தாம் தப்பிதமாக நடந்து கொண்டு, பிறகு அது தப்பிதமென தமக்குத் தெரிந்தால், அவர் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளத் தயங்கவே மாட்டார். தாம் வித்தியாசமாய் நடந்து கொண்டதற்காக, அவர் பல சமயங்களில் கண்ணீரும் சிந்துவதுண்டு. அவரை ஒருவரும் எளிதில் ஏமாற்ற முடியாது. யார் என்ன சொன்னாலும் உடனே அதை நம்பிவிடமாட்டார். எவ்விஷயத்தையும் தாமே ஆர தீர யோசித்து ஓர் முடிவுக்கு வருவார். சமையல் செய்வதில் தேர்ச்சி பெற்றவர். எவரும் பசியால் வாடி வதங்காமல் வயிறார உண்ணவேண்டுமென்பதே அவரது எண்ணம். தமது வீட்டை அவர் பல வருடகாலமாக ஓர் அன்ன சத்திரமாகவே நடத்தி வந்தார். தாமே அனைவருக்கும் பறிமாறி சாப்பிடுபவர்களின் முன்னால் உட்கார்ந்து கொண்டு அவர்களை உபசரிப்பதில் மிக்கப் பரியமுடையவர். குழந்தைகளிடத்தில் அளவற்ற அன்புடையவர், ரசிகர்; எப்போதும் விகடமாகவே பேசுவார். சோம்பேறித்தனமென்பதே அவரிடம் கிடையாது; மிக்க சுறு சுறுப்புடையவர். ஏதாவதொரு காரியத்தைத் துவக்கினால் அதை வெற்றிகரமாக முடிக்கும் வரை அவருக்குத் தூக்கம் வராது.

எப்போதும் வெண்மையான உடுப்புகளையே அணிய விரும்புபவர். சுதந்தர உணர்ச்சியுள்ளவர், அன்புக்குக் கட்டுப்படுவாரே ஒழிய அதிகாரத்துக்கு அடங்கி நடப்பவரல்ல. பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிக்காவிடினும் அவர் தமது சொந்த முயற்சியினாலும் புத்தி கூர்மையினாலும் ஆங்கிலம்,

தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளில் படிக்கவும் எழுதவும் பேசவும் தெரிந்து கொண்டார். பெரிய மனிதர்களுடன் எவ்வாறு பழகவேண்டுமென்பதை நன்குணர்ந்தவர். சிறந்த தெய்வபக்தியுள்ளவர். மதத்தில் பற்றுள்ளவரேனும் உயர்வு தாழ்வு, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் பாராட்டுவது அவருக்கு பிடிக்காது. வேலைக்காரர்களை வேலைக்காரர்களாக நடத்தாமல் நண்பர்களைப்போல் நடத்துபவர். விரோதிகளையும் உபசரிப்பவர். ஒருவன் தமக்கு என்ன தீங்கிழைத்தாலும் அதை உடனே மறந்து உபகாரம் செய்யும் இயல்புடையவர். இவருக்கு பெரியதோர் அந்தஸ்தும், கியாதியும், செல்வமும், செல்வாக்கும் ஏற்பட்டபோதிலும் கர்வம் என்பது கடுகளவும் இவரிடம் கிடையாது.

கிராமபோன் ரிக்கார்டுகள் கொடுக்க உடன்பட்டது

1924ஆம் ஆண்டிலேயே ஒரு கிராமபோன் கம்பெனி ஏஜெண்டு பம்பாயிலிருந்து சென்னைக்கு வந்து இவரது பாட்டுகளை ரிக்காடு கொடுக்கும்படி இவரை வேண்டினார். அப்போது ஸ்ரீ கிட்டப்பா தமது பாட்டுகளை ரிக்கார்டில் கொடுப்பது தவறென நினைத்து கொடுக்க மறுத்துவிட்டார். எனினும் 1931ம் ஆண்டிலே முன்னிருந்த அபிப்பிராயம் மாறுபட, சென்னை கொலம்பியா கிராமபோன் கம்பெனியாருக்கு ரிகார்டு கொடுக்கச் சம்மதித்தார். ஜனங்கள் ஏராளமான இவரது ரிக்காடுகளை வாங்கத் தலைப்பட்டனர். அதனால் மறுபடியும் கொலம்பியா கம்பெனியார் இன்னும் சில பாடல்களை ரிக்காடு செய்யும்படி ஸ்ரீமான் கிட்டப்பாவை கேட்டுக்கொள்ள அதற்கும் இவர் சம்மதியளித்தார். இவைகளில் கீர்த்தனைகளும் பதங்களும், நாடக உருப்படிகளும் அடங்கியிருக்கின்றன.

செங்கோட்டை கண்டிராத உபநயனச் சிறப்பு

1932 ஆம் ஆண்டு தமது சோதரி ஸ்ரீமதி பிச்சம்மாளின் புதல்வனான சிர.பி.நடராஜனுக்கும், தமது மூத்ததமையனார் ஸ்ரீமான் அப்பாத்துரை அய்யரின் குமாரனாகிய சிர.கே. கங்காதரனுக்கும் ஸ்ரீகிட்டப்பா செங்கோட்டையில் மிகவும் சிறப்பாக உபநயனம் செய்து வைத்தார். இதற்காக ரூ.14000 வரை செலவு செய்தார். பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு

ஒரு வாரம் வரை விருந்தளித்தார். பெரிய பெரிய சங்கீத வித்வான்களும் பிரமுகர்களும் விஜயம் செய்தனர்.

அமெரிக்கர் பரவசமாதல்

நாடக மேடையில் நாட்டஞ் செலுத்தாது, ஸங்கீதக் கச்சேரிகள் நடத்துவதில் ஸ்ரீமான் கிட்டப்பா முழுவதும் ஈடுபட்டிருந்ததால் இன்னும் அதிக மகிமையுடன் பிரகாசித்திருப்பார் என்பது ஒரு சாராரின் துணிபு. நடிப்பு எதுவுமின்றி ஒரு சில ஸங்கீத கச்சேரிகள் மட்டும் அவர் நடத்தும்போது அவரது ஸங்கீதத்தைக் கேட்டு ஆனந்தித்தவர்கள் இதன் உண்மையை ஒப்புக்கொண்டே தீருவர். அலைகடலுக்கப்பாலுள்ள தேசத்தவர்களும் அவரது ஸங்கீதத் திறமையை மெச்சியதுண்டு.

1922ம் ஆண்டு டிசம்பர் அமெரிக்கா போஸ்டன் நகரைச் சேர்ந்த பிரசித்திபெற்ற ஸங்கீதக்காரர்களாகிய மிஸ்டர் ஈச்சிம் என்பவரும், அவரது மனைவியும் திருச்சிக்கு விஜயம் செய்த காலத்தில், அவர்களது முன்னிலையில் ரசிக ரஞ் சன சபையினராதரவில் ஸ்ரீமான் கிட்டப்பா தமது சங்கீதத் திறமையைக் காட்டினார். அமெரிக்கர்களிருவரும் அவரது பாட்டுகளைக் கேட்டுப் பெரிதும் பரவசமடைந்தனர் என்ற செய்தியை அக்காலத்தில் பத்திரிக்கைகள் பிரசுரித்தன. இன்னொரு சம்பவமும் குறிப்பிடத்தக்கதாகும்.

1924ஆம் ஆண்டில் சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் விடுதியின் ஆதரவில் நடைபெற்ற விசேஷ ஸரஸ்வதி பூஜையின்போது ஸ்ரீமான் கிட்டப்பா தமது அரும் பெரும் ஸங்கீத வன்மையைக்காட்டி, சபையோரை மகிழ்வித்தது நேற்றுதான் நடந்தது போலிருக்கின்றது.

ஜோதியின் மறைவு

சரி, ஒரிருபது வருஷ காலம் ஸங்கீத உலகையும், நாடக மேடையையும் பளிச்சிட்டுக்கொண்டிருந்த ஒரு ஜோதி இப்பொழுது மறைந்துவிட்டது! ஸ்ரீமான் கிட்டப்பா தமது இனிய சாரீரத்தால் இம்மண்ணுலகில் வாழும் மக்களை மட்டும் களிப்பித்துக்கொண்டிருப்பது கண்டு தேவர்களும், பொறாமை கொண்டனரோ? ஆதலால் தான் அவர்கள் தாங்களும் அவரது

அருமையான ஸங்கீதத்தைக் கேட்டு இன்புற வேண்டி அவரை விரைவில் தங்களிடம் அழைத்துக் கொண்டனர் போலும்!

எது எப்படியாயிருந்தாலும் திறமையும், சாமர்த்தியமும் மிகுந்தவர்களுக்கு இவ்வுலகில் இடமில்லை என்பதைமட்டும் நாம் பன்னெடு காலமாகப் பார்த்து வருகிறோம். சரித்திரத்தைச் சற்றுப் புரட்டிப் பாருங்கள்! தேசியக் கவிராஜ சிங்கமெனத் திகழ்ந்து நெஞ்சையள்ளும் தமது ஆவேசப் பாட்டுகளினால் நம்மிடையே விடுதலை எழுச்சியை உண்டுபண்ணி, ஸவதந்திர உணர்ச்சியைத் தட்டியெழுப்பிய பாரதியார் தமது முப்பதாவது (39வயதுஎன்பதுதானசரியாகும்) *வயதிலேயே நம்மை விட்டுப் பிரிந்து விடவில்லையா? மக்களின் மனதை மகிழ்ச்சி வெள்ளத்திலாழ்த்தி, காதில் இன்பத்தேன் ஊறுமாறுப்பாடிப் புகழ் எய்திய பாலன் புஷ்பவனத்தை நாம் இளம் பருவத்திலேயே இழக்கவில்லையா? ஆகவே அதேகதிக்கு நமது கிட்டப்பாவும் ஆளாகி, நம்மை விட்டுப்பிரிந்து விட்டார்.*

நிற்க, சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற நடிகர் மகாநாட்டில் இம்மாகணத்தைச் சேர்ந்த நடிகர்களெல்லாம் ஒன்றுகூடி ஸ்ரீயுத கிட்டப்பாவின் மரணத்திற்காக அனுதாபம் காட்டியிருப்பதன் மூலம் தங்கள் கடமையை நிறைவேற்றி வைத்திருக்கின்றனர். ஸங்கீத மகாநாடுகளும் அனுதாபம் காட்டியிருக்கின்றன. இம்மாநாடுகளில் ஈடுபட்ட ஸ்ரீமான் கிட்டப்பாவின் அபிமானிகளும், அன்பர்களும், ஏனையோரும் இவ்வனுதாபங்களுடன் நின்றுவிடாமல் உடனே அவரது ஞாபகத்தை நிலைநாட்ட உருவான வழி தேடுவரென நம்புகிறேன். அவரது ஆத்மா சாந்தியடையுமாக!

அக்காலத்தில் இசை உலகச் சக்கரவர்த்தியாக விளங்கிய எஸ்.ஜி.கிட்டப்பா போன்ற மேதைகளின் பாடல்கள் இசைத் தட்டில்தான் பதிவாயின. பல்லாயிரக்கணக்கில் விற்பனை ஆயின.

'ஹிஸ்மாஸ்டர் வாய்ஸ்','கொலம்பியா' ஒடியன் முதலியன இசைத்தட்டு வெளியிட்ட நிறுவனங்கள். அவை இன்று இருந்த இடம் தெரியவில்லை. (அரங்க சீனிவாசன், நினைவு அலைகள், சென்னை, 1996, பக்கம் 182)

கன்னையா நாடக்குழுவில் 1928இல் இசைச்சக்கரவர்த்தி சக்கரவர்த்தினிகளாகிய கிட்டப்பா – சுந்தராம்பாள் ஆகிய இருவரும் மாதச் சம்பளத்தில் பணியாற்றினர்.

இரங்கூன் தலைநகர் இருப்பூர் நிலையம் எதிரே உள்ள பெரிய தியேட்டரில் தசாவதாசரம் நாடகம். அதில் ஒரு பகுதியாக இராமாயாணம், அதில் இராமன் வேடத்தில் கிட்டப்பா. இராமன் காட்டிற்கு போன பின்பு பரதன் இராமனைத் திரும்ப அழைக்கக் காட்டுக்குச் செல்வான். அப்போது கிட்டப்பா பாடுவார்.

தசரத ராஜா குமாரா
சுகுமாரா
ரகுவீரா
உபகாரா

இது பாட்டின் பல்லவி

இசை பெருகிய ரகுவம்ச சிலாக்யம்
எழில் பிதுர வாக்ய பரி பாலன யோக்யம்
வசை தவிர அதனால் வரும் பெரும் பாக்யம்
மனத்தில் உணர் தம்பி பரதா
தவ விரதா
சுப சரிதா
அருள் வரதா

இது சரணங்களில் ஒன்று.

இதைக் கிட்டப்பா பாடும்போது தியேட்டரில் ஒரே அமைதி நிலவும். அந்த இசை மகுடி கேட்ட அனைவரும் பாம்புகளாகி தலையாட்டத் தொடங்கி விடுவர்.

அவருடைய குரல் கிராமபோனில் இசைத்தட்டில் பதிவானது. இன்று கேசட்டில் பெயர்க்கப்பட்டு எப்போதாவது வானொலியில் ஒலிபரப்பாகின்றது. இப்போதும் அந்தப்பாடல் நம்மை மெய்மறக்க வைக்கின்றது.

அந்த இசைக்கடல் முப்பது வயதுவரை கூட உலகில்

உலாவர இயலாமல் போனது. இசையின் இயற்கையின் துரதிர்ஷ்டமே.

1952இல் ந.சிதம்பர சுப்பிரமணியன் இதயநாதம் எனும் நாவலைத் தந்தார். அது 2012இல் மறு பதிப்பாக வந்துள்ளது.

அதில் வரும் கிருஷ்ணபாகவதர் தான் எஸ்.ஜி.கிட்டப்பா. அதில் வரும் பாலம்மாள் தான் கே.பி.சுந்தராம்பாள்.

தந்தை பெரியார்

இசைக்கடலை எப்படி மறப்பது? திரு.எஸ்.எஸ்.வாசனின் ஆனந்தவிகடன் ஒரு முறை எஸ்.ஜி.கிட்டப்பாவின் துணைவியார் கே.பி.சுந்தராம்பாளை சாதிப்பெயர் சொல்லி கேவலப்படுத்தியபோது தந்தை பெரியார் ஒருவர்தான் ஆனந்த விகடனை அப்போது கண்டித்தார். கே.பி.சுந்தராம்பாளை ஆதரித்தார்.

சங்கீதச் சிகரம் செங்கோட்டை கிட்டப்பாவை நினைப்பவர்கள் ஒரு சிலர் இருக்கலாம். ஆனால் இசை உலகம் அவரை மறக்காது; மறக்கவிடக்கூடாது என்பதற்காகவே இச்சிறு நூல். எஸ்.ஜி.கிட்டப்பாவின் புகழ் மங்காமலிருக்க செங்கோட்டையில் பிறந்த எளியேனால் தொகுக்கப்பட்ட இந்நூல் சிறு துளியேனும் பலனளித்தால் அதுவே எனக்குப் போதுமானது!

கொலம்பியா
கிராம்போன் சங்கீதம்
20 பாகங்களடங்கியது.
8
நாகை, சரவண முதலியார்
திருவொற்றியூர் சென்னை.

K. B. சுந்தராம்பாள் S. G. கிட்டப்பா
S.V. சுப்பையாபாகவதர் பபூன் N.S. ஷண்முகம்
புதியபிளேட் சங்கீதம்.

கொலம்பியா, மாஸ்டர்வாய்ஸ் & ரீகல் கம்பெனிகளின்,
புதிய பிளேட் பாடல்கள் அடங்கியது.

(8 பாகம் அடங்கியது)

V. கருப்பண பிள்ளை,
விலை] புக்ஷாப், புதுமண்டபம், மதுரை. [அண 6.

ஸ்ரீயான்

எஸ். ஜி. கிட்டப்பா

அவரது ஜீவிய சரித்திரமும்.

ஆக்கூர் அனந்தாச்சாரி எழுதியது.

காபிரைட்] 1934 [விலை அணா 2.



'கிட்டப்பா' மார்க் No. 1

சிவபுரி புகையிலை &



சாருள் சீவல்

குணத்தில் சிறந்தது.

ஒரு முறை உபயோகித்துவிட்டால்
மரு முறை இதையேவிரும்புவீர்கள் என்பதில்
சந்தேகமில்லை.

பிராஞ்ச்:
சென்னை.

A. D. சுல்தான் & Co.,
கும்பகோணம்.

இம்மாகாணம் முழுதும் சித்திவாய்ந்த
மிஸ்டர். S.G. கிட்டப்பா,
ஸ்ரீ ஆண்டாளாக நடிப்பார்
1928வரு அக்டோபர்மீ 15உ திங்கட்கிழமை
முதல் பிரதிதினமும் நடைபெறும்
ஸி. கன்னையா கம்பெனி
மதுரை பெரிய தகர கொட்டகையில்
ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம்
ஸ்ரீ ராமானுஜர் வைபவம்
பிரதி புதன், ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5 மணிக்கும்
மற்ற தினங்களில் இரவு 9 மணிக்கும்
டிக்கட் சார்ஜ்:— ரூ 3, 2, 1, அணா 8





கொலம்பியாஸ்டுடியோவில் ஒலிப்பதிவு கிட்டப்பாவுடன் ஹார்மோனியம் இசைப்பவர்:சகோதரர் எஸ்.ஜி.காசி

ஸ்ரீமான்கிட்டப்பா ஜீவிய சரித்திரம் எழுதிய ஆசிரியர்

ஆக்கூர் அனந்தாச்சாரி



ஸ்ரீகிட்டப்பாவின் திருவுருவப் படத்திற்கு
மாலை அணிவித்து வணங்கும்
கொடுமுடி கோகிலம் கே.பி.சுந்தராம்பாள்

'வரலாற்றியல் அறிஞர் '
செ.திவான்

'நேற்று-இன்று-நாளை' என்னும் வாழ்க்கைப் பயணம், வரலாறு இன்றி முழுமை பெறாது. அந்த வரலாற்றை ஆதாரத்துடனும் அர்ப்பணிப்புடனும் தருவதில் வல்லவர் 'வரலாற்றியல் அறிஞர்' செ.திவான். திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை அருகில் விசுவநாதபுரத்தில் 1954-ஆம் ஆண்டு பிறந்த இவர் 63 வயதைக் கடந்தபோதிலும் இன்றளவிலும் கல்வி பயின்று கொண்டிருக்கும் மாணவராகவே திகழ்கிறார்.

எழுதுவதற்காகவே வாழும் இவர் தனது வரலாற்று நூல்களுக்கான ஆதாரங்களைத் திரட்டுவதற்காக பெரும்பொருள் செலவு செய்தவராவார். தாமே எழுத்தாளராகவும் பதிப்பாளராகவும் விளங்குவது இவரது சிறப்பு.

இதுவரை வார-மாத இதழ்களிலும் தினசரிகளிலும் 1000-க்கும் மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்ளார். 100-க்கும் மேற்பட்ட நூல்களும் எழுதியுள்ளார். வ.உ.சிதம்பரனார் பற்றி மட்டும் 20 நூல்கள் எழுதியுள்ளார்.

இவரது முதல் நூல் 'தக்கலை ஞானமாமேதை தென்காசி பீர்முகம்மது அப்பாவின் சரிதையும் பாடல்களும்' என்பதாகும்.

18 வயதில் தொடங்கிய இவரது எழுத்துப்பணி இன்னும் அடுத்த வயதைக்கூட எட்டாமல் அதே இளமையுடன் இருப்பது மகிழ்ச்சியே. இவரது வேகம்,விவேகம், ஈடுபாடு ஆச்சரியப்படத்தக்கதாகும்.

இலக்கிய உலகம் பெற்ற வரம், 'வரலாற்றியல் அறிஞர் ' செ.திவான் என்று கூறுவது மிகையன்று...!

என்.ஏ.எஸ்.சிவகுமார்
(பதிப்பாளர்)



அட்சரம் பதிப்பகம்